

KALKI 22.11.98
ரூ. 4.50
கல்கி
பாபா-73

வர்த்தமானன்

வழங்கும்

முன்வெளியீட்டுத்திட்டம்

ஐம்பெருங்காப்பியங்கள்

1. சீவக சிந்தாமணி
2. சிலப்பதிகாரம்
3. மணிமேகலை
4. வளையாபதி
5. குண்டலகேசி

இவை அனைத்தும் மூலம் – உரையுடன் அமைந்தவை.

உரை ஆசிரியர் : **ஜெ. ஸ்ரீசந்திரன், M.A.,**

தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு), அ.மா. ஜெயின் கல்லூரி, சென்னை.

ஐம்பெருங்காப்பியங்கள் 5 தொகுதிகள் விலை	ரூ.500
முன் வெளியீட்டுச் சலுகை	ரூ.125
	ரூ.375
வர்த்தமானன் அறக்கட்டளை தரும் உதவித் தொகை	ரூ.125
சலுகை விலை	**ரூ.250**

சலுகை விலையான **ரூ.250** ஐ M.O.அல்லது D.D. மூலம் நவம்பர் 30க்குள் அனுப்புக. பணம் வந்த வரிசைப்படி நூல்கள் அனைத்தும் டிசம்பர் 31ஆம் தேதியிலிருந்து V.P.P.யில் அனுப்புகிறோம். தபால் செலவு ரூ.30 மட்டும் தபால்காரரிடம் செலுத்தி நூல்களைப் பெற்றுக் கொள்க.

பணம் அனுப்ப வேண்டிய முகவரி :

VARTHAMANAN PATHIPPAGAM


ARR Complex, 141, Usman Road, T. Nagar, Chennai - 600 017. (Near Panagal Park) ✆ : 825 7995

நேரில் பணம் செலுத்தி ரசீது பெற்றுச் செல்வோர் ரசீதில் குறிப்பிட்ட தேதியில் ரசீதினைக் கொடுத்து நூல்களைப் பெறலாம். எமது அலுவலக வேலை நேரம் : 9.30 a.m. - 6.30 p.m. (உணவு இடைவேளையின்றி). ஞாயிறு வார விடுமுறை. M.O./D.D. **அனுப்புவோர்க்கு, நூல்கள் தபால் மூலம் தான் அனுப்பப்படும். நேரில் தரப்படமாட்டாது. CHEQUE ஏற்கப்படமாட்டாது.**

விஜய் டீ.வி.யின் முக்கியப் பொறுப்பில் இருந்து வந்த ரபி பெர்னார்ட், இந்த வருடம் டிசம்பர் மாதத்துடன் அதிலிருந்து விலகிக் கொள்ளப் போகிறார். காரணம், விஜய் டீ.வி. கைமாறுகிறது. உடையார் வசமிருந்த கோல்டன் ஈகிள் டீ.வி.யை, பெங்களூர் மதுபான சாம்ராஜ்யாதிபதியான விஜய் மல்லய்யா வாங்கி, விஜய் டீ.வி.யாக்கினார்.

விஜய் டீ.வி.யிலிருந்து விலகுகிறார்

இப்போது, உலக அளவில் இயங்கி வரும், யுனைடெட் டெலிவிஷன் நிறுவனம் பதினெட்டரைக் கோடி ரூபாய் கொடுத்து விஜய் டீ.வி.யை வாங்கியுள்ளது. மேலும் எட்டுக் கோடி ரூபாய் வரை முதலீடு செய்யத் திட்டமிட்டுள்ளது. எம்.டீ.வி., 'சானல்



ரபி பெர்னார்ட்!

வீ மாதிரி முழுக்க முழுக்கப் பொழுதுபோக்குச் சானலாக, விஜய் டீ.வி.யை மாற்றப் போகிறார்களாம். இதுபற்றி ரபிபெர்னார்ட்டிடம் விசாரித்தோம் :

"சானலின் பெயர் விஜய் டீ.வி.தானா? இல்லை மாற்றப்படுமா?"

"பெயர் மாற்றப்பட வேண்டிய அவசியம் இல்லை!"

"நீங்கள் விலக வேண்டிய சூழ்நிலை ஏன் ஏற்பட்டது?"

"யூ.டீ.வி. என்பது இன்டர்நேஷனல் கம்பெனி. இந்தியாவில் சாடிலைட் சானல்கள் வருவதற்கு முன்பிருந்தே அது இயங்கி வருகிறது. இப்போது, தூர்தர்ஷனிலும், மற்ற சானல்களிலுமாக யூ.டீ.வி.யின் பதினெட்டுத் தொடர்கள் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கின்றன. விஜய் டீ.வி. கைமாறினாலும், எனக்கு இரண்டுவித வாய்ப்புகள் தரப்பட்டன. ஒன்று, இங்கேயே பணிபுரிவது; இரண்டாவது, வெளியிலிருந்து கொண்டு, விஜய் டீ.வி.க்கு நிகழ்ச்சிகள் தயாரிப்பது. நான் இரண்டாவது சாய்ஸை விரும்பினேன்."

"இனி, முழு மூச்சுடன் தயாரிப்புப் பணிகளில் இறங்கப் போகிறீர்களா?"

"ஆமாம்! ஏற்கெனவே, ஒரு தயாரிப்பு கம்பெனி வைத்திருந்தேன். அதற்கு மறுபடி உயிரூட்ட வேண்டியதுதான். டீ.வி. தொடர்கள் தயாரிக்கும் ஐடியாவும் உள்ளது. அது தவிர, நான் சற்றே விலகியிருந்த ஆசிரியர் பணி பக்கமும் திரும்பலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன். பத்திரிகைகளில் எழுதவும் ஆர்வமாக இருக்கிறேன். அடுத்த ஆண்டு ஆகஸ்டில் அமெரிக்கா சென்று படிக்க ஸ்காலர்ஷிப் கிடைத்துள்ளது."

"விஜய் டீ.வி. பொழுதுபோக்குச் சானலாகும் பட்சத்தில், உங்கள் அரசியல் பேட்டிகள் தொடருமா?"

"நம் ஊரில் மக்களுக்கு அதிகபட்ச பொழுதுபோக்கு அளிப்பவர்கள் அரசியல்வாதிகள்தானே? நோ ப்ராப்ளம்!" ●

— கௌதம்



ஏன் இந்தக் குரூரமான விளம்பரம்?

பெங்களூர் என்றாலே அதன் பசுமையும், புகழ் பெற்ற லால் பாக்கும், கப்பன் பார்க்கும்தான் எல்லாருடைய நினைவுக்கும் வரும். கடந்த ஒரு மாதமாக இந்த 'கப்பன் பார்க்'கைக் காப்பாற்றும்படி பொது மக்கள் நடத்தி வந்த போராட்டம் பற்றி பெங்களூர் பத்திரிகைகளில் தினமும் செய்திகள் வந்து கொண்டிருந்தன. அதன் ஒரு பகுதிதான் இந்த 'பயங்கர' விளம்பரம்.

காரணம் என்ன?

ஏற்கெனவே 334 ஏக்கர் பரப்பளவில் இருந்த 'கப்பன் பார்க்' காலப் போக்கில் கட்டடங்கள் கட்டப்பட்டு 330 ஏக்கராகக் குறைந்து விட்டது. மேலும் 34 ஏக்கரைக் கட்டடங்கள் கட்ட தற்போதைய கர்நாடக அரசு கையகப்படுத்திக் கொள்ளும் வகையில் வெளியிட்ட அறிக்கைதான் இந்தப் போராட்டத்திற்குக் காரணம்!

இது கர்நாடகா அரசு பூங்காக்கள் (பாதுகாப்பு) சட்டத்துக்குப் புறம்பானது அல்ல என்று அரசு சார்பில் வாதிட்ட போதிலும் பொது மக்கள் மற்றும் பத்திரிகைகளின் எதிர்ப்பு கடுமையாயிருக்கிறது. உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு இந்த விஷயம் பரபரப்புக்குள்ளாகி விட்டது!

'கப்பன் பார்க்'கை அரசு திடீரென பயன்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் என்ன? தலைமை அஞ்சலகம், தந்தி அலுவலகம், எஸ்பிசிஐ அலுவலகம், மியூசியம், அக்வேரியம், பாலர் பவன், ஆர்ட் காலரி, போலீஸ் ஸ்டேஷன், உயர்நீதி மன்றம், ஆயுள்காப்பீட்டுக் கழகம், பப்ளிக் லைப்ரரி, விதான் சவுதா, கவர்னர் மாளிகை பிரஸ் கிளப், சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி அனைத்தும் கப்பன் பார்க்கை ஒட்டியே அமைந்திருக்கின்றன.

தற்போதுள்ள சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை முன்னூறு. இவர்கள் வந்து தங்குவதற்கும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வந்து தங்குவதற்கும் தற்போதுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் உள்ள அறைகள் போதுமானதாக இல்லை. பெரும்பான்மையான அறைகள் பெண் உறுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும் பிற மாநிலத்திலிருந்து வரும் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் அறைகள் ஒதுக்க வேண்டியிருப்பதால் புதிய விடுதியொன்றைக் கட்டுவதற்காகத்தான் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது! 'பொது மக்கள் பயப்படுவது போல் எந்தவொரு மரத்தையும் நாங்கள் வெட்ட மாட்டோம்' என்று அரசு சொல்கிறது.


ஆனால் இந்த உத்தரவுக்கு எதிராகத் தொடர்ந்த வழக்கில், 'ஏற்கெனவே உள்ள விடுதிகளில் 730 அறைகள் இருக்கின்றன. ஒவ்வொரு அறையும் டி.வி. உட்பட அனைத்து வசதிகளும் கொண்டதாக இருக்கின்றன. ஆனால் இந்த அறைகளுக்குத் தினமும் நாலு ரூபாய் மட்டுமே வாடகை வசூலிக்கப்படுகிறது' என்று குறிப்பிட்டிருந்தார்கள்!

இதைத் தொடர்ந்து வழக்கை விசாரித்த கர்நாடக உயர்நீதிமன்றம், இந்த அறிவிப்பை மறுபரிசீலனை செய்யும்படி அரசுக்கும், இது தொடர்பாக இனி ஆர்ப்பாட்டம் நடத்தக் கூடாதென்று பொது மக்களுக்கும் ஆணை பிறப்பித்துள்ளது. தற்போதைக்கு இரு தரப்பினரையும் சமாதானப்படுத்தும் முயற்சியாக இந்தத் தீர்ப்பு அமைந்திருப்பதாகக் கருதுகிறார்கள்!

— அ. குமார்



உயர்ந்த ஜோக்ஸ்!
போட்டித் தொழிலதிபர் தாஜ்மகால் மாதிரி வீடு கட்டிட்டார். அதைவிட 'ஒஸ்தியா கட்டுவேன்'னு சவால் விட்டு 'வெங்காய' டிசைன்ல கட்டின வீடு இது!
வெறும் பத்து ஏக்கர் நிலத்தோடு அரசியலில் நுழைந்த
எதிர்கட்சித் தலைவர் இன்று குடும்பத்தோடு தினமும் மூன்று வேளை வெங்காய சாம்பார் சாப்பிடுமளவுக்கு உயர்ந்தது எப்படி? லஞ்ச லாவண்யத்தால் தானே!
சாதா ஊத்தப்பம் 15 ரூபா.. வெங்காய ஊத்தப்பம் 12 ரூபாயா?
சரியாப் பாருங்க, வெங்காய ஊத்தப்பம் 121 ரூபா!
நல்ல நேரம் பார்த்து வெங்காயக் கலர் சேலை கேக்கிறே பாரு...
சின்ன வெங்காயம் ரூ.1கி 100/-
பெரிய வெங்காயம் ரூ.1கி 99/-
இந்த காலத்தில பெரியவங்களுக்கு மதிப்பு இல்லாம போச்சு!


பாலாற்றிலே பாலா ஓடுது? தங்கபஸ்பத்தில தங்கமா இருக்கு? பின்னே, வெங்காய சாம்பாரிலே மட்டும் வெங்காயம் இருக்கணும்னு எதிர்பார்த்தா எப்படி?
வெங்காயம் கிடைக்கும்.
அறுபது கிராமும் முப்பது மில்லிகிராமும் இருக்கு!
எங்கப்பா இவங்களெல்லாம் ஓடுறாங்க?
அங்கே யாரு வீட்டிலேயோ வெங்காய சாம்பார் வைக்கிறாங்களாம், வாசனை புடிக்கத்தான் இப்படி ஓடுறாங்க!

அநீதி கிடைத்தது!


எல்லோரும் நிலத்தின் மீது வீடு கட்டுவார்கள்; தாணா 'கிஸன் நகர்' பகுதியிலுள்ள 'சாயிராஜ்' கட்டடத்தைக் கட்டியவர், நீரின் மீதே கட்டி விட்டார்! அதுவும் கழிவுநீர்! மூன்றே வயசான இந்தக் கட்டடத்தின் முதல் மூன்று 'ஃப்ளோர்'களும் பல உயிர்களுடன் அப்படியே புதைந்து விட்டன! இந்த அழகில் ஆறாவது மாடி கட்டும் வேலை வேறு ஜரூராக நடந்து கொண்டிருக்கிறது! இத்தனைக்கும் 'சாயிராஜ்' சட்ட விரோதமானது என்று டிமாலிஷன் நோட்டீசை, முனிசிபாலிடி மூன்று முறை கொடுத்திருக்கிறது; ஆனால் ஒவ்வொரு முறையும் கோர்ட், 'ஸ்டே ஆர்டர்' கொடுத்து விடுகிறதே!

ஏற்கெனவே, 'என்கௌண்டர்'களில் கிரிமினல்களின் இறப்புக்கு போலீசைக் குற்றம் சாட்டித் தீர்ப்பு! அடுத்து, மஹாராஷ்டிரத்தையே கலக்கிய 'ஜல்காவ் செக்ஸ் ஸ்காண்டலில்', தண்டிக்கப்பட வேண்டிய பண்டிட் 'ஸப்காலை', போதிய ஆதாரமில்லை என்ற அடிப்படையில் விடுதலை! இப்போது இது... சட்டத்தை ஏமாற்றுபவர்களுக்குச் சாதகமாய்த் தீர்ப்பு வழங்குபவர்கள் ஆதாரங்களை மறைக்க ஆவன செய்ய மாட்டார்களா என்ன?


ஆக்ரோ (டிஸ்) அட்வான்டேஜ் மஹாராஷ்ட்ரா

விவசாயத் துறையில் பல கோடி முதலீடுகளை ஈர்த்து, நம் விவசாயிகளைப் பலப்படுத்தும் நோக்கத்துடன், 'ஆக்ரோ – அட்வான்டேஜ் மஹாராஷ்ட்ரா' விழாவைப் பிரதமர் ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து கோரேகானில் நான்கு நாட்கள் கண்காட்சி. திரண்ட இரண்டு லட்சம் விவசாயிகளையும் சமாளிக்க முடியாமல் கண்காட்சியாளர்கள் விழி பிதுங்க, என்ன நடக்கிறது, எதற்கு நடக்கிறது என்பதே பலருக்குப் புரிபடவில்லை! புரிந்து கொண்ட ஒரு சிலரும், 'கஞ்சிக்கே வழியில்லாதபோது, பாதாம் கீர் செய்வது எப்படி என்று தெரிந்து கொள்வதால் என்ன பயன்?' என்கிறார்கள். வழக்கம் போல் சிவாஜி பார்க்கில் நடந்த விழாவில், 'விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியே தீருவோம்' என்றிருக்கிறார் தாக்கரே! பாவம், ஜோஷியும் முண்டேயும், மத்தியிலிருந்து உதவிக் கரம் நீட்டுவார் என்ற ஆசையில் மாற்றி மாற்றி வாஜ்பேயிக்கு குல்லாய் போட்டுப் பார்த்தார்கள் (ஆரஞ்சு நிறத்தில் பெரிசாய் தலையில் சுற்றியிருந்தாரே....!) ஊஹூம்! மனிதர் மசியவில்லை! இந்தியாவின் முன்னேற்றத்துக்கு கிஸானும் ஜவானும் கை கோத்துச் செல்ல வேண்டுமென்று ஆளுக்கொரு பெரிய தலைப்பாகையாய் சுற்றிவிட்டுச் சென்று விட்டாரே?

• வாஜ்பாய்



• முண்டே



மூழ்குமுன் காப்போம்!

படகில் ஓட்டையில்லை. சும்மா ஜிலு ஜிலுவென்று தண்ணீர் குஷிப்படுத்துகிறது என்று எத்தனை நேரத்துக்கு புருடா விட முடியும்? தினம் ஒரு கொலையிலிருந்து கணம் ஒரு கொலையாக மாறியபின்தான் அரசுக்கு உறைத்திருக்கிறது. இதற்கு முன் நடந்த ஹோட்டல்காரர், நகைக் கடைக்காரர், டாக்டர், வக்கீல்... கொலைகளாவது அவரவர் இருப்பிடங்களில் நிகழ்ந்தன. ஆனால் அப்துல் மக்தாபே என்ற ரியல் எஸ்டேட் ஏஜெண்டை, பட்டப் பகலில், பாந்த்ரா ரயில் நிலையத்தில் இருவர்

ஒரு சமோசா விலை ஆயிரம் ரூபாய்!

சுட்டுத்தள்ள, இருபதுகளில் ஒரு மாணவனும், அறுபதுகளில் ஒரு முதியவரும் அடிபட்டபின்தான், ஜோஷி, முண்டே இருவரும், மும்பையில் சட்ட ஒழுங்குப் பிரச்னை இருப்பதை ஒழுங்கு மரியாதையாக ஒப்புக் கொண்டுள்ளனர். ஏழு மாதத்துக்கு மேல் காலியாக இருந்த கூடுதல் போலீஸ் கமிஷனர் பதவியிலிருந்து, இன்னும் ஏனைய பதவிகளுக்கும் நியமனங்கள் பறந்துள்ளன!

தோசை மேல் ஆசை!

பேசாமல் இட்லி, வடை, தோசை, போண்டா விற்பதுடன் விட்டிருக்கலாம்; அட பஞ்சாபி, சைனீஸ் என்ற அளவிலாவது நிறுத்தியிருக்கக் கூடாதா? பீர் பார், விக்கர் வகையறா என திசை மாறி, அப்புறம் லேடீஸ் பார், டான்ஸ், அது இதுவென்று அலைந்ததற்கு உடுப்பி ரெஸ்டாரண்டுக்காரர்கள் நன்றாகவே விலை கொடுத்திருக்கிறார்கள். இவர்களிடம் பணம் புரள்வதை மோப்பம் பிடித்த அண்டர்வர்ல்ட், இவர்களைக் குறி வைக்க ஆரம்பித்து விட்டது. இருவர் குளோஸ்; பலருக்கு மிரட்டல்கள், குற்றுயிரும் குலை உயிருமாகச் சிலர் தப்பித்துள்ளனர். உளுந்தும் பருப்பும் காய்கறியும் வெங்காயமும் விற்கும் விலையில், தாக்குப் பிடிக்க முடியாமல், மும்பையிலுள்ள 17,000 உடுப்பி ஹோட்டல்களில் பல மூடப்பட்டு விட்டன. மீதமிருப்பவர்கள் நிலை திண்டாட்டம்.

• ஜோஷி



தோசை மீது ஆசை வைத்தால் காசை மறக்க வேண்டும்; வளை ஓசை மீது ஆசை வைத்தால் உயிரையே துறக்க வேண்டும்! என்னதான் செய்வார்கள், பாவம்!

டிடெக்டிவ் பாக்ஸ்?

ஜீ டீவியில், 'India's Most Wanted' ஸீரியலில், (செவ். இரவு - 10) திருமதி சுசீலா செட்டாவின் கதையைக் காட்டினார்களா? இவள் மும்பையில், பல அப்பாவிகளின் வீடுகளை அபகரித்து, விற்று, காசாக்கி, அவர்கள் மீதே கற்பழிப்புக் குற்றத்தைச் சுமத்திவிட்டு, கோடிகளுடன் தலைமறைவானவள். குஜராத்தில், 'ஆனந்த்' எனுமிடத்தில் டீவி. பார்த்துக் கொண்டிருந்த பெண்மணி, தன் வீட்டுக் அருகே ப்யூட்டி பார்லர் நடத்தும் பெண்மணி, செட்டா போலிருப்பதை சந்தேகித்து, போலீசுக்குத் தொலைபேசினாள். மறுநாள் 'செட்டா'வைக் கைது செய்து மும்பைக் கோர்ட்டில் ஆஜராக்கி விட்டார்கள்! ஹே... நம் டீவி தொடர்கள் வயசுக்கு வந்து விட்டனவா?

ஒரு சமோசா விலை ஆயிரம் ரூபாய்!

நம்ப முடியவில்லையா? காட்கோபரில், ஒரு பளபள பெண்மணி, கடைக்குச் சென்று, பணம் கொடுத்து, 50 சமோசாவுக்கு ஆர்டர் செய்துவிட்டு, 'பார்சலைத் தயாராய் வையுங்கள்; கொஞ்சம் ஷாப்பிங் செய்து வருகிறேன்' என மறைகிறாள். அருகிலிருந்த நகைக்கடையில் 65 ஆயிரத்துக்கு நகை எடுத்து, 15 ஆயிரத்தைக் கட்டிவிட்டு, 'பக்கத்திலே என் கடை உள்ளது; உங்கள் ஆளை அனுப்புங்கள்; மீதி ஐம்பதாயிரத்தைத் தருகிறேன்' என்கிறாள். ஆள் தொடர, சமோசா கடைக்குச் சென்று, கல்லாவில், 'அந்த 50ஐ இவரிடம் கொடுங்கள்' என்று விட்டு, காரில் ஏறிப் பறக்கிறாள். மணக்க மணக்க வந்த 'ஐம்பதை'க் கண்டு நகைக்கடை ஆசாமி முழிக்க... உங்களுக்குக் கணக்குப் புரிந்து விட்டதல்லவா?

— ஜெயஸ்ரீ ராஜ்



பிரதம ரசிகர்!

மனைவியின் கைகளைப் பிடித்தபடி சதாசிவம் உயிர்நீத்து ஒரு வருடமாகி விட்டது (நவம்பர் 21). இணைபிரியாதவர்களையும் பிரிக்கும் வல்லமை இயற்கைக்கு உண்டு எனில் அந்தப் பிரிவுத் துயரைத் தாங்கும் சக்தியையும் இறைவன் அருள்கிறான். தமது நினைவுப் பெட்டகத்தைத் திறந்து சில அனுபவத் துளிகளை இதோ பகிர்ந்து கொள்கிறார் ஐம்பத்தேழு ஆண்டுகள் சதாசிவத்துடன் இல்லறம் நடத்திய எம். எஸ் :

அவரைப் போல உயர்ந்த ரசனை உடையவர்கள் இருக்க முடியாது. சங்கீதம் மட்டுமில்லை, எல்லா விஷயங்களிலேயும் அந்த ரசனை தெரியும். தோட்டத்தில் எந்தெந்தப் பூச்செடிகளை எங்கெங்கே விதைக்கணும்னு சொல்லுவார். எதெது எப்போ முளை விடும், எத்தனை நாள் கழித்து மலர ஆரம்பிக்கும்னு கணக்கு வைச்சுப்பார். பூக்க ஆரம்பித்ததும் பார்த்தால் அந்தந்தப் பாத்திகளின் நிறங்கள் மாறி மாறி அமைஞ்சு அசாத்திய அழகாகத் தெரியும்... பார்த்துப் பார்த்து மகிழ்ந்து போவார்

வண்ணங்களை இவ்வளவு இரசித்தாலும் அவர் விரும்பி அணிந்தது வெள்ளை மட்டும்தான் - கதர்! அதுவும் அப்படியே துல்லியமா இருக்கணும். பிரயாணங்களின் போது, அவருடைய பெண்கள் துணிகளை மடித்து பெட்டியில் அழகாக அடுக்கிக் கொடுத்தால் அதைக் கூட இரசித்துப் பாராட்டுவார். புது இடங்களில் முக்கியமான கச்சேரிகள் நடக்கும்போது மேடையில் பின்புறம் எந்த நிறத்தில் திரைச்சிலை போட்டிருக்கிறதுன்னு விசாரிக்கச் சொல்லுவார். அதற்கு ஒத்துப் போகிற மாதிரி புடைவை நிறம் தேர்ந்தெடுக்கச் சொல்லுவார்.

சாப்பாட்டிலும் அதே போன்ற ரசனைதான். இனிப்பு வகைகள் இஷ்டப்பட்டுக் கேட்டுச் சாப்பிடுவார். சின்ன வயதில் நன்றாகச் சாப்பிட்டார். வயது செல்லச் செல்ல உணவின் அளவைக் குறைத்துக் கொண்டு, வேளை தவறாமல் சாப்பிட்டார். கொஞ்சமாகச் சாப்பிட்டாலும் நல்ல ருசியுடன் சமையல் இருக்க வேண்டும். கத்திரிக்காய், வாழைக்காய் போல நாட்டுக் காய்கள் நன்றாக வெந்து குழைந்து இருக்க வேண்டும்.

சங்கீதத்தை அவர் எவ்வளவு ரசித்தார் என்பது எல்லோருக்குமே தெரிந்ததுதான். அவர் பாரதியார் பாடல்களை வீதியெல்லாம் பாடிக் கொண்டு போனதை நான் கேட்டதில்லை. ஆனால், வீட்டிலே பேரக் குழந்தைகளுக்காக அவர் பாடிக் கேட்டிருக்கிறேன். 'காற்றடிக்குது கடல் குமுறுது கண்ணை விழிப்பாய் நாயகனே...' என்றோ 'தீம்தரிகிட! தீம்தரிகிட!' என்றோ பாடினால், ஏதோ இடி முழங்குவது மாதிரி இருக்கும். அதே 'வெள்ளை நிறத்தொரு பூனை' என்று பாட ஆரம்பித்தால் ஒரே சாத்வீகமாகக் குரல் மாறிப் போகும்.

ஒருகாலத்தில் நிறைய வெற்றிலை, பாக்கு புகையிலை போட்டு வந்தார். வீட்டிலேயே புகையிலை பதம் செய்து கொடுத்தது உண்டு. பாக்கையும் வாங்கி, பன்னீரில் ஊறவைத்து, இடித்து; லவங்கம், ஏலம் பொடி செய்து சேர்த்து குங்குமப்பூவைப் பரப்பி, கடச் சுட நெய் காய்ச்சி அதன் மேல் ஊற்றி... ரொம்ப பக்குவமாகச் செய்து கொடுப்போம். ராஜாஜி கேட்டுக் கொண்டதன் பேரில் ஒரே நாளில் புகையிலைப் பழக்கத்தைக் கைவிட்டார்!

ரொம்ப வைராக்கியம் உண்டு அவருக்கு.... எவ்வளவுக்கெவ்வளவு ரசித்து, ருசித்துச் சாப்பிடுவாரோ அதே தீவிரத்தோடு உபவாஸமும் இருப்பார். - சில சம



''உங்க பையன் எதிர்காலத்தில் அரசியல்வாதி ஆயிடுவான்.''

''எப்படிச் சொல்றீங்க?''

'' 'அம்மா, ஆடு, இலை, ஈ, உரல், ஊழல்'னு சொல்றானே, அத வச்சுத்தான்.''

- சு. குமார்

யம் கோபத்தினால் சாப்பிடாமல் இருந்ததும் உண்டு.

இவருடைய கோபம் பற்றி உலகமே ஆச்சர்யப்படும். ஆனால் அவர் மனம் ஸ்படிகம் மாதிரி. கோபத்துக்குக் காரணம் ரொம்ப நியாயமானதாகயிருக்கும்; அந்தக் கோபம் வந்த சுவடு தெரியாமல் ஓடியும் போய் விடும்.

யோசித்துப் பார்த்தால் அந்தக் கோபம் பெரும்பாலும் மற்றவர்கள் பேரில் அவர் கொண்டிருந்த அக்கறையினாலே ஏற்பட்ட கோபமாகவே இருக்கும். நாங்கள் குடித்தனம் வைத்த புதிது. அவருடைய தங்கை காலமாகிவிட, அந்தத் தங்கையின் இரண்டு குழந்தைகள் அம்பி, தங்கம் எங்களிடம் தான் வளர்ந்தார்கள். கூட்டுக் குடும்பம். வீட்டிலே பெரியவர்கள் அம்பியைக் கடைத்தெருவுக்கு அனுப்பி விட்டார்கள். குழந்தைகளைக் கண்ணும் கருத்துமாய் வளர்த்து ஆளாக்குவதாக தங்கைக்கு வாக்குக் கொடுத்திருந்தார். அப்படியிருக்கும் போது சின்னஞ் சிறுவனை கடைத்தெருவுக்கு அனுப்பினால் அவருக்குப் பிடிக்காது என்பது எனக்குத் தெரியும். ஆனால் வீட்டில் 'மற்ற பெரியவர்களை எதிர்க்க முடியவில்லை. வெளியே போயிருந்த இவர், திரும்பி வந்து அம்பியைக் காணாமல், விஷயம் அறிந்ததும் ரொம்பக் கடுமையாகக் கோபித்துக் கொண்டு விட்டார்.

கோபித்து முடிப்பதற்குள் அம்பி திரும்பி வந்து விட்டான். அந்தக் கோபம் அப்படியே சந்தோஷமாக மாறிவிட்டது... எவ்வளவு கோபமோ அவ்வளவு சந்தோஷம்!

அதே போல், உடன் பயணம் செய்கிறவர்கள் - நண்பர்களானாலும் சரி, பக்க வாத்தியக் கலைஞர்களானாலும் சரி, சமமான கௌரவத்துடன் நடத்தப்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பார். அதில் ஏதேனும் குறை ஏற்பட்டால் ரொம்பக் கடுமையாகக் கோபித்துக் கொள்ளுவார்.

போகப் போக கோபமெல்லாம் மறைந்து அடங்கி ஒரு வேதாந்தியைப் போல ஆகிவிட்டார்.

கல்கி காரியாலயத்தின் ஊழியர்களிடமும் அவருக்கு அளவிடமுடியாத அன்பு. அவர்கள் எந்தக் குறைவுமில்லாமல் வாழ்க்கை நடத்த வேண்டும் என்று ஆசைப்பட்டார். சில ஆண்டுகள் வரை தீபாவளியன்று வீட்டிலேயே ஊழியர்கள் எல்லோருக்கும் விருந்து நடத்தினோம். பாயசமும் நெய்யும் மட்டும் நானே என் கையால் பரிமாற வேண்டும் என்பார். நெய் பரிமாற பெரிய கரண்டிதான் உபயோகிக்க வேண்டும்! பரிமாறிக் கொண்டே வரும் போது பின்னோடு நடந்து வந்து எல்லோரையும் பந்தி விசாரித்து மகிழ்ந்து போவார்.

அதே போல் நண்பர்களிடமும் ஆழ்ந்த பாசம். சீட்டு விளையாட பிற்பகலில் நண்பர்கள் வருவார்கள் - சீட்டு என்றால் பொழுதுபோக்குத்தான் - கை விளையாடும்; மனமென்னவோ தீவிரமாக வேறு யோசனையிலே இருக்கும். அதே சமயத்தில் வருகிற நண்பர்களை உபசரித்து கவனிப்பதில் குறையே இருக்காது. யார் யாருக்கு என்ன டிபன் பிடிக்குமோ அதைச் செய்து தரச் சொல்லி மகிழ்ச்சி கொள்ளுவார்.

காங்கிரஸில் ரொம்பத் தீவிர ஈடுபாடு இருந்ததால் தெய்வ வழிபாட்டிலே இவருக்கு நாட்டம் இல்லாமல் போய்விடுமோ என்று ஒரு சமயம் நான் நினைத்ததுண்டு. ஆனால் திருப்பதி பெருமாளிடம் மாறாத பக்தி. காஞ்சி முனிவர், பாபா இருவரும் இரண்டு கண்கள்! எத்தனை வேலை இருந்தாலும் கல்கி அலுவலகத்தில் ஆயுத பூஜை ரொம்ப விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடு செய்வார். அன்றைய தினம் 'நெஞ்சுக்கு நீதி...' 'வெள்ளைத் தாமரை பூவில் இருப்பாள்' என்ற இரண்டு பாரதியார் பாடல்களும் பாடுவேன்.

சுதந்தரம் அடைந்த பிறகு சில ஆண்டுகள் வரை சுதந்தர தினத்தன்று ஃபோர் மேன் ராஜாபாதரைக் கொடியேற்றச் செய்து 'தாயின் மணிக்கொடி' பாடச் செய்தார்.

வாழ்க்கை முழுவதும் பிறருக்காக - பரோபகாரமாக வாழ்ந்தார். அதனால்தான்

சராசரி குடும்பப் பெண்ணாக மண வாழ்க்கை தொடங்கிய என்னை ஒருநாள் அழைத்து, "நீ பாடணும்... தர்மத்துக்காகப் பாடணும்" என்றார். அவர் விருப்பப்படியே நடந்தது.

ஒரு சமயம் டெல்லியில் கச்சேரி - அது யுத்த காலம். மேடைக்கு ஒரு சீட்டு எழுதி அனுப்பினார். 'கச்சேரியின் இடையே ஒருவர் பேசுவார். அவர் பேசி முடிந்ததும் கை வளையல்களைக் கழற்றி நீ அவரிடம் தர வேண்டும்...' என்று எழுதியிருந்தார். நானும் அப்படியே செய்தேன். அவருடைய சஷ்டியப்த பூர்த்திக்குக் குழந்தைகள் சேர்ந்து அன்பளிப்பாகக் கொடுத்த வளையல்கள்!

யுத்த நிதிக்கான கச்சேரிதான் அது. அதன் இடையிலே நிதிக்காக வேண்டுகோள் விடுத்தபோது நாம் முன்னோடியாக வழி காட்ட வேண்டும் என்று விரும்பினார். நாம் ஆரம்பித்து வைத்தால், பலர் பின்தொடர்வார்கள் என்ற நல்லெண்ணம்...

சரீரத்தாலும் சிந்தனையாலும் பொருளாலும் உதவிகள் செய்த பரோபகாரி அவர்

கடைசிக் காலத்தில் தினமும் காலையில் டேப்ரிகார்டரில் வேதம் கேட்பார்; ஜபம் செய்வார். நான் ஒலிப்பதிவு செய்த சுலோகங்களையோ பாட்டுகளையோ கேட்டபடி நாற்பது நிமிடங்கள் நடப்பார். நகைச்சுவை உணர்வை இழக்காமலே இறுதிவரை வாழ்ந்தார். நிறைவான, உயர்ந்த வாழ்க்கை - அந்த நிறைவின் பலத்தில்தான் நான் இன்று இயங்கிக் கொண்டிருக்கிறேன் என்று தோன்றுகிறது. அவரால் வளர்ந்து பயனடைந்த ஆயிரமாயிரம் பேருக்கும் கூட அப்படித்தான் தோன்றும் போலிருக்கிறது. ●

சந்திப்பு: **ஸ்ருதி கீர்த்தி**



''மாப்பிள்ளை! 'Bribe groom'னு பிரிண்ட் ஆனது எழுத்துப் பிழைதான். நீங்க அதிக வரதட்சிணை வாங்கினதைக் குத்திக்காட்டறதுக்காக இல்லை. ப்ளீஸ்... கோபப்படாதீங்க!''

— வெ. ராஜாராமன்

இல்லத்தரசி

சீதா ரவி

சிக்னலில் வண்டியை நிறுத்திய போது எதிர்ப்பக்கத்தில் கவனித்தான். வயதில், வண்ணத்தில், நிறத்தில் வேறுபட்ட முகங்கள் – சின்ன மூக்கு, பெரிய கண்கள், அகன்ற கன்னம், அடங்கிய பற்கள், தடித்த உதடுகள் என்று வகை வகையான சேர்க்கைகளாலான முகங்கள்... அத்தனையிலும் சீருடையாகப் போர்த்திய களைப்பு கலந்த கவலை!

மாநகரப் பேருந்து வந்து நின்றதும் அந்த மகளிர் சமுத்திரம் அலையாக அதை நோக்கி நகர்ந்தது. சரிபாதி பெண்களை மட்டும் ஏற்றிக் கொண்டு பஸ் போய்விட, மற்றவர்கள் ஜன்ம சாபல்யத்துக்கான தவத்தைத் தொடர்வதுபோல் பிரார்த்தனைப் பார்வை செலுத்தி நின்றனர்.

எதற்காக இப்படி அல்லாடுகிறார்கள்?... பணக் கட்டாயங்கள் இருக்கட்டும். அதையும் தாண்டி என்ன வேட்கை இவர்களை இங்கே விரட்டி அடித்து, இப்படித் தெருவில் நிற்க வைக்கிறது? இடுப்புக் குழந்தை, பிற்பகல் உறக்கம், கேபிள் டீ.வி., கணவனுக்குக் கதவு திறந்து விடும் களிப்பு போன்ற நேர்க்கோடு சந்தோஷங்களை விட்டு எதைத் துரத்துகிறார்கள்...?

கோபி, அவர்களுக்காக மெய்யாலும் அனுதாபப்பட்டுப் பெருமூச்சு விட்டான்.

ஹாரன் அடித்து, பின் வண்டிகள் உசுப்பிய போதுதான் சிக்னல் மாற்றத்தை உணர்ந்தான். வீட்டுக்குப் போகப் பிடிக்கவில்லை. கல்பனாவோடு முகம் கொடுத்துப் பேசி நான்கு நாட்களாகி விட்டன.

ஜோசியர் ராமமூர்த்தி இதை ஏன் சொல்லவில்லை...? பவழத்தைக் கொடுத்து, தங்கத்தில் கட்டி, வலது கை மோதிர விரலில் போட்டுக் கொள்ளச் சொல்லி, "ஒரு மாதத்துக்குள் சரியாயிடும்" என்றார். மோதிரம் அணிந்த தேதியிலிருந்து ஒரு மாதம் என்றால், இன்னும் இருபத்தாறு நாட்கள்! அதுவரை...? எழுப்பிக் கொண்ட மண்சுவர்களின் செங்கல்களை ஆராய்ந்து புள்ளி விவரம் எழுதுவதா...?

அவ்வளவு கோபம் வந்தறியாதவன் அவன். எங்கோ படித்ததுண்டு... you can bring out the best in a person or you can bring out the beast in him!.... கல்பனாவுக்கும் தனக்குமிடையே முதல் பாதி வாக்கியம் செயல்முறை விளக்கம் பெற்றதாகச் சரித்திரம் உண்டா...? நினைவுகளைத் தோண்டிப் பார்க்கவிடாமல் சமீபத்திய நிகழ்வுகள் இறுகிப் படர்ந்திருந்தன.

நொடியில் கண்டுபிடித்து விட்டான்.

"ஜோசியர்ட்ட போனீங்களா...?"

"உனக்கெப்படித் தெரியும்...?"

"இந்த மோதிரம், உங்க முகம் இரண்டுமே காட்டிக் கொடுத்தது..."

"சுந்தர்தான் அழச்சுட்டுப் போனான் – கம்பெல் பண்ணி..."

"நீங்க என்ன கைக் குழந்தையாங்க... கம்பெல் பண்றதுக்கு? சரி, எதுக்காம் இந்த மோதிரம்...?"

சங்கடத்தில் அவன் பார்வை தாழ்ந்தது.

"என்னங்க பதிலைக் காணோம். முந்நூறு ரூபாய்க்குக் கணக்குக் கேட்டு என்னைப் பின்னி எடுத்தீங்க... இது மூவாயிர ரூபா பொருள்.... எனக்குத் தெரிய வேண்டாமா...?"

லா பாயின்ட்! லா பாயின்ட்!

"சரி பணத்தையே விடுங்க... என்ன கஷ்டம்னு இப்ப நீங்க ஜோசியம் பார்க்கப் போனீங்க...?"

"அப்பா! இப்பவாச்சும் ஏதோ கஷ்டம் இருக்குன்னு புரிஞ்சுக்கிட்டியே..."

கண்களில் ஒருகணம் வலி மின்னி மறைய, சுதாரித்துக் கொண்டான்.

"வாட் இஸ் தி பிராப்ளம்...?" – பிடிக்க வந்த கைக்கு அனுமதி மறுத்தான்.

"என்னங்க? யாராச்சும் ஏதாவது சொன்னாங்களா...? ஜெயா மாமிதானே...? நை நைன்னு ஒருநாளைக்கு மூணு முறை 'குளிச்சுண்டிருக்கியா?'ன்னு கேட்கும் அது... அதெல்லாம் நீங்க பெரிசா எடுத்துக்கக்

கூடாது...''

அவளே பேச்செடுத்ததில் கொஞ்சம் தைரியம் பெற்றவனாக மனமவிழ்த்தான்.

சுந்தர் வந்திருந்தபோது நடந்த உரையாடல், ராமமூர்த்தியின் ராசிக்கும் திறமைக்கும் அவனளித்த உத்தரவாதம், பவழத்தின் சக்தி பற்றி ஜோசியரின் பிரசங்கம், சுவர்ண லக்ஷ்மி ஜுவல்லரியில் ஜெயந்தியின் விசாரிப்பு...

அவனைப் பேசவிட்டு, வார்த்தை விடாமல் கேட்டவளின் முகம் வாடிச் சிறுத்தது.

''எப்படிங்க மனசு வந்தது...?''

''புரியலை...''

''ஒரு மூணாவது மனுஷன்கிட்டே போய் இவ்வளவு அந்தரங்கமான விஷயத்தைப் பேசியிருக்கீங்க. எங்கிட்டியே நேரடியா கேட்டிருக்கலாமில்லே...? எனக்கு ஒரே அவமானமாயிருக்கு...''

''என்ன அவமானம்? 'அவங்களால இரண்டு நாள் கூட லீவ் போட முடியாதாமா?'ன்னு அவன் கேட்கறப்போ எனக்கு அவமானமில்லே...?! அந்தரங்கமா பேச உனக்கு ஏது நேரம்...? வேலை விட்டு வர்ற போதே இரும்புக் கவசம் மாதிரி இறுகிப் போய் வரே... பாதி நாளைக்கு அதைக் கழற்றவே மாட்டே. ஆபீஸ்ல உன் கீழே வேலை பார்க்கறவங்ககிட்டே பேசற அதே தொனியில எங்கிட்டேயும் பேசறே... இதுல நான் அந்தரங்கத்தை எங்க கொண்டு திணிக்கிறது... அதெல்லாம் இயல்பா வரணும்...''

இவ்வளவு தூரம் அவன் உடைத்துப் பேசி அறியாதவள், அதிர்ந்து நோக்கினாள்.

3



தன் பக்கம் ஸ்கோர் ஏறிய துணிவில் தொடர்ந்தான்.

"இந்தத் தொந்தரவெல்லாம் எதுக்குன்னு தான் ஆம்பளைக்கு வெளி வேலை, பொம்பளைங்களுக்கு வீடுன்னு அழகா பிரிச்சு வைச்சாங்க... எல்லாத்தையும் தலைகீழாக்கணும்னு பார்க்கறீங்க... நீங்க இழுத்துப் போட்டுக்கிட்டு இறைக்க இறைக்க ஓடிக்கிட்டேயிருப்பீங்க, 'புள்ளை பெத்துக் கலாமா தாயி?'ன்னு ஒரு ஆம்பளை கேட்டுக்கிட்டு நிற்கணுமாக்கும்... போதும் நீ வேலைக்குப் போனது!..."

திட்டமிடாமல் வெளிப்பட்டு விட்டது கோபம். பற்றவைத்த பஞ்சாகச் சீறுவாள் என்று எதிர்பார்த்தான்.

"சாப்பிடுங்க... என்று தட்டில் பரிமாறினாள்.

உணவு கசந்து வழிந்தது. 'நீ சாப்பிடலியா?...' என்று கேட்க நினைத்ததை விழுங்கிக் கொண்டு எழுந்து போய் அலுவலகப் பெட்டியைத் திறந்து கிளறினான்.

கையிலிருந்த காகிதத்தை மெள்ள விடுவித்து "ஒரு நிமிஷம்..." என்றாள்.

அந்த அண்மையும் மென்மையும் இளக்கிக் கரைத்தபோது ஆனந்தமாயிருந்தது.

"அறவழி நடப்போம்; சத்திய வழி நடப்போம்ங்கிற மாதிரி பொதுக் கூட்டத்தில் எதையாவது பேசித் தொலைச்சீங்களா?"

"ஆமாம்! ஏன்?"

"கட்சித் தலைமை நோட்டீஸ் அனுப்பியிருக்கு... கட்சிக் கொள்கைக்கு முரணாகப் பொதுக் கூட்டத்தில் பேசியது ஏன்னு கேட்டு!"

— உ. ராஜாஜி



'ஏன் இவள் எப்போதும் இப்படி இருக்கக் கூடாது...? பூவாக, முத்தாக, மணியாக, வீட்டைக் கோயிலாக்கி வளையவந்து, குழந்தைகள் பெற்று, பாலூட்டி, சுகம்கொண்டு...'

அவன் மனத்திரையில் படம் பார்த்தவள் போல் பேசினாள்.

"வேலையை விட்டு வீட்டிலே இருந்துடறது ரொம்ப சுலபங்க... ஒரு ராஜினாமா கடிதம். மூணு மாசம் நோட்டீஸ். அவ்வளவுதான்..."

"அப்ப அதை உடனே செஞ்சுடு. பணத்தைப் பத்திக் கவலைப்படாதே. எவ்வளவு புள்ளை பிறந்தாலும் வைச்சுக் காப்பாத்த என்னால முடியும்..."

"உங்களுக்குப் புரியலை... அந்தச் சம்பளம் – அதை எப்படிச் சொல்றது... என் செலவுக்குக் கிடைக்கற பணம்னு நினைக்கல்லே... அது என் முயற்சிக்கு, மதிப்புக்குத் தரப்படற நிர்ணயம் – It makes me feel good..."

"வீட்டிலே இருந்தா வேலையிருக்காதா...? அதுல மட்டும் என்ன 'bad'ன்னு கேட்கறேன்?"

"இந்த மாதிரி வேணும்னே வார்த்தை வளர்த்தாதீங்க... வீட்டு வேலை அவ்வளவு சந்தோஷமான விஷயமாயிருந்தா ஆம்பளைங்களும் கூட செய்ய வேண்டியது தானே...? ஒரு வேலைன்னா ஒரு வேலை... தடுமாறாம உங்களால செய்ய முடியுதா..."

"இதோ பாரு! வீட்டு வேலை செஞ்சு நல்ல பேரு வாங்கறதுக்காக நான் கல்யாணம் பண்ணிக்கலே... அந்த மாதிரி எதிர்பார்ப்போட நீ எனக்கு கழுத்தை நீட்டியிருந்தியானா அது உன் தப்பு! You can go to hell...!"

தேடிக்கொண்டு போக அவசியமின்றி நரகம் வீட்டில் குடியேறியது.

சமையல், சாப்பாடு, காப்பி, டிபன், காலை பேப்பர், மாலை டீ.வி. என்ற வழக்கமான சுழற்சி தொடர்ந்தபோதும் உள்ளத்தின் எரிமலைகளில் குரோதக் குழம்பு கொதித்து வழிந்தது.

உரிய பார்க்கிங் இடத்தில் காரை நிறுத்தி இறங்கிய கோபி, வலது கை பவழ மோதிரத்தைக் கட்டை விரலால் நீவிப் பார்த்துக் கொண்டான்.

கல்பனா வந்திருந்தாள். ஸ்கூட்டர் இருந்தது. ஆனாலும் வாசல் மணி அழுத்தாமல் மாற்றுச் சாவி போட்டுத் திறந்து உள்ளே



"உங்களோட ஃபைனான்ஸ் கம்பெனிக்கு அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து... ஆகிய நாடுகள்ல கூட கிளைகள் இருக்குன்னு பொய் சொன்னீங்களாமே? ஏன்?"

"போலீஸ்காரங்க சோதனை பண்ண அங்கெல்லாம் நம்மையும் கூட்டிக்கிட்டுப் போவாங்கன்ற ஆசையில்தான்!"

– சீர்காழி வி. ரேவதி

போனான். பின்னறையிலிருந்து எட்டிப் பார்த்தவள் உணர்ச்சி காட்டாது முகத்தை உள்ளிழுத்துக் கொண்டாள்.

டெலிபோன் ஒலித்தது. நகைக்கடைப் பெண் ஜெயந்தி! மீண்டும் தன்னை நினைவூட்டிக் கொண்டு கேட்டாள் : "கல்பனாவிடம் பேசலாமா...?"

அவளிருந்த அறைக்குள் சென்று "போன்" என்றான்.

பார்வையாலேயே அவனை நிராகரித்து எழுந்து போனாள்.

"ஹலோ..."

மறுமுனை பேச்சு கேட்காவிட்டாலும் ஒருவாறு அனுமானிக்க முடிந்தது.

'சௌக்கியமா?' 'மணவாழ்க்கை எப்படி?...' 'உன் கணவர் வந்திருந்தார்...' 'இரண்டு வருஷம் ஆச்சே... எதுவும் நல்ல செய்தி உண்டா?'

"செய்தி எதுவுமில்லை... அதுவே நல்ல செய்தி..." – கல்பனா ஆங்கிலத்தில் சொல்லிக் கேட்க, வலித்தது.

தவறு தன் பேரில்தான். ஒரு மூன்றாம் மனிதனிடம் மனைவியை விட்டுக் கொடுத்திருக்கக் கூடாது. இப்போது கல்பனாவும் அதையே செய்கிறாள். மிக இலாகவமாக... பேசும் சில வார்த்தைகளைக் காட்டிலும் பேசாமல் விடும் சொற்களால், தொனியால், குரலின் இறுக்கத்தால் துளித்துளியாகப் புருஷனை விட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கிறாள்.

அவள் கையிலிருந்த போனைப் பிடுங்கி, கத்த வேண்டும் போலிருந்தது. உடை மாற்றி பேசாது போய் டீவி முன் நின்று ரிமோட்டை இயக்கினான். அதுவும் மக்கர் செய்தது.

டீவி. அருகே போய் சுவிட்சை இயக்க முயன்ற சமயத்தில்தான் கவனித்தான் கோபி. ஒரு மாசத்து தூசு அந்த டீவி. மேஜை மேல் கனமாகப் படிந்திருந்தது.

மெள்ள அதை ஒரு விரலால் தொட்டான். 'தூசி!' புழுதி விலக்கி விரல் நுனி எழுத்துக்களை அமைத்தது... ஆச்சர்யக் குறியின் அடியில் புள்ளி வைத்தபோது கல்பனா வந்து பார்த்தாள்.

தகித்தது அந்தப் பார்வை.


(தொடரும்)

"நம் கிராமத்துக்கு உயர்நிலைப் பள்ளி தேவைன்னு போராட்டம் நடத்தியவர், இப்ப திடீர்னு ஹைஸ்கூல் வேண்டாம்னு எதிர்ப்பு தெரிவிக்க ஆரம்பிச்சுட்டாங்களே! ஏன்?"

"ஹைஸ்கூல் கட்டற காண்ட்ராக்ட் எதிர்க்கோஷ்டி முனுசாமிக்குப் போயிடும் போலிருக்கு, கமலா!"

– உ. ராஜாஜி





1998 நவம்பர் 22
வெகுதான்ய கார்த்திகை 6
மலர் : 57
இதழ் : 17

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

பி.ஜே.பி தேர்தல் அறிக்கை : பிரும்மாண்ட ஜோக்!

கண்கெட்ட பிறகு விழுந்து விழுந்து சூரிய நமஸ்காரம் செய்வது....

குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பது...

ஆடத் தெரியாத காரணத்தால் அரங்கத்தையே கோணல் என்பது...

– இந்த மூன்று வழக்குமொழிகளையும் மெய்ப்பித்திருக்கிறது பி.ஜே.பி. அரசு!

நான்கு மாநிலங்களில் நடக்கவிருக்கும் தேர்தலுக்கென கட்சித் தலைவர் குஷபாவ் தாக்ரே வெளியிட்ட பி.ஜே.பியின் தேர்தல் அறிக்கை என்ன சொல்கிறது...? மூன்று வாக்குறுதிகளை அளிக்கிறது.

1. விரைந்து முடிவெடுத்து இயங்கக்கூடிய தலைமை.


2. ஒளிவு மறைவற்ற நிர்வாகம்.

3. தேச நலனை முதன்மைப்படுத்தும் அரசியல்.

பி.ஜே.பியின் இதுநாள் வரையிலான ஆட்சியை மதிப்புப் போட்டால், தாக்ரே குறிப்பிடும் இந்தத் தேர்தல் வாக்குறுதிகளை பிரும்மாண்டமான 'ஜோக்' என்றுதான் கொள்ள வேண்டியிருக்கிறது.

● ஒரு பிரச்னையில் கூட மத்திய அரசு விரைந்து செயல்படவில்லை. பெட்ரோல் விலை முதல் உப்பு விலைவரை அனைத்திலும் நடுத்தர வர்க்கத்தின் வயிற்றிலடிக்கும் குளறுபடி!

● சி.பி.ஐ அதிகாரி பணி மாற்றம் தொடர்பான சுசமுசா இன்னமும் விசாரிக்கப்படாமலேயிருக்கிறது. அமைச்சரவை விரிவாக்கத்தைக் கூட, பிரதமரால் நிகழ்த்த முடியவில்லை. தமது அமைச்சகத்தின் எந்த



ஒரு ஃபைலின் எந்த ஒரு ஜெராக்ஸ் நகலையும் மக்கள் கேட்டால் வழங்கத் தயாராக இருப்பதாக ஜெத் மலானி அறிவித்தார். ஆனால் அதை அமுல்படுத்த பி.ஜே.பி தலைமை அனுமதிக்கவில்லை. இந்த அழகில், ஒளிவு மறைவற்ற நிர்வாகம் குறித்து எப்படி நம்பிக்கை கொள்வது!

● ஹிந்துத்வா பிடிவாதத்தைக் கைவிட வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் மறுக்கும் போக்கு... இதுவா தேச நலனை முதன்மைப்படுத்தும் அரசியல்?

இந்த நிலைமையில் தாக்ரேயின் தேர்தல் அறிக்கைக்கு என்ன மதிப்பு இருக்க முடியும்?

அறிக்கை வெளியிடப்பட்டவுடனேயே தாக்குதல் கேள்விகளால் துளைத்தெடுத்த நிருபர்களைச் சமாளிக்க, தாக்ரே ஒரு நூதனமான வாதத்தைச் சமர்ப்பித்திருக்கிறார்.

'இது கூட்டணி அரசு; கூட்டணிக் கட்சிகளின் இழுபறி காரணமாகத்தான் ஆட்சி சரியாக நடைபெற வில்லை; விலைவாசிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை' என்று கூறியிருக்கிறார்.

பொதுத் தேர்தல் நடந்தபோது, எந்தக் கட்சியுடன் கூட்டு வைத்துக்கொள்கிறோம், எந்த அடிப் படையில், என்றெல்லாம் சிறிதும் யோசியாமல், மாநிலம் வாரியாகச் சந்தர்ப்பவாதக் கூட்டணி அமைத்து முன்னேறியது பி.ஜே.பி.

இன்று அதே கூட்டணிக் கட்சிகள் வெறும் அரசியல் காரணங்களுக்காக ஆட்சிக்கு முட்டுக்கட்டை போட்டவண்ணம் இருக்கின்றன. மமதா பானர்ஜியும் ஜெயலலிதாவும் மத்திய அரசுக்கு மாறி மாறி கெடு வைக்கிறார்கள்! அரசும், ஆட்சியில் நீடிப்பதற்காக அவர்கள் இழுத்த இழுப்புக்குச் சாய்கிறது.

இவ்வளவு ஆன பிறகு, ஆட்சியின் குறைகளுக்குக் கூட்டணிக் கட்சிகளைக் காரணமாக்குவது கண் கெட்ட பிறகு சூர்ய நமஸ்காரம் செய்வதற்கே சமம்!

டெல்லியில் நிர்வாகம் மோசமாகிவிட்டது என்பதற்காக சாஹிப் சிங் வர்மாவை நீக்கி சுஷ்மா சுவராஜை அங்கே முதல்வராக்கி, பெரிய சலசலப்பை ஏற்படுத்தியது பி.ஜே.பி தலைமை. இப்போது, 'மாநிலத் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் மத்திய அரசை எடை போடக்கூடாது; அவற்றில் பி.ஜே.பி தோற்றால் அது மத்திய அரசின் செயல்பாட்டுக்குக் கிடைத்த ஃபெயில் மார்க்காகக் கொள்வதற்கில்லை. ஏனெனில் மத்தியில் நடப்பது கூட்டணி ஆட்சி' என்று கண்துடைப்புச் செய்து தப்பிக்கப் பார்க்கிறது.



குப்புற விழுவதற்கு முன்பே மீசையைத் தட்டிவிட்டுக் கொள்வதுமல்லாமல், 'மண் ஒட்டவில்லை' என்றும் சொல்வது போலிருக்கிறது இந்த நிலை!

சட்டமன்றத் தேர்தல் நடக்கவிருக்கும் நான்கு மாநிலங்கள், நாட்டின் கணிசமான மக்கள் தொகையைத் தாங்கித் திகழ்பவை. இந்த மாநிலத் தேர்தல்களின் முடிவு, மத்திய அரசின் மீதான விமர்சனம் என்பதோடு தேசத்தின் தீர்ப்பும் ஆகும். இது உலகெங்கும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஜனநாயக மரபு.

'காங்கிரஸ், ஊழல் நிறைந்த கட்சியாகும். அதனால் அது பி.ஜே.பிக்கு மாற்று ஆக முடியாது. எனவே இம்முறையும் பி.ஜே.பியை ஆதரியுங்கள்' என்று கூறி வாக்குக் கேட்பது வடிகட்டிய நெகடிவ் அணுகுமுறை. தங்கள் சாதனைகளாகவோ நடைமுறையில் கைகொடுத்த கொள்கைகளாகவோ சொல்லிக் கொள்வதற்கு ஏதுமில்லாததால் எதிராளியைக் குறைகூறும் இந்த அணுகுமுறை 'அரங்கம் கோணல்' வாசகத்தைத்தான் நினைவுபடுத்துகிறது. நமக்கு ஊழலற்ற அரசு தேவை என்பதற்காக திறமையற்ற அரசை ஆதரிக்க முடியாதல்லவா....?

பொதுத் தேர்தலின்போது கண்மூடித்தனமான கூட்டணிகளை அமைத்துக் கொண்டாலும் ஒரு சில நல்ல அம்சங்கள் அடங்கிய தேர்தல் அறிக்கையை வழங்கியது பி.ஜே.பி. ஆனால், இப்போது வழங்கியுள்ள தேர்தல் அறிக்கை வெறும் வார்த்தை ஜாலமே. விலைவாசி குறைய என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று உருப்படியாகக் கூற முடியாமல் திணறுகிறது மத்தியில் ஆளும் கட்சி. உப்பைக் கூட ரேஷன் கடையில் கியூவில் நின்று வாங்க வேண்டிய பரிதாபகரமான நிலைமை இந்திய தீபகர்ப்பத்தில் ஏற்பட்டிருக்கிறது.

பி.ஜே.பி சொல்வது போல் இந்த உப்பு நெருக்கடிக்கு எதிர்க்கட்சிகள் கிளப்பிய வதந்திகளே காரணமாயிருந்தாலும் கூட, அந்த வதந்திகளை நம்புகிற அளவுக்கு மக்கள் அரசிடம் நம்பிக்கையிழந்து போயிருக்கிறார்கள் என்பது வேதனைக்குரிய உண்மை!

நம்பிக்கையைத் திரும்பப் பெறும் அளவுக்குத் தேர்தல் அறிக்கையில் எதுவும் இல்லாதது பெருத்த ஏமாற்றம் அளிக்கிறது.

இத்தேர்தல்களில் பி.ஜே.பி வெற்றி பெற்றாலும் சரி, தோற்றாலும் சரி.... கற்றுப் பின்பற்ற வேண்டிய பாடங்கள் அநேகம். ○

அமரர் கல்கி - தேவன்

ஆழ்வார்பேட்டைக்குப் படகு சர்வீஸ் விட வேண்டி வருமோ என்பது போல மழை வெளுத்து வாங்கிக் கொண்டிருந்தது. இரு கால், இரு சக்கர வாகனர்கள் எல்லோரும் அகப்பட்ட இடங்களில் பதுங்கிக் கொள்ள, நாரத கான சபா மினி ஹாலில் ஒதுங்கியவர்கள் மட்டும் இன்னும் பலமாக நனைய வேண்டியதாகி விட்டது. அங்கே பெய்தது நகைச்சுவை மழை!

7.11.98 – சனிக்கிழமை காலை பத்து மணிக்கு அவ்விடத்தில் மையம் கொண்ட நகைச்சுவைப் புயல் – அதாவது சுஜாதா, நிமிஷத்துக்கு நிமிஷம் பலமடைந்து வந்து தாக்கியதில், கூடியிருந்த கல்லூரி மாணவர்களுக்கும் கல்கி வாசகர்களுக்கும் குளிர் ஜுரம் வராத குறை.

யாராவது நகைச்சுவையாக எழுதினால் படித்து ரசிக்கலாம். கொஞ்சம் மெனக்கெட்டு நகைச்சுவை எழுத முழி பிதுங்கி முயற்சி கூடப் பண்ணலாம். ஆனால், 'நகைச்சுவை எழுதுவது எப்படி?' என்கிற பயிலரங்கத்தையே நகைச்சுவையாகப் பேசி நடத்த முடியுமா என்று அன்று மூக்கு, கண், காது, தலை மேல் விரல் வைக்காதவர்களே இல்லை!

கல்கி நூற்றாண்டு விழாக் குழுவும் தேவன் அறக்கட்டளையும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த, கல்லூரி மாணவர்களுக்கான பயிலரங்கம் அது.

கல்லூரி ஆசிரியர்களின் கிடுக்கிப் பிடிகளிலிருந்து ஒரு நாள் தப்பிய சந்தோஷமே வந்திருந்த மாணவ மாணவியரின் முகங்களுக்கு ஆயிரம் வாட் ஒளி தந்திருந்தது. பயிலரங்கை நடத்திய சுஜாதாவின் தோழமை கலந்த பேச்சு, 'அடடா, இவர் மாதிரி ஓர் ஆசாமி நமக்குப் பேராசிரியராக வராமல் போய்விட்டாரே' என்று ஏங்கும்படிச் செய்துவிட்டது. தேர்வுக்குப் போகும் (நன்கு படிக்கிற) மாணவனின் சிரத்தையுடன் வண்டி வண்டியாக விஷயங்களை யோசித்து, சேகரித்து, தொகுத்து வந்திருந்தார் சுஜாதா.

நகைச்சுவை என்பது என்ன? 'ஒரு கருத்தை மற்றொரு கருத்தோடு முரண்பட வைத்து சந்தோஷத்தை, பரவசத்தைத் தருவது. முடிந்தால் சிந்தனையை உயர்த்துவது!

– இந்த எளிய விளக்கத்துடன் தொடங்கி, இதன் அடியொற்றியே தம் பேச்சை அமைத்திருந்தார் சுஜாதா.



• சுஜாதா



• மேடையில் பேச்சாளர்கள்

'எந்த உண்மையான நகைச்சுவையும் யாரையாவது புண்படுத்தும்' (உதா: சர்தார்ஜி ஜோக்ஸ்) என்கிற உண்மையை விளக்கியவர், 'புண்படுத்தலைக் குறைத்துக் கொள்ள வேண்டியதே நல்ல நகைச்சுவையாளர்களுக்கு அவசியமான குணம்' என்றார்.

"என் தலை வழுக்கை. இதற்கு ஏதாவது இருக்கிறதா?"

"ஓ, என் ஆழ்ந்த அனுதாபங்கள்."

இந்த ஜோக்கை சுஜாதா சொன்னபோது எழுந்த சிரிப்பொலி, "இது மாதிரியான குறைகளையும் உடல் ஊனங்களையும் கேலி செய்யும் ஜோக்குகள் நல்ல நகைச்சுவை அல்ல" என்று அவர் குறிப்பிட்டுக் காட்டிய போது சிந்தனையைத் தட்டியெழுப்புவதாக





இருந்தது.

சிரிப்பை ஒரு கலையாக எண்ணுபவர்கள், எதற்காக சிரிக்கிறோம் என்று அறிந்திருக்க வேண்டும் என்றவர், சரம் சரமாக

நினைவாக ஒரு சிரிப்பரங்கம்!

அள்ளி விட்ட நகைச்சுவைத் தோரணங்களிலிருந்து இரண்டு சாம்பிள்கள்:

• "அப்பா, நானும் மத்த பசங்க மாதிரி வெளில விளையாடப் போகட்டுமா?"

"வாயை மூடிட்டு சீட்டைக் கலைச்சுப் போடு."

• "சார், நீங்க இது மாதிரி துப்பறது எனக்குப் பிடிக்கலை."

"ஸாரி. உங்க டேஸ்டுக்கு எனக்குத் துப்பத் தெரியலை!"

எந்தெந்தத் தருணங்களில் நாம் சிரிக்கிறோம்? என்று சிந்தனையை ஓடவிட்டவர், மிக நுணுக்கமாக அந்த அற்புதக் கணங்களைக் கண்டறிந்து கண்முன் நிறுத்தினார்.

மனிதனுக்குள் இருக்கும் குழந்தை சுபாவத்துக்குத் தீனி கிடைக்கிற போது சிரிக்கிறோம். (கார்ட்டூன் படங்களை ரசிப்பது போல) ஒரு சீரியஸான விஷயத்தில் லயித்திருக்கும் போது சட்டென்று கவனம் ஒரு 'லைட்'டான விஷயத்தின் மீது விழும்போது. (கச்சேரியின் போது வயலின் வித்வானின் வாத்தியத்தில் தந்தி அறுந்தால்... கிரிக்கெட் மேட்சின் போது கிரவுண்டில் நாய் நுழைந்து ரகளை பண்ணும் போது...)

இன்னும் பல விதமாக நகைச்சுவைக் கணங்களைக் கோடிட்டுக் காட்டியவர்,



• ரசித்து சிரிக்கும் கூட்டம்

போது கிளாஸ் இல்லை. மாறாக, தமிழின் தலை சிறந்த நகைச்சுவையாளர்களான ரா.கி. ரங்கராஜன், மதன், கிரேஸி மோகன், சத்யா,' ஜே.எஸ். ராகவன் ஆகியோர் நகைச்சுவை எழுத்து பற்றி ஜாலியாகப் பேசினார்கள்.



• கலந்து கொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கினார் ரா.கி. ரங்கராஜன்

நகைச்சுவையாகக் கதை எழுதுவதில் உள்ள சிரமத்தை விளக்க வந்தபோது, சிரிக்க வைப்பது எத்தனை கஷ்டம் என்பது புரிந்தது.

எஸ்.வி.வி.யின் நகைச்சுவை ரசம் சொட்டும் 'க்ஷேமநிதி' கதையை முழுவதுமாகப் படித்துக் காட்டி, வரிக்கு வரி தாமே ரசித்து, கேட்போரையும் ரசிக்கச் செய்து, சட்டென்று நகைச்சுவையை எப்படி ஒரு தொழில் நுட்பமாக அவர் கையாண்டிருக்கிறார் என்று விளக்கியபோது, வந்திருந்த கல்லூரிப் பறவைகள் உற்சாக ஒலி எழுப்பின!

தமது 'குதிரை' கதையையும் சுஜாதா வாசித்துக் காட்டினார். ஓர் ஆசாமியை குதிரை கடித்துவிட்ட சோகம் அவர் எழுத்தில் எப்படி கொப்பளிக்கும் ஹ்யூமரானது என்று நுணுக்கமாகக் கவனித்து வியந்து போனார்கள் மாணவர்கள்.

கல்லூரி மாணவர்கள் எழுதி வந்திருந்த நகைச்சுவைக் கதை, கட்டுரைகளைப் படித்து, திருத்தி, நகைச்சுவையை எப்படிக் கையாள்வது, எங்கே கையாள்வது, எது சிரிக்க வைக்கும், எது அழவைக்கும் என்று ரகவாரியாக அலசி விமர்சித்து, வகுப்பெடுத்தார். ஆனால் அது வகுப்பு போலில்லை. மாறாக, தோளில் கைபோட்டு அமர்ந்து ஜாலியாக அரட்டை தொனியில் பல நல்ல விஷயங்களை உணர்த்தும் ஒரு இனிய நண்பனின் அரிய உபதேசமாயிருந்தது!

காலை முழுவதும் நிகழ்ந்த இப் பயிலரங்குக்குப் பின் சுவையான மதிய உணவு. மறுபடி கூடியது அரங்கம். இப்

தமக்கு நகைச்சுவையாக எழுத அடி போட்டவர் தமது ஆசிரியர் எஸ்.ஏ.பி. தான் என்று கூறிய ரங்கராஜன், எஸ்.ஏ.பியின் 'அரசு பதில்களி'ல் கொப்பளிக்கும் ஹ்யூமருக்குத் தந்த ஒரு சாம்பிள்:

"தொப்பை ஏன் விழுகிறது?"

"வயிற்றில் இடமில்லாததால்."

சற்றே மிகைப்படுத்துவதன் மூலம் நகைச்சுவையைக் கொண்டு வருவதே பெரும்பாலானோர் கையாளும் வழி என்று கூறிய 'துக்ளக்' சத்யா அதற்குச் சொன்ன உதாரணம் அரங்கில் வெடிச்சிரிப்பை உண்டாக்கியது!

"ஜெயலலிதா இன்னும் இருவத்தஞ்சு வருஷத்துக்கு முதல்வரா இருப்பார்னு அன்னிக்குப் பேசினாங்க. இதுல இருக்கற அபத்தத்தை சுட்டிக்காட்ட நினைச்சோம். '150 வருஷத்துக்கு ஜெ.தான் முதல்வர்'னு கிண்டல் பண்ணி எழுதினோம். சும்மா இருப்பாங்களா? அரசியல்வாதிங்களுக்கு

நம்மை விட சென்ஸ் ஆஃப் ஹ்யூமர் ஜாஸ்தி. 'ஜெ.தான் நிரந்தர முதல்வர்'னு சொல்லிட்டாங்க. இதுக்கு மேல நாம என்ன பண்றது?"

சொல்பவரைப் பொறுத்து ஒரு சாதாரண வாக்கியம் கூட நகைச்சுவையாகி விடும் என்ற சத்யா, "அடுத்த ஆட்சி நமதேன்னு கருணாநிதியோ ஜெயலலிதாவோ சொன்னா சிரிப்பு வராது. இதையே சுப்ரமணியசாமி சொன்னா சிரிக்காம இருக்க முடியுமா?"

• சத்யா



• ஜே.எஸ். ராகவன்



• மதன்



• கிரேஸி மோகன்



உலகத்தி லுள்ள அத்தனை நகைச்சுவையாளர்களின் படைப்பையும் மிக்ஸியில் போட்டு ஒரு அடி அடித்து ஸ்ட்ரா வைத்துக் குடித்துவிட்டு (பெரிய ஏப்பம் விட்டிருப்பார்.) வந்து அன்று பேசிய ஜே.எஸ். ராகவன், பி.ஜி. உட்ஹவுஸி லிருந்து பாக்கியம் ராமசாமி வரை நகைச்சுவையாளர்களின் 'தொழில் நுட்பத்தை'யும் நூற்றுக் கணக்கில் அவர்கள் கையாண்ட உத்திகளையும் அக்கு வேறு ஆணி வேறாக அலசி ஆற்றிய உரை, கூடியிருந்த அத்தனை பேரையும் வியப்பி லாழ்த்தியது. சும்மா படித்து விட்டுச் சிரித்து விட்டுப் போய் விடுகிறோம். சிரிக்கிறபடி எழுதுவது இத்தனை பெரிய சமாசாரமா என்று வாய் பிளந்தனர்.

மிகவும் கேஷுவலாக ஒரு சம்பாஷணை தொனியில் பேச ஆரம்பித்தார் மதன். கல்கியில் தாம் முதல் முதலில் கார்ட்டூன் போட ஆரம்பித்ததை நினைவு கூர்ந்து ஜோக் எழுத முடியாமல் கஷ்டப்பட்டது தொடங்கி இன்று ஒரே ஜோக்கை ஏழு விதமாக மாற்றி எழுதக் கூடிய அளவுக்கு திறமையை வளர்த்துக் கொண்ட வரலாறை மிகச் சுவையாக விவரித்தார்.

"எக்கச்சக்கமா அப்ஸர்வ் பண்ணணும். நிறைய படிக்கணும். அதை விட நிறைய உழைக்கணும். You should never be satisfied" என்று அவர் வழங்கிய அறிவுரை எல்லோருக்குமே – எல்லா விஷயத்திலுங்கூடப் பொருந்துவதாயிருந்தது.

"ஆரம்பக் காலத்துல நான் சும்மா கிறுக்கறதைக் கூட 'பிரமாதம்டா கண்ணா! சூப்பர்!'னு வீட்டுல புகழ்வாங்க. புகழ், மயக்கம் தரக்கூடியதுதான். ஆனா மயங்கிடாதீங்க. நான் மயங்கலை!" என்று அவர் பேசிய போது புகழ் என்ன ஒரு அழகிய ராட்சஸி என்று எண்ணாமல் இருக்க முடியவில்லை!

"**க**ல்கியும் தேவனும்தான் என் நகைச்சுவை எழுத்துக்கு இன்ஸ்பிரேஷன். ஒரு நாடகம் எழுத உட்காருமுன் கல்கியின் கட்டுரைகளையோ, தேவனின் கதைகளையோ கொஞ்சம் படித்து விட்டுத்தான் உட்காருவேன் – மேட்சுக்கு முன்னால் நெட் பிராக்டிஸ் மாதிரி" என்று தொடங்கிய கிரேஸி மோகன், "சிரிப்பில் மெஸேஜ் இருக்கணும்னு அவசியமில்லை. எப்பவும் மெஸேஜ் தர வேலையைத்தான் தபால்காரர் செய்யறாரே!" என்ற போது அரங்கம் அதிர்ந்தது.

தமது நாடக மேடை ஜோக்குகளை அள்ளித் தெளித்த கிரேஸி, தாம் அறிந்த நகைச்சுவைத் துணுக்குகளிலேயே மிகச் சிறந்ததாகக் குறிப்பிட்டது 'சாமா'வின் ஜோக் ஒன்றை:

"நீ ஊமையா?"

"ஆமா!"

கூடியிருந்த கல்லூரி மாணவர்களும் சரி, பிற கல்கி அன்பர்களும் சரி, அன்றைய தினம் முழுவதும் சிரித்துக் கொண்டேதான் இருந்தார்கள். ஆனால் மனதுக்குள் சுஜாதா எழுப்பிய சிந்தனையும் சுழன்று கொண்டே இருந்தது. "நாம் எதற்காக சிரிக்கிறோம் என்பதை உணர்ந்திருக்க வேண்டும்." ○

— ஔரங்கசீப்

படங்கள் : ஸ்ரீஹரி

உளுத்துப் போன

ஒன்றிரண்டல்ல – 4400 மூட்டை உளுத்தம் பருப்பு யாருடைய சமையலறையையும் எட்டாமல் சமாதியாகியிருக்கிறது!

உண்ணத் தகுதி இல்லாத அளவுக்கு கெட்டுப் போய் விட்டது என்ற காரணத்தால் இந்த முடிவு. எப்படி நடந்தது இப்படி ஒரு சேதாரம்? சென்னைத் துறைமுகத்துக்கு ஒரு கப்பல் முழுவதுமாக நிரப்பப்பட்டு வந்து சேர்ந்த அந்த உளுத்தம் பருப்பின் பின்னணிதான் என்ன? சம்பந்தப்பட்டவர்களை அணுகிக் கேட்டோம்.

சென்னைத் துறைமுகத்தின் தலைவராகப் பணியாற்றும் மச்சேந்திரநாதன் விளக்கினார்:

"துறைமுகத்துக்கு வரும் சில வணிகப் பொருள்களை இங்கு சம்பந்தப்பட்டவர்கள் பெற்றுக் கொள்ளாமலே போவதும் உண்டு. உதாரணத்துக்கு இங்குள்ள ஒரு வியாபாரி, 'சரக்கு இங்கு வந்து சேர்ந்த பிறகுதான் பணம் செலுத்துவேன்' என்கிற அடிப்படையில் பொருளை வாங்குகிறார் என்று வைத்துக் கொள்வோம். வெளிநாட்டிலிருந்து அந்தப் பொருள் வந்து சேரும் சமயம், அதன் விலை இங்கு வெகுவாகச் சரிந்து விட்டிருந்தால், அதைப் பெற்றுக் கொள்ளாமலே இருந்து விடுவதுண்டு. அப்படிப்பட்ட பொருள்களை 'Abandoned Goods' என்போம். குறிப்பிட்ட காலம் வரை யாரும் பொருளை எடுத்துச் செல்ல வில்லையென்றால் அதைப் பொது ஏலத்தில் விட எங்களுக்கு அதிகாரம் உண்டு. குறிப்பிட்ட உளுத்தம் பருப்பு ஸ்டாக், உணவில் இடம் பெறத் தகுதியில்லாதது என்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டது" என்றவர், மேலும் விவரங்களுக்குத் துறை முகத்தின் டிராஃபிக் மானேஜரான திக்பதியை அணுகச் சொன்னார்.

"பொது ஏலத்துக்கு விடுவதற்கு முன்னால் கிண்டியில் உள்ள பரிசோதனைச் சாலைக்கு இதன் சாம்பிளை அனுப்பினோம். (சில சமயம் மைசூரில் உள்ள உணவு ஆராய்ச்சி மையத்துக்கும் அனுப்புவதுண்டு.) இந்த உளுத்தம் பருப்பு "மனிதர் உண்ண ஏற்றதல்ல" என்று அவர்கள் கூறியதும், கோழி போன்ற கால்நடைகளுக்கு இதனைப் பயன்படுத்த முடியுமா என்று அதற்கான ஆராய்ச்சி சாலைக்கு சாம்பிளை அனுப்பினோம். 'அதற்கும் வாயக்கில்லை' என்று முடிவு வரவே, அத்தனை மூட்டைகளையும் அழிக்கும்படியானது" என்றார்.

பொது ஏலத்தில் இப்படிப்பட்ட 'அனாதை'ப் பொருள்களை விற்றால், ஏலச் செலவுகள், சுங்கவரி, கப்பல் போக்குவரத்து, தாமதக்கட்டணம் அத்தனையும் போக ஏதாவது தொகை மீந்தால் அதைத்தான் ஷிப்பிங் ஏஜெண்டுகளுக்குக் கொடுப்பார்களாம்.

ஆயிரக்கணக்கான உளுத்தம் பருப்பு மூட்டைகளுக்கு இப்போது நேர்ந்த கதி சுமார் பத்து வருடங்களுக்கு முன்பு அமெரிக்காவிலிருந்து இறக்குமதியான (குழந்தைகளுக்கென்று இலவசமாக அனுப்பப்பட்ட) கோதுமைக்கு



• துறைமுகப்பகுதி

உளுந்தின் கதை!

நேர்ந்ததுண்டு. உண்ணத் தகாதது என்று பரிசோதனையில் கண்டு பிடிக்கப்பட்டாலும், அதைக் கடலிலேயே கொட்டிவிட அனுமதி கிடைத்தது. ஆனால் இந்த உளுந்தம் பருப்பைக் கடலில் கொட்டினால் கடல் வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படலாம் என்று மாசுக்கட்டுப்பாடு மையம் கூறிவிட, கொடுங்கையூரில் உள்ள குப்பை மேட்டில் இது கொட்டப்பட்டது.

ஸீ ஹார்ஸ் ஷிப்பிங் கம்பெனியின் மானேஜரான ஸ்ரீகாந்த் தாஸ் கூறிய சில தகவல்கள் நமக்கு வியப்பை அளித்தன.

"அக்டோபர் 1995வில் மியன்மரிலிருந்து (பர்மா) வந்திருக்கிறது இந்தக் கப்பல். ரங்கூனிலிருந்து இதை அனுப்பியது "மியன்மர் ஏற்றுமதி இறக்குமதி சர்வீஸஸ்" என்ற நிறுவனம். 'ஃபைவ் ஸ்டார் லைன்' என்ற சென்னை ஷிப்பிங் நிறுவனத்துக்கு உளுந்து அனுப்பப்பட்டது. அதைக் கையாளும் ஏஜெண்டாக நாங்களே நியமிக்கப்பட்டோம்.

"சரக்கு வந்த இரு வாரங்களில் அதை யாரும் எடுத்துப் போகாததால், என்ன செய்யலாம் என்று கேட்க, ஃபைவ் ஸ்டார் லைன் இந்த சரக்கை அப்படியே விட்டுவிடச் சொல்லி விட்டது. இதைத் துறைமுக அதிகாரிகளிடம் தெரிவித்துவிட்டு, "சரக்கு வேண்டாம். அதைக் கொட்டிக் கொண்டு கப்பலைத் தாருங்கள்" என்றோம். இதற்கான நோட்டீஸை எழுத்துபூர்வமாக 19.10.95 அன்றே நாங்கள் கொடுத்தும், 14.3.96 அன்றுதான் சரக்கை இறக்கி அவர்களுடைய கிடங்கில் கொட்டிக் கொண்டார்கள். பிறகு சோதனையில் அது பயன்படுத்தக் கூடாதது என்று தெரியவர, சட்டப்படி அதை அழிப்பதற்கான முயற்சிகளும் செலவும் எங்களைச் சேர்ந்ததுதான் என்று சொன்னார்கள். இதைத் தொடர்ந்து மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், சென்னை நகராட்சி, சுங்கவரி அலுவலகம், காவல்துறை, கிடங்குப் பிரிவு என்று பல்வேறு அரசுத் துறைகளோடு தொடர்பு கொண்டோம். 'சரக்கை எரித்து விடலாமா?' என்ற கேள்விக்கு, 'கூடாது. குழி தோண்டிப் புதைக்க வேண்டும்' என்றார்கள்.



"ஒரு வழியாக 24.10.98 அன்று மேற்கூறிய எல்லாப் பிரிவின் பிரதிநிதிகளின் முன்னிலையில் புல்டோசரைக் கொண்டு சுமார் நாலாயிரம் சதுர அடி குப்பை மேட்டை ஆழ உழுது, அதில் அத்தனை உளுந்தையும் கொட்டி மண்ணோடு மண்ணாகக் கலந்து விட்டோம். இத்தனை முயற்சிகளுக்குமாக சுமார் இரண்டரை லட்சம் ரூபாய் செலவாயிற்று...."

'காசையும் கொடுத்து தேளையும் கொட்டிக் கொண்டானாம்' என்று வசனம் உண்டு... இது காசையும் கொடுத்து உளுந்தையும் கொட்டிய கதை?

— ஜி.எஸ்.எஸ்.

படங்கள் : ஸ்ரீஹரி

நவம்பர் 23 – புட்டபர்த்தி சாய்பாபாவின் 73வது பிறந்தநாள். கோலாகலமாக இதனைக் கொண்டாடும் அவரது லட்சக்கணக்கான பக்தர்களில் சிலரிடம், "எந்த அம்சம் உங்களை பாபாவின்பால் ஈர்த்தது?" என்று கேட்டோம். (கருத்து சொன்னவர்களுள் சிலர் தங்கள் புகைப்படம் தர மறுத்து விட்டார்கள்! 'பாபா படத்தைப் பிரசுரித்தாலே போதும்' என்று சொல்லி விட்டார்கள்.)

அனுராதா ரமணன்:

"எதிலும் நல்லதையே பார்ப்பது நல்லது. நாம் எதிர்பார்ப்பது நடந்தால் நல்லது. நடக்காவிட்டால் அதைவிட நல்லது"– என்ற மனோபாவம் உயர்ந்தது. ஸ்ரீ சாயிபாபா சிறந்த ஆன்மீகவாதியா என்ற கேள்வி எழுப்பப்பட்டால் "அப்படியிருந்தால் சந்தோஷம். அப்படி இல்லாவிட்டால் அதை விட சந்தோஷம்" என்பேன். அரசு கூட செயல்படுத்தாத பல நல்ல விஷயங்களை அவர் சாதித்துக் காட்டியிருக்கிறார். அவரால் ஒரு சாலையையே அமைக்க முடிந்திருக்கிறது. விபூதி வரவழைத்தல் போன்றவற்றில் எனக்கு நம்பிக்கையில்லை. அது சித்து வேலை. ஜாங்கிரியைக் காட்டி குழந்தைகளைப் படிக்கவைப்பது போல. அதிலோ, அது போன்றவற்றிலோ நான் தெய்வீகத் தன்மையைக் காணவில்லை. ஆனால் இதய சிகிச்சைக்கென்றே அவரால் ஒரு மருத்துவமனையை எழுப்ப முடிகிறது; பெருமை பெற்ற வெளிநாட்டு மருத்துவர்கள் எல்லாம் கூட அங்கு வந்து காசின்றி ஏழைகளுக்கு வைத்தியம் பார்க்கிறார்கள் என்ற நிலையை உண்டாக்கி இருக்கிறாரே, அதில்தான் நான் தெய்வீகத் தன்மையைக் காண்கிறேன்.

இது ஒருபுறமிருக்க, அவரது பொன்மொழிகள் அருமையானவை. இதோ ஓர் உதாரணம்: நாம் ஒரு தியேட்டரில் இருக்கிறோம். அப்போது அது இடிந்து விழப் போகிறது எனும் நிலை ஏற்பட்டால் ஏதாவதொரு வாசல்வழியாக அவசரமாக வெளியேறி "அப்பாடா தப்பித்தோம்" என்று பெருமூச்சு விடுவோம் இல்லையா. அப்படித்தான் உடம்பு என்ற தியேட்டருக்குள் இருக்கும் ஆன்மா, ஏதாவதொரு வாசல் வழியாக வெளியேறத் துடிக்கிறது. வெளியேறுவதை மரணம் என்கிறோம். அது ஆன்மாவுக்குச் சுகம்!"

• அனுராதா ரமணன்



டாக்டர் ஆர். பாலகிருஷ்ணன்:


கர்னூலில் 1956ல் தொலைபேசித் துறையில் பணியாற்றிய சமயம். என் நண்பரின் கல்யாண விஷயமாக ஒரு ஜாதகம் பொருந்தி வந்தது. பாபா அனுமதி கிடைத்தால்தான் கல்யாணம் என்று தீர்மானமாகச் சொல்லி விட்டனர். அந்த வீட்டுப் பூஜையறையில் உள்ள அவரது படத்தைப் பார்த்தேன். அவரது தலைமுடி, அங்கி, சிரிப்பு எல்லாமே என் மனத்தில் வெறுப்பை மூட்டின. ஆனால் அதே கல்யாணம் வெகு விமரிசையாக நடந்தேறியது– பாபாவின் பரிபூரண ஆசியுடன். என் உள்ளத்தில் ஒரு கலக்கம். என்றாலும் பாபா பக்தி ஏற்பட்டு விட்டதா என்று சொல்ல முடியவில்லை. அடுத்த இரண்டே ஆண்டுகளில் பாபா என் உள்ளத்தில் அமர்ந்து விட்டார். அதே தலைமுடி, அங்கி, சிரிப்பு எல்லாமே எனக்கு மதுரமாக இருந்தது. பாபா மாறவில்லை; என்னை மாற்றிவிட்டார். அவரது பேச்சுக்கள், பஜன், கட்டுப்பாடு, ஆன்மிகக் குறிப்புகள், தொண்டு, அவரது பக்தர்களிடம் நான் கண்ட எளிமை எல்லாமே சிலிர்க்க வைத்தன. ஜாதி, மதம், கல்வி, பதவி அனைத்திற்கும் அப்பாற்பட்டவர் பாபா. கிருஷ்ண பக்தனான நான் பாபாவையே கண்ணனாகப் பார்க்கிறேன்;



• ஸ்ரீநிவாசன்



• பாலகிருஷ்ணன்


பாபா - 73

பாடுகிறேன்; தொண்டு செய்கிறேன். பாபாவின் உபதேசங்கள் வெகு எளிமையானவை. நிச்சயமாகப் புரிந்துக் கொண்டு செயல்பட முடியும்.

மாதவன் (வங்கி ஊழியர்):

வீட்டில் தொடர்ந்து துக்கங்கள் ஏற்பட்டன. புற்றுநோய் கண்டுபிடிக்கப்பட்டு, ஒரே மாதத்தில் என் அம்மா இறந்தார். இது நடந்த ஓரிரு மாதங்களிலேயே என் அக்கா சாலை விபத்தில் அடிபட்டு கோமாவில் கிடந்தாள். அவளது கணவரோ, ஷார்ஜாவில். இதற்குக் கொஞ்ச காலம் முன்புதான் அவர்களது குழந்தை நீச்சல் குளத்தில் விழுந்து இறந்திருந்தது.

இந்த சூழலில் செயலிழந்து போனோம். பிறகு சிலரது ஆலோசனையின் பேரில் 'ஒயிட் ஃபீல்டு'க்கு விவரம் தெரிவித்து பாபாவின் அருள் வேண்டினோம். கூரியரில் பிரசாதம் (சாக்லேட்) வந்து சேர்ந்தது. அது வந்த சில நாட்களில், மரணக் கண்டத்தைத் தாண்டிவிடவில்லை என்றாலும் அக்காவின் உடல் நிலையில் ஏற்பட்ட சில மாறுதல்களைக் கண்டு டாக்டரே ஆச்சர்யப்பட்டார். அடுத்த இரு வாரங்களில் அக்கா இறந்து விட்டாலும் அதற்குள் அந்த அதிர்ச்சியைத் தாங்கும் பக்குவத்தை பாபா எங்களுக்குக் கொடுத்துவிட்டார்! பிறகு அடிக்கடி 'சுந்தரம்' செல்லத் தொடங்கினேன். எந்தவித வியாபார நோக்கமும் இல்லாத, அவர்களது பொதுநல சேவை கவர்ந்துவிட, தொடர்ந்து பாபா பக்தனாக ஆகிவிட்டேன்.

ரேணுகா தேவி (குடும்பத் தலைவி):

"**க**ட்டுப்பாடான எங்கள் குடும்பத்தில் பெண்களை வெளியில் அனுப்ப மாட்டார்கள். ஆனாலும் என் பதினாறாவது வயதிலிருந்து எங்கள் குடும்ப டாக்டரான புன்னைவனம் அவர்களின் வீட்டு பஜனைக்கு மட்டும் வாரம்தோறும் செல்ல அனுமதிக்கப்பட்டேன். அப்போது கூட நான் பாபாவை இறை அவதாரமாகக் கருதிவிடவில்லை.

பிறகு ஒரு நாள் என் சகோதரன் ஒயிட்ஃபீல்டுக்குக் கிளம்ப, நானும் என் சகோதரியும் அவருடன் அங்கு செல்ல ஆசைப்பட்டோம். இதற்கு அனுமதிதர மறுத்த எங்கள் அப்பா, மாலை வீடு வந்தவுடன் நாங்கள் பஜனையில் ஈடுபட்டிருந்ததைப் பார்த்தோ என்னவோ, எங்களையும் போக அனுமதித்தார். டிக்கட்டை முன்பதிவு செய்திராததால் பல கஷ்டங்களுக்கிடையேதான் செல்ல முடிந்தது. அங்கே எங்களுக்கு வெகு தூரத்தில் அமர்ந்திருந்த பாபா, நன்றாகத் திரும்பி எங்களைப் பார்க்க, சந்தோஷத்தின் உச்சிக்கே சென்று விட்டோம். திருமணமான பிறகு கூட்டுக் குடும்பச் சூழல் மற்றும் நேரமின்மையால் பாபாவின் தொண்டுகளில் ஈடுபடுத்திக் கொள்ள முடியவில்லை. தனிக்குடித்தனம் வந்த பிறகு பாலவிகாஸில் ஒரு குருவாகப் பணியாற்றி குழந்தைகளுக்கு ட்யூஷன் எடுத்து நிறைவு பெற்று வருகிறேன்.


முரளி (சிறு வியாபாரி):

ஒரு நண்பருடன் அவரது நிறுவனத்தில் பேசிக் கொண்டிருந்தபோது அங்கிருந்த காலண்டரில் உள்ள பாபாவின் படம் என்னைப் பார்த்துக் கண் சிமிட்டுவது போல் இருந்தது. ஆச்சர்யம் பொங்க அந்த காலண்டரை நான் கேட்க, அது பின்னொரு நாளில்தான் கிடைத்தது. வீட்டில் பாபாவுக்கு ஆதரவுக்குரல் இல்லை என்பதால் அந்தப் படத்தை மறைத்து வைத்தேன். என்றாலும் அதற்கு வைக்கப்படும் பூ காணாமல் போவது போன்ற சிறு அற்புதங்கள் சில நடந்தன. எல்லாவற்றையும் விட முக்கியமானது அந்தப் படம் வீட்டுக்கு வந்த நாற்பது நாட்களுக்குள் நான் முழுமையாக மாறியிருந்தேன். புகை, மது போன்ற பழக்கங்கள் அடியோடு நீங்கியது.தொடர்ந்து பாபாவை உபாசித்து வருகிறேன்.

ஸ்ரீனிவாசன்:

நான் மும்பையில் இருந்தபோது, 'இல்லஸ்டிரேடட் வீக்லி' இதழின் ஓர் அட்டைப் படத்தில்தான் முதல் முதலாக பாபாவை தரிசித்தேன். அப்போது மிகவும் கஷ்டத்தில் இருந்தேன். பணப் பிரச்னை மட்டுமல்ல; என் மனைவிக்குப் பிரசவ நேரம். பிரசவம் மிக சிக்கலாக இருக்கும் என்று டாக்டர்கள் பயமுறுத்தியிருந்தார்கள். ஏனோ என் மனம், அட்டைப்படத்தில் பார்த்த பாபாவின் மீதேயித்திருக்க, அந்த இதழில் படித்த கட்டுரையின் தாக்கத்தால், 'இவர் எங்கிருந்தாலும் நமக்கு உதவுவார்' என்று தோன்றியது. தொடர்ந்து வழிபட்டு வந்தேன். நம்ப முடியாத விதமாக சிக்கலேதும் இன்றி என் மனைவிக்கு சுகப்பிரசவமானது! பாபாவே எங்கள் தெய்வமானார்!

பேட்டி: **மணி**



✉ கர்நாடக அரசியலுக்கே கேலிக் கூத்தாக விளங்கி வரும் தேவகௌடாவின் சகுனி வேலையை இதை விட யாரும் விமர்சிக்க முடியாத அளவில் தலையங்கம் எழுதியிருப்பது சிறப்பு.
கும்பகோணம்-1, எஸ்.கே. மூர்த்தி

✉ நீதிபதி மோகன் அறிக்கை பற்றிய கட்டுரை படித்தேன். இம் மாதிரி அசாதாரணமான விஷயங்களிலாவது அரசு 'சிவப்பு நாடா' மெத்தனத்தைக் கைவிட வேண்டியது அவசியம் மட்டுமல்ல; அவசரமும் கூட. கலைஞர் அரசாவது முன் மாதிரியாகத் திகழட்டும்!
அரசரடி, நெல்லை வி. சிவா

✉ 'நகைக் கடைகள் அடிக்கும் பகல் கொள்ளை!' என்ற இவ்வார கவர் ஸ்டோரி, ஒட்டுமொத்த பெண்ணினத்தை எச்சரிக்கை செய்திருந்தது. இதுவரை எந்த ஒரு பத்திரிகையும் தொட்டுப் பார்க்காத சப்ஜெக்டினை நல்லதொரு கவர் ஸ்டோரியாக்கி பெண்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்த முற்பட்டிருந்த கல்கிக்கு நன்றி.
தோட்டக்குறிச்சி,
இரா. வளையாபதி.

'ஆ' பிரிவு விமர்சனம்!

✉ தமிழ் சினிமாவை, பத்திரிகைகள் விமர்சிப்பதில் இரண்டு வகை உண்டு:

அ. நடிப்பு பிரமாதம், இசை ஓகோ, ஒளிப்பதிவு டாப் என மேலோட்டமான விமர்சனம்.

ஆ. நிறை குறைகளை வித்தியாசமான முறையில் சுட்டிக் காட்டி திரைப்படத்தை விடவும் சுவாரஸ்யமாகச் செய்யும் விமர்சனம். கல்கி விமர்சனம் எப்போதும் 'ஆ' பிரிவு என்பதில் சந்தேகமில்லை.
பொன்மலை, ஆர். பிரகாஷ்.

✉ கல்கி 8.11.98 இதழில் லலிதா செல்லப்பா எழுதிய 'ஜோக்' படித்து வீட்டிலுள்ள எல்லா காலண்டர்களையும் புரட்டோ புரட்டுன்னு புரட்டி, 'நவம்பர் பத்தாவது மாசமா? பதினொன்றாவது மாசமா?' என்று குழம்பி தலையைப் பிச்சிக்கிட்டேன்.
சென்னை - 39, சிம்மவாஹினி.

✉ 18.10.98 தேதியிட்ட 'கல்கி' இதழில் "மறக்க முடியவில்லை" என்ற தலைப்பில் வெளியாகியுள்ள என் பேட்டியில் என் அருமைச் சகோதரிகளைப் பற்றி குறிப்பிடும்போது இரண்டு தவறுகள் நேர்ந்துள்ளது.

என் மூத்த சகோதரி மீனாக்ஷி பூர்ணம் என்னுடைய இன்னொரு சகோதரியின் மகன் திருமணத்துக்கு முன்னதாக மொட்டை மாடியிலிருந்து கீழே விழுந்ததாக உங்கள் நிருபர் எழுதியிருக்கிறார். உண்மையில் என் அண்ணன்- 'உமாசந்திர'னுடைய மகன் திருமணத்தின்போதுதான் இந்தத் துயர சம்பவம் நிகழ்ந்தது. என் கடைசித் தங்கை லோகநாயகி குடும்பத்தில் ஒரு மகனைத் தவிர மற்றவர்கள் ஆற்றில் மூழ்கி இறந்ததாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். இது தவறு. லோகநாயகிக்கு இரண்டு மகன்கள். 22 வயது, 16வயது. இருவருக்கும் நீந்தத் தெரியாததால் கேரளத்தில் ஆற்று நீரில் மூழ்கி, இறந்து போயினர். இரண்டு குழந்தைகளையும் இழந்துவிட்ட என் உத்தம சகோதரி துக்கச் சுமையைத் தாங்க முடியாமல் அந்தச் சுமைக்கே பலியானாள். நாலு பேர் கொண்ட குடும்பத்தில் மூன்று பேர் மறைந்தபின், லோகநாயகியின் கணவர் மட்டுமே மிஞ்சியிருக்கிறார். உடல் நலக் குறைவால் இக் கடிதம் எழுதத் தாமதமாகிவிட்டது.
சென்னை, பூர்ணம் விசுவநாதன்.
(தவறுக்கு வருந்துகிறோம். - ஆர்.)

✉ கோவையில் கல்கி நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தை நேரில் காணமுடியாத என்னைப் போன்ற பல்லாயிரம் வாசகர்களுக்கு கட்டுரை, விழாவை நேரில் பார்த்த உணர்வைத் தந்தது.
தஞ்சாவூர், ஜி. ராமதாஸ்.

✉ விழாவை மிக உயிரோட்டமாக, அழகாக நடத்திய அறிவிப்பாளர் ஜெயந்தி வெங்கடேசன் பற்றி ஒரு வரி குறிப்பிடவில்லையே!
கோவை, ரோஹிணி

✉ கல்கி 8.11.98 இதழ் நீங்கள் கேட்டவை பகுதியில் ஆலங்குளம் ஆர். சாலமோன் கேட்டுள்ள கேள்வியே தவறானது. கலைஞர் பேசியது இதுதான்: "நான் நூறாண்டு வாழ்வது என் கையிலோ, உங்கள் கையிலோ இல்லை. ஆண்டவன் கையில்தான் உள்ளது என்று நான் கூற மாட்டேன். அது இயற்கையின் கையில்தான் உள்ளது."
கோவை, ஏ.எஸ். மகேஸ்வரன்.

வட்டமேஜை

● வி. பி. மகராசி, பாஸ்டின் நகர்.

? மகரிஷி தயானந்த் பல்கலைக் கழகம் வழங்கிய கௌரவ டாக்டர் பட்டத்தை அத்வானி ஏற்க மறுத்து விட்டது பற்றி....?

! நாகரிகமான செயல். பாராட்டுகிறோம்.

● கே. பெருமாள், கூனியூர்.

? ஒருவேளை 'ஜெ' ஆட்சிக்கு வந்தால் அவர்மீதுள்ள வழக்குகள் மறைக்கப் படுமா?

! மறைக்கப்படுமாவா...? குழிதோண்டிப் புதைக்கப்படும்! அதனால்தானே அவற்றைத் தாமதப்படுத்த தம்மாலானதைச் செய்கிறார்.

பா.ஜ.கவின் தலைவலி மம்தாவா? அம்மாவா?

● ச. தங்கமணி, சந்திரப்பட்டி.

? டெல்லி பிளாட்பாரத்தில் கூவிக் கூவி வியாபாரம் பார்த்த சதீஷ் சர்மா எப்படி 2500 கோடிக்கு சொத்து சேர்க்க முடித்தது...?

! சதீஷ் சர்மாவை விடவும் யம கிங்கரர்கள் இருக்கும் தமிழ்நாட்டிலிருந்து கொண்டா இப்படியொரு கேள்வி!

● ஆ. தமிழ்துரைசாமி, பாலசமுத்திரம்.

? சோனியா சம்மதத்தின்பேரில்தானே காங்கிரஸ் - அ.தி.மு.க. உறவுக்கு திண்டிவனத்தார் பச்சைக்கொடி காட்டியிருக்க முடியும்...?

! சந்தேகமென்ன! அதே சமயம் தமிழக காங்கிரஸுக்குள்ளேயே சில தலைவர்கள் சிவப்புக் கொடியும் காட்டுகிறார்கள்! அகில இந்திய அன்னையின் அரசியல் 'முதிர்ச்சி' இதிலிருந்து புலப்பட்டுவிட்டது அல்லவா...!?

● பி.எம். வள்ளி, அரசரடி.

? சந்தோஷ் சிவனின் 'தி டெரரிஸ்ட்' குறும்படம் சர்வதேசத் திரைப்பட விழாவில் கலந்து கொள்ள தேர்வு செய்யப்பட்டுள்ளது பற்றி...?

! மகிழ்ச்சி! நல்ல காமெரா கலைஞர். அவரைப் போன்றவர்களின் திறமையை முழுமையாய்ப் பயன்படுத்திக் கொள்ளும் திரைப்படங்கள் தமிழில் எடுக்கப்படுவதில்லை என்பது வருத்தத்துக்குரியது.

● டி. சதீஷ்குமார், கோவை - 20.

? பா.ஜ.க.வின் தலைவலி மம்தாவா? அம்மாவா...?

! மம்மா!

● ஆர். சாலமோன், ஆலங்குளம்.

? கிளிண்டன் கட்சி அமோக வெற்றி பெற்றது குறித்துத் தங்கள் கருத்து...?

! மோனிகா விவகாரமெல்லாம் கிளிண்டனின் தனிப்பட்ட வாழ்க்கை என்று மக்கள் கருதுகின்றனர். அதனால் அவரது ஆட்சித் திறமை பாதிக்கப்படவில்லை என்று எண்ணுகின்றனர். பாதிக்கப்பட்டது கிளிண்டன் குடும்பத்தினர் மட்டுமே என நினைக்கின்றனர். கிளிண்டனின் சொந்த விவகாரம், தேர்தல் சமயத்தில் எதிர்க்கட்சியினரால் மிக அதிகமாகப் பிரசாரம் செய்யப்பட்ட காரணத்தினாலேயே எதிர்க்கட்சி மதிப்பிழந்து தோல்வியைச் சந்தித்தது.

● க. அருண்சுந்தர், பவித்திரமாணிக்கம்.

? இரண்டாயிரம் ஆண்டில் உலகம் அழியப் போவதாகச் சொல்கிறார்களே... உண்மையா?

! 2001-இல் இதற்குப் பதில் சொல்கிறேன்.

● பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.

? 'மொழி அழிந்தால் அதைச் சார்ந்த இனமும் அழியும்' என்று பொன்னீலன் கூறியது சரியா...?

! சரிதான். மொழியைச் சுற்றி அதற்கேயுரிய பண்பாடு பின்னிக் கிடக்கிறது. மொழியை மறந்து விட்டால் அந்தப் பழக்கங்களும் பண்பாடுகளும் மறைந்து போகும். அம்மொழிக்கேயுரிய இனம் உடல்ரீதியாக அழியா

• கூடிய 'கௌரவம்'!



* அதிர்ச்சி முடிவு



• காவலா!



விட்டாலும் பண்பாடு ரீதியாகத் தொலைந்து போகும்! எனவேதான் தமிழுக்கு ஆபத்து வரும் போலிருந்தால் எதிர்க்கிறோம்.

● ராஜி, கமுதி.

? அய்யணன் அம்பலம் பற்றி...?

! பெரியாறு – வைகை நீர்ப்பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் என்கிற முறையில், பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்த வேண்டும் என்று விடாமல் போராடினார். உருவத்தில் காமராஜர் போல் தெரிந்தாலும் உள்ளத்தில் முத்து ராமலிங்கத் தேவரையே வைத்திருந்தவர். அவரது அகால, அநியாய மரணம் அனைவருக்கும் அதிர்ச்சிதான்.

● ஆர். ராஜதுரை, சீர்காழி. ❑

? ஜாதி அடிப்படையிலான சலுகைகளை ரத்து செய்து விட்டு, பொருளாதார அடிப்படையில் இட ஒதுக்கீடு முறையைக் கொண்டு வந்தால் ஜாதி வேற்றுமை ஒழியும் என்று நான் நம்புகிறேன் – இது பற்றி தராசு என்ன நினைக்கிறது?

! எந்த ஒதுக்கீடுமே காலவரையறையின்றி அமையக் கூடாது என்பது முக்கியம். பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்குச் சலுகை ஒதுக்கீடு போன்றவை அளவு கடந்தால் அவர்கள் சோம்பேறிகளாகி விடவும் வாய்ப்பு இருக்கிறது. அமெரிக்காவில் வேலையற்றவர்களுக்கு உதவித் தொகை உண்டு. அதே சமயம், அவர்களுக்கு ஒன்றன் பின் ஒன்றாக இரண்டு வேலைகள் தரப்படும். இரண்டிலும் அவர்கள் நிலைத்துப் பணியாற்றவில்லையென்றால் உதவித் தொகையும் நிறுத்தப்பட்டுவிடும்!



• குரூர சிந்தனை!

● கே. எம். ஜக்கரியா, எலந்தங்குடி.


? அமார்த்யா சென்னின் பொருளாதாரக் கொள்கையைத் தலைகீழாகப் புரட்டும் நம் நாட்டு அரசியல்வாதிகள், அவர் பெற்ற நோபல் பரிசுக்காகத் தலைமேல் வைத்துப் பாராட்டுவது ஏமாற்றுதானே...?

! காந்தியையே கவிழ்த்து விட்ட நம் தலைவர்களுக்கு அமர்த்தியா சென்னைப் பாராட்டுவதா பிரமாதம்...?

● வே. முருகேசன், சென்னை – 4.

? கற்பழிப்பில் ஈடுபடும் ஆண்களின் ஆண்மையை அகற்றி விட வேண்டும் என நடிகை ரேவதி ஒரு வார இதழுக்குப் பேட்டி அளித்தது பற்றி...?

! குரூரமான, அநாகரிகமான சிந்தனை. பாலியல் பலாத்கார வழக்குகளில் ஆஜராகும் நிபுணரான அமெரிக்க வழக்குரைஞர் ஒருவர் சுட்டிக்காட்டியது போல், தண்டனையைக் கடுமையாக்குவதை விட தண்டனையை உறுதி செய்வதே முக்கியம். அது சரி... இப்படிச் சீறும் ரேவதி இப்போது சென்சார் போர்டு உறுப்பினர். அபத்தமான, பிற்போக்கான, ஆபாசமான காட்சிகளை அவர் முதலில் வெட்டி எறியட்டும்.



• முதிர்ச்சி உதாரணம்!



● பி. நடராஜன், அன்னூர்.

? சமீபத்தில் தங்கள் மனத்தை பாதித்த விஷயம் எது...?

! மாநகராட்சியினர், தெரு நாய்களைப் பிடித்துக் கொல்வதோடல்லாமல், சடலங்களை எரிக்காமல் குப்பை லாரிகளில் தூக்கிப் போடுகின்றனர் என தினமலரில் படத்துடன் வெளிவந்த செய்தி. குரூரம், கொடுமை, ஆரோக்கியக் கேடு! சிங்காரச் சென்னையா? அரக்கர் நகரமா...?!

● ஆர். எஸ். லக்ஷ்மி, வடவள்ளி.

? 'பல வருடங்களுக்கு வழக்குகளை இழுத்தடிக்க எங்களுக்குத் தெரியும்...' என்று நெடுஞ்செழியன் பேசுவது முறையா...?

! நாவலர், போயஸ் தோட்டத்தின் காவலர். வேறு எப்படிச் சிந்திக்க முடியும்?

● இ. ஆர். திருமால், ஆறுபாதி.

? ஒவ்வொரு நாட்டின் முன்னேற்றமும் எதைப் பொறுத்து அமையும்...?

! மக்களுக்கு வழங்கப்படுகிற கல்வியின் தரம்; மற்றும் எத்தனை பேருக்கு வழங்கப்படுகிறது என்ற எண்ணிக்கை. ⬤

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
ஆர். ராஜதுரை,
97, பிடாரி வடக்கு வீதி,
சீர்காழி - 609 110.



● ஆத்ம விசாரணைக்காக, தமிழக மெங்கும் சுற்றுப் பயணம் மேற்கொண் டிருக்கிறார் த.மா.கா. தலைவர் மூப்பனார். போகுமிடங்களிலெல்லாம், 'கட்சி எப்படி இயங்க வேண்டும்; காங் கிரஸுடன் த.மா.கா. அணுகுமுறை எப்படி இருக்க வேண்டும்' என்றெல்லாம் தொண் டர்களைக் கேட்டு, திறந்த மனதுடன் விவாதித்து வருகிறார். ஆனால் காங்கிரஸில் உள்ள சில உற்சாகமுள்ள தோழர்கள், மூப்பனார் குறிப்பிட்ட ஊர்களுக்குச் செல் லும் முன்னரே, அந்த ஊரில் உள்ள த.மா.கா. தோழர்களைச் சந்தித்து 'காங் கிரஸில் த.மா.கா. இணைய வேண்டும்' என்று மூப்பனார் முன் கோஷம் போடும் படி உசுப்பி விடுகிறார்களாம். இதுவரை அவர்களது தூண்டுதல் எடுபடவில்லை என்பது த.மா.கா. தொண்டர்களின் ஆறுதல்!

● நகரில் சில வார்டுகளில் டிஸ் பென்ஸரிகள் கட்டி வருகிறது மாநகராட்சி. ஆனால் அதற்குத் தேவை யான டாக்டர்களை நியமிக்க முதலிலேயே நடவடிக்கை எடுக்காத தால், தினசரி 150 ரூபாய் ஊதியத்துக்கு டாக்டர்களைத் தாற்காலிகமாக நியமிக்க, மன்றத்தில் தீர்மானம் கொண்டு வருகிறார் களாம். இதில் மற்றொரு ரகசியமும் இருக்கிறது என்கிறார் ஒரு கவுன்சிலர். அதாவது 'தாற்காலிகப் பணியாளர்' என்றால் சில விதிமுறைகளைக் கையா ளாமல் நேரடியாக நியமனம் செய்யலா மாம். இதற்கிடையில், நகரில் பல இடங் களில் நடைபாதைக் கடைகள் உட்படப் பல ஆக்ரமிப்புக்களை மாநகராட்சி அகற்றி வருகிறது அல்லவா! இதனால் பல கழகக் கவுன்சிலர்கள் கடுப்பாக இருக்கிறார்கள். இது சம்பந்தமாக எந்த சிபாரிசு வந்தாலும் மேயர் கண்டுகொள்வதில்லையாம்.

தினக்கூலிக்கு டாக்டர்கள்!

''மேயரின் இந்த நடவடிக்கையைப் பாராட்டுகிறோம். ஆனால் மாநகராட்சியின் நீண்ட கரங்கள் தி. நகர் ஏரியாவை மட்டும் தொடுவதில்லையே, அது ஏன்?'' என்று நம்மிடம் அப்பாவித்தனமாகக் கேட் டார் வடசென்னைக் கழகக் கவுன்சிலர் ஒருவர்.

● ஸ்பெஷல் கோர்ட் பற்றிய உயர்நீதி மன்றத் தீர்ப்பை எதிர்த்து அம்மா போட்ட அப்பீல் வரும் 23-ம் தேதியன்று சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு வருகிறதல் லவா! சுப்ரீம் கோர்ட் நீதிபதியான எம். சீனிவாசன் இந்த வழக்கை விசாரிக்கும் மூன்று நீதிபதிகள் பெஞ்சில் ஒருவர். அவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிபதியாக இருந்தபோதுதான் கோடைக்கானல் 'ப்ளசன்ட் ஸ்டே' ஓட்டல் வழக்கு தீர்ப்பில் அம்மாவுக்கு 'நச்'சென்று குட்டு வைத்தார்.

இப்போது அவரை ஸ்பெஷல் கோர்ட் வழக்கை விசாரிக்கும் பெஞ்சிலிருந்து விடுபட வைக்க சில திரை மறைவு வேலை கள் துவங்கி விட்டதாக சுப்ரீம் கோர்ட் வட்டாரம் சொல்கிறது. இது தவிர கலை ஞரையும் சிக்க வைக்க வேண்டுமென் பதற்காக அம்மாவின் வழக்கறிஞர் சில அதிரடி கோரிக்கைகளையும் சுப்ரீம் கோர்ட்டில் வைக்க இருக்கிறாராம். அதில் ஒன்று: சர்க்காரியா கமிஷனால் முகாந்திரம் இருக்கிறது என்று சொல்லப்பட்ட சில ஊழல் விவகாரங்களின் அடிப்படையில் இதே தனிக் கோர்ட்டில், மத்திய அரசு வழக்குகள் தொடர வேண்டும்'' என்பது தான்!

— தில்லப்பா

காதில் விழுந்தவை :




• சுகமான பஸ்!

க்ராண்ட் டச்சி -பஹாந்த் அச்சி!

6

டூரின் துவக்கம் ஒரு மலர்ந்தும் மலராத அழகிய காலைப் பொழுதில் ஆரம்பித்தது. 6.30 மணிக்கு குளித்து முடித்து, ஃப்ரெஷ் ஷாக, எல்லோரையும் "ஹாய்... ஹலோ... குட்மார்னிங்... குட்டே" என விதவிதமாய் 'விஷ்' பண்ணிக் கொண்டோம். நம்மை நெருங்கி வருவதாய் நினைத்துக் கொண்டு அவர்கள் சொல்லும் 'ந...மா...ஸ்...டே'வை, சிரிப்போடு ஏற்றுக் கொண்டு, தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த ப்ரேக்ஃபாஸ்ட் டேபிள்களில் உட்கார்ந்தோம்.



• பாண்ட் அடால்ஃபி பாலம்

அழகழகான பிரம்புக் கூடைகளில் இரண்டு வித 'ப்ரட்'. ஒன்று, பல்லைப் பதம் பார்க்கும் ரகம்; மற்றொன்று கரகரவென்று சங்கு, சக்கரம், நண்டு, தேள் போன்ற வடிவங்களில், வாயில் போட்டால் கரையும் ரகம்! நடுவில் மலை போல சின்னச் சின்ன 'வெண்ணெய்' 'ஜாம்' குவியல்கள் – ஆஸ்திரேலிய வகை! தவிர ஆரஞ்சு ஜூஸ், காப்பி, டீ; முதல் நாள் 'வெஜ்'காரர்களுக்கு 'பிசினாத்து' ரக உணவுதான்; ஆனால், போகப் போக ஸ்விட்ஜர்லாந்தில் கார்ன் ஃப்ளேக்ஸ், ஹாட் சாக்லேட், இத்தாலியில் 'பாரிட்ஜ்' 'யோக்ஹர்ட்' என்று வெரைட்டிகள் கூடின.

சரியாக, ஏழடிக்க ஐந்து நிமிடத்திற்கு முன்னால், லக்கேஜை எல்லாம் சரி பார்த்து, பயணிகளை உள்ளே நுழைத்துக் கொண்டு புறப்பட்டது பஸ்.

பஸ்ஸின் மிதமான ஹீட்டர் கதகதப்பு இதமளிக்க, கைடு மரியாவின் குரல் குழலாய்த் தாலாட்ட, கண்கள் அப்படியே செருகிக் கொண்டு "தூக்கமுன் கண்களைத் தழுவட்டுமே" பாடின.

மனசு மட்டும், இத்தனை தூரம் வந்துவிட்டு, ஐரோப்பா வின் அழகை ரசிக்காமல் தூங்கவா தூங்குகிறாய்?" என மிரட்டியவாறே 'தூங்காதே தம்பி தூங்காதே' இசைத்தது. தினமும் அந்த முதல் அரை மணி நேரம் எல்லோருக்கும் இதே போராட்டம்தான்!

முதல் நாள் அவரவர் விருப்பப்படி

ஜெயஸ்ரீ ராஜ்

அமர்ந்து கொண்டோம். அடுத்த நாளி லிருந்து, அவரவர் இருக்கையிலிருந்து ஒன்று விட்டு அடுத்ததில் அமர வேண்டும் என்ற 'ரூல்'. இந்த முறைப்படி, அனைவருக்கும் பஸ் முழுக்க ஒரு ரவுண்ட் வரும் வாய்ப்புடன், வேடிக்கை பார்க்க வசதியான சீட்டுகளும் பிராப்திக்குமே!

அன்று லக்ஸம்பர்க்கை நோக்கிப் பயணித்தோம்; இதை 'கிராண்ட் டச்சி ஆஃப் லக்ஸம்பர்க்' என்கிறார்கள். ஒரு காலத் தில் நெதர்லாண்ட்ஸின் ஓர் அங்கமாய் இருந்து, இப்போது தனித்தியங்குகிறது. Be - பெல்ஜியம், Ne - நெதர்லாண்ட்ஸ், Lux - லக்ஸம்பர்க் என்ற மூன்றையும் இணைத்து, Benulux நாடுகள் என அழைக்கிறார்கள்.

இங்குள்ள 3,60,000 மக்களுக்கு 150 வங்கி கள்! இந்தச் சிறிய நாட்டின் தனி நபர் வருமானம்தான் ஐரோப்பாவிலேயே அதிக மானது! பெரும்பான்மையானவர்கள் சுக வாசிகள். ஒரே ஒருவர் மட்டும் தனியாக வாழும் இல்லங்கள் 23,600! பத்தாயிரத்துச் சொச்சம் வீடுகளில்தான் ஐந்துக்கு மேற் பட்டவர்கள் வசிக்கிறார்கள்.

ஒரு பாதி மக்கள் பேசுவது ஃப்ரெஞ்சு மொழி. மறுபாதி ஜெர்மானிய மொழி! வருட மொருமுறை எல்லோரும் சென்று, ராணிக்கு வந்தனம் தெரிவிக்கிறார்கள். அரச பரம்பரை யின் முன்னிலையில் பலர் ஜோடி சேர்ந்து, திருமணமும் புரிந்து கொண்டு, அவர்கள் ஆசியுடன் திரும்புகிறார்கள் – இதை "Latched, matched and despatched" என வேடிக்கையாகக் குறிப்பிடுகிறார்கள்.

ஏனைய ஐரோப்பிய நாடுகளிலிருந்து டெலிவிஷன் நிகழ்ச்சிகளை வாங்கி இங்கே ஒளிபரப்புகிறார்களேயன்றி சொந்த சரக்கு ஏதுவும் கிடையாது!

டூரிஸ்டுகள் அதிகமாகப் புழங்கும் இடம் 'எக்ஸ்டர்மாஷ்' – இங்கு வருடந்தோறும், ஜூனில், ஒரு செவ்வாயன்று நடைபெறும் திருவிழா பிரசித்தம். ஊர்வலத்தில் மனி தர்கள் பாடி, ஆடி, பிரார்த்தனை செய்து கொண்டே மூன்று அடி முன்னாலும், இரண்டு அடி பின்னாலுமாக நகர்ந்து செல் வார்களாம்!

இந்த ஊரில் பாண்ட் அடால்ஃப் என் றொரு பெரிய பாலமிருக்கிறது. இயற்கைக் கற்களாலேயே கட்டப்பட்ட முதல் பாலம்; ட்யூக்கின் பெயரால் அழைக்கப்படுகிறது. இதன் சுற்றுச் சூழலும் கம்பீரமும் ஆளை மயக்குகின்றன.

லக்ஸம்பர்க்கில் ஒரு சின்ன 'காப்பி

ப்ரேக்' – முக்கால்வாசியும் செல்ஃப் சர்வீஸ் முறைதான். 'டீ'க்கு இரண்டு பிஸ்கட் இலவசம் – சிலோன் டீ என்று போட்டிருந்தது; ஒரு கப் விலை 70 ரூபாய். டீ சாப்பிட்டால் 'டாய்லெட்' ஃப்ரீ! இல்லாவிட்டால் தனிக் கட்டணம்!

பெரும்பாலும் பஸ் பயணத்திலேயே – ஒரு யுத்த நினைவுச் சின்னம், ஒரு கதீட்ரல், ஒரு ட்யூக்கின் அரண்மனை என்று – லக்ஸம்பர்க்கைச் சுற்றிக் காட்டி விட்டனர்.

அன்று ஒரே நாளில் நான்கு நாடுகளில் சுகமாய் பயணித்த அனுபவம் புதுமையாயிருந்தது. பெல்ஜியத்திலிருந்து புறப்பட்டு லக்ஸம்பர்க்; அங்கிருந்து ஃப்ரான்ஸ் வழியாக ஸ்விட்ஜர்லாந்து!

இங்கே நாள் முழுதும் பயணித்தும் சிறிதும் களைப்பே தெரியவில்லை; குண்டு குழி என்றால் என்ன என்று கேட்கும் ரோடுகள் காரணமா, 180 டிகிரிகளில், எந்தக் கோணத்தில் வேண்டுமானாலும் அமர்ந்து கொள்ளும் வசதியைத் தந்த மெத்தென்ற இருக்கை காரணமா, அல்லது வழி எல்லாம் அலுக்காமல் அழகுகளை அள்ளித் தந்த இயற்கை காரணமா என்பது புரியவில்லை!

வெளியின் பச்சைப் பசேல் போரடித்தால், உள்ளே பச்சைக் கிளிகள் கொஞ்சும் காட்சிகள், மாறுதலுக்கு இதமளித்தன. நான்கு 'ஜஸ்ட் மாரீட்' ஜோடிகளும் எங்களுக்குப் பக்கவாட்டில் ஒன்றன் பின் ஒன்றாய் அமர்ந்து கொண்டனவா! அவ்வப்போது சுற்றியுள்ள உலகத்தைப் பற்றிய நினைவோ கவலையோ இல்லாத குலவல்கள் – சீச்சி... இதை எல்லாம் யார் வேலை மெனக்கெட்டுப் பார்த்தார்கள்? எல்லாம் தானாக கண்களில் வந்து மோதிய காட்சிகள் தாம்! வேடிக்கை என்னவென்றால், முன்னாலிருக்கும் ஜோடியிலிருந்த பெண், பின் ஜோடி ஆணை முத்தமிடுவதும், இங்கேயுள்ள மனைவி, அங்கேயுள்ள கணவனின் தலையை வருடுவதுமாக... என்னவோ, வீடியோ கோச்சாக இல்லாத குறை களையப்பட்டு, பொழுது ஓடியே விட்டது!

ஐரோப்பா முழுவதும் ரயில் மூலமாகவும் கண்டு சுகிக்க, 'யுரோ ரயில்' வசதி செய்கிறது. ஐந்து நாள், பத்து நாள் என விதவிதமான 'பாஸை' வாங்கி வைத்துக் கொண்டால், குறைந்த செலவில், முதல் வகுப்பு வசதிகளுடன் நிறைய நாடுகளுக்குத் துரிதமாகப் போய் வந்து விடலாம்!

டெலிஃபோன் கார்டுகளையும் இப்படி மொத்தமாகப் பணம் கொடுத்து வாங்கி வைத்துக் கொண்டு, வேண்டும் போது உபயோகித்துக் கொள்ளலாம். ஒவ்வொரு நாட்டின் நாணயத்தையும் வைத்துக் கொண்டு தடுமாற வேண்டியதில்லை!

அன்று முழுவதும், இயற்கையின் அமைதியான அழகை ரசித்துக் கொண்டே, அலுங்காமல் நலுங்காமல், அலுப்புத் தெரியாமல் பயணித்து, ஸ்விட்ஜர்லாந்தை வந்தடைந்தோம்.

(தொடரும்)

அட!

நகைக்கடையோ, நிதி நிறுவனமோ – போட்ட பணம் முதிர்வடையும் நாள் வந்துவிட்டது. திக் திக் உணர்வோடு அணுகுகிறீர்கள். ''கையசம் இப்போதைக்குப் பணம் இல்லே. கொஞ்சம் பொறுத்துக்குங்க'' என்ற பணிவான பதில் உங்கள் ஹார்ட் பீட்டை ஏகத்துக்கு எகிற வைக்கிறது. ''கொஞ்சம்'' என்பது உண்மையில் இழுத்தடிக்கும் உத்தி என்று படுகிறது. என்ன செய்யலாம்?

அல்லது ''இதோ உங்கள் டெபாசிட் தொகைக்கான செக். வட்டித் தொகையும் சேர்க்கப்பட்டிருக்கிறதாக்கும்'' என்றபடி பளிச்சென்று காசோலையை நீட்டுகிறார் நிறுவனப் பிரதிநிதி. பெரும் கண்டத்திலிருந்து தப்பித்து விட்ட மகிழ்ச்சியோடு காசோலையை வங்கிக் கணக்கில் போட்டால், அது பூமராங்காய்த் திரும்பி வருகிறது. நிறுவனத்தின் கணக்கில் பணமில்லை என்ற செய்தியைச் சுமந்தபடி. என்ன செய்யலாம்?

ஒரு முறை சுவரில் அடித்த பந்தாக வந்த அந்தக் காசோலையை, மீண்டும் ஒருமுறை உங்கள் வங்கிக் கணக்கில் போடுங்கள். அதற்கு முன்னால், குறிப்பிட்ட செக் திரும்பி வந்ததை அறிவித்துவிட்டு, இன்னொரு முறை இது தொடர்ந்தால், நெகோஷியபிள் இன்ஸ்ட்ருமென்ட்ஸ் சட்டப்படி நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுக்கப் போவதாக, நிறுவனத்துக்கு அறிவித்து விடுங்கள் – பதிவுத் தபால் மூலம். மீண்டும் செக் திரும்பினால், செக் தொகையை விடக் கணிசமாக, அதிக அளவில் உங்களுக்கு நஷ்டஈடு கோர உரிமையுண்டு. ஏன், மேற்படி சட்டத்தின் கீழ் 'ஏமாற்றுதல்' பிரிவில் நிறுவன ஆட்களைக் கம்பி எண்ண வைக்கவும் முடியும்!

— குல்லூ

அக்கா

காலை ஒன்பது மணி. காலை, மதியம் இரண்டு நேரத்துக்கு மாகச் சமையல் வேலையை முடித்து விட்டு வாசலில் வந்து உட்கார்ந்தாள் சுப்புலட்சுமி. குழந்தைகள் வேப்ப மரத்தடியில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களின்



விளையாட்டுக் கூக்குரல்களோ வீதியில் உரக்கக் கூவிச் சென்ற காய்கறிக் காரனின் ஒலியோ எதுவுமே பாதிக்காது ஏதோ ஒரு சிந்தனையில் ஆழ்ந்து விட்டாள். கணவன் வடிவேலு வந்து நின்று இரண்டு முறை கூப்பிட்டும் பதில் அளிக்காமல் இருந் தவளை மூன்றாம் முறை அதட்டிக் கூப் பிட்டான்.

"ஏ சுப்பு, எந்தக் கோட்டயப் புடிக்கப் போற? ஒரே ஏகாந்தமா உக்காந்திருக்கற! எல்லா வேலையும் ஆச்சா?" என்று அடுக் கினான்.

'ஆமா, தேதி பதினஞ்சாச்சு. வாங் குன கடன அடைக்க வேணாம். வட்டி கட்டக் கூட முடியல. இதுல கோட்டைய வேற புடிக்கறாங்களாக்கும்!"

வேறொன்றுமில்லை. சுப்புவின் அக்கா சரசு பத்து மைல் தூரத்தில் ஒரு கிரா மத்து காட்டுச் சாலையில்தான் இருக் கிறாள். கொஞ்சம் வசதியாகி விட் டாள். கல்யாணம் கட்டிக் குடுக்கும் போது அக்கா வூட்டுக்காரர் அப்படி ஒன்றும் வசதியானவர் இல்லைதான். குத்தகைக்கு வயல் ஓட்டிக் கொண் டிருந்தார்கள். அக்கா போன நேரமும்

நல்ல நேரம் போல, ரெண்டு பேரும் சேர்ந்து மாடா உழைச்சாங்க. குத்தகை வயலை சொந்தமாக வாங்கினாங்க. மேன்மேலும் உழைப்பு. ரெண்டு ஏக்கர் தென்னந் தோப்பு வாங்கினாங்க. ஆனால் அக்கா கறார்





பேர்வழி. எல்லா வேலையாட்களுடனும் சரிக்கு சரியாக வேலையும் பார்ப்பான் வெட்டிப் பேச்சுப் பேசி நேரத்தைக் கடத்து பவர்களை கண்டிக்காமலும் இருக்க மாட்டான்.

"வேலுச்சாமியண்ணே! பேச்சுக்கெல்லாம் சாயந்தர நேரமும் இருக்கு. ஊர்ச்சாவடியும் இருக்கு. இப்ப வேலையைப் பார்ப்பீங்களா" என்று கண்டிப்பாகக் கூறி விடுவாள்.

அதே நேரம் சரசுவுக்கு நல்ல மனமும். சாளையில் எந்த நேரமும் சோளக்கஞ்சி இருக்கும். கூலிக்கு வர்றவங்க கஞ்சி கொண்டு வரல்லேன்னா தாராளமா போய் குடிச்சிட்டு வேலை பார்ப்பாங்க.

சரசுவிடம் இருந்து சுப்பு பத்தாயிரம்

சுடர்

(அறிமுக எழுத்தாளர்)

ரூபாய் கடன் வாங்கி இருந்தாள். அதற்குப் பத்தாம் தேதி தான் வட்டி கொடுக்க வேண்டிய நாள். பணப் பரிவர்த்தனை சரியாக இருக்க வேண்டும் என்று நினைப்பவளிடம் தாமதம் ஏற்பட்டு விடக்கூடாதே என்று சுப்புவுக்கு கவலை. இதைப் பற்றியெல்லாம் அவ்வப் போது சுப்புவுக்கும் வடிவேலுக்கும் பேச்சு எழுவதுண்டு.

'ஏஞ்சுப்பு, நாம உங்கக்காகிட்ட கடன் வாங்கி எத்தினி காலமிருக்கும்?''

''ஏனாமா? காலமறிஞ்சு இப்ப என்ன செய்யப் போறீங்க? ஊ...ம். அதுவும் அஞ்சு வருஷமாச்சு. சின்னவன் பொறக்கும் போது வாங்கின கடனில்ல!''

சின்னவன் வயிற்றில் இருக்கும்போது அவன் வேலை பார்த்து வந்த மில்லில் ஸ்ட்ரைக்கும் வந்து விட்டது. என்னென்னமோ பேச்சு வார்த்தை என்றார்கள். ஆனால் மில்லை மூடி மாசம் இரண்டாகி விட்டது. பிரசவ நேரம். குடும்பக் கட்டுப்பாடு ஆப்பரேஷனும் பண்ணிக் கொள்ளலாம் என்று எண்ணம். பணத்திற்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அப்போது தான் சுப்புவின் அக்கா சரசு, பத்தாயிரம் ரூபாய் தேவையறிந்து கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போனாள். இரண்டரை ரூபாய் வட்டி. இந்தக் குறைச்ச வட்டிக்கு யாரும் கொடுக்க மாட்டார்கள். ஆனாலும் மாசம் பொறந்தா சொளையாக இருனூத்தம்பது ரூபாய் எடுத்து வைக்கணும். போனஸ் வந்தா கொடுத்துரலாம்னா மில்லும் சின்ன மில்லாச்சா. போனஸும் ரெண்டாயிரமோ மூவாயிரமோதான் வரும். போன தரம் கூடக் கேட்டான்.

'ஏஞ்சுப்பு, இந்த போனஸ் பணத்த உங்கக்கா கடன்ல கழிச்சிக்கச் சொல்லிக் குடுத்தரலாமா' என்றான்.

'ஆமா சொளையா பத்தாயிரம் வாங்கிக்கிட்டு, பிச்சுப் பிச்சுக் குடுத்து ஒண்ணுமில்லாம பண்ணிறலாங்கறீங்களா?'

அதுவும் சரிதான். ஆனால் மாதா மாதம் பத்தாம் தேதி நெருங்கும் போதே சுப்புவிற்குக் கலக்கமாகி விடும். சரியான தேதிக்கு வட்டி கொடுக்க முடியுமோ முடியாதோ என்று. அதே நிலைதான் இன்னும்.

வெளியே விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள் இருவரும் ஒரே குஷியாக 'ஹை, பெரி...ம்மா!' என்று கத்தின. சரசக்கா வந்து கொண்டிருந்தாள். சுப்புவிற்கு அக்காவைப் பார்த்து மகிழ்ச்சியும், பணத்தைப் பற்றிக் கேட்டால் என்ன சொல்வது என்ற குழப்பத்திலும் திகைத்து நின்றாள்.

சரசு, ''அடியேய், என்ன இது. அக்காக்காரி வந்து நிக்கறேன். ஒரு வார்த்தை 'வா'ன்னு சொல்லாமே என்னடி பிரம புடிச்ச மாதிரி நிக்கறே'' என்றாள்.

''இல்லக்கா. இப்பத்தான் கொஞ்சம் முந்தி உன்னைப் பத்தி நெனச்சனா. உடனே நீ வந்திட்டயா. அதான் திகைச்சுப் போயிட்டேன். ஒனக்கு நூறாயுசு'' என்றாள்.

சரசு பையிலிருந்து தேங்காய், மாங்காய், வேர்க்கடலை எல்லாம் எடுத்துக் கொடுத்தாள். எல்லாமே அவளது தோப்பிலிருந்து பறித்தவை. கூட கொஞ்சம் பிஸ்கோத்து, பழம், பூ எல்லாம் இருந்தன.

சுப்பு கணவனை அழைத்து, ''ஏங்க, வராத அக்கா வந்திருக்கா. கோழி அடிச்சு கொளம்பு வைக்கலாம். போய் வாங்கியாங்க''

என்றாள்.

"அடி கொச கெட்டவளே! நானென்ன சீமையிலே இருந்தா வந்திருக்கேன்? கோழி அடிக்கிறாளாம் கோழி. என்ன ஆக்கி வச் சிருக்கியோ அதோட பருப்புத் தொவையல் அரை. நீ அரைக்கிற பருப்புத் தொவையலுக் குத் தனி ருசி. அது போதும் போ" என்று சரசு தடுத்து விட்டாள்.

அக்கா இப்படி அரக்கப் பரக்க வருவா னேன்! பணம் கேட்டு விடுவாளோ? நிறைய செலவு இருக்கிறது. அசலைக் கொடுத்து விடு என்று சொல்ல வந்திருப்பாளோ? ஊர்க்கதை உலகக் கதை பேசும் அக்காவின் எந்தப் பேச் சும் காதில் விழாமலேயே 'உம்' கொட்டிக் கொண்டிருந்தாள் சுப்பு.

ஆயிற்று. மதியம் சாப்பிட்டு விட்டு, 'கொஞ்சம் கண் அசர்றேன்டி. மூணு மணிக்கு எழுப்பி விடு. நாலு மணி பஸ் புடிச்சுப் போனேன்னா அஞ்சு மணிக்கு சாளைக்குப் போயிரலாம். பால் கறக்கணும். இன்னும் நிறைய வேலை இருக்கு' என்று சொல்லிவிட்டு வெறுந்தரையிலேயே தலை யணை போட்டுப் படுத்து விட்டாள்.

சுப்பு மூணு மணி அடித்தவுடன் எழுப்பி விட்டு காப்பி போட்டுத் தந்தாள். வடிவே லும் வந்து கொஞ்சம் தள்ளி உட்கார்ந்தான்.

சரசு, "சுப்பு, உங்கிட்ட ஒரு விஷயம் கேட் கணும். எப்பத்தான் நீ வாங்கின கடனக் குடுக்கப் போற?" என்றாள். ஆச்சு. விஷயத் திற்கு வந்தே வந்து விட்டாள். என்ன சொல்லலாம்?

வடிவேலுதான் "இல்லீங்க நங்கயா. நானும் என்னென்னமோ செஞ்சு பாக்க றேன். முடிய மாட்டேங்குது. எப்படியும் இன்னும் ஆறு மாசத்துல வேற எடத்தில கடன் வாங்கிப் புரட்டியாச்சும் அசலக் கொடுத்திர்றேன்" என்றான்.

வடிவேலு சொல்லிக் கொண்டிருக்கும் போதே நமுட்டுச் சிரிப்புடன், தனது சுருக்குப் பையிலிருந்து பணக்கட்டை எடுத்த சரசு, "இந்தாடி சுப்பு. இத வைச்சுக்க" என்று கொடுத்தாள்.

சுப்பு, வடிவேலு இருவரும் திகைக்க, சுப்பு, "ஏங்க, நீங்க திரும்பவும் அக்கா கிட்ட கடன் கேட்டிருந்தீங்களா?"

"அய்யய்யோ, இல்ல சுப்பு. நான் ஒன் ணும் கேக்கல."

"அடியேய் சுப்பு, அவரை ஏண்டி கேக்கற. அவரெல்லாம் எதுவுங் கேக்கல. நாந்தாங் கொண்டாந்தேன். இது உங்க பணம்தான்" என்றாள்.

"எங்க பணமா? அக்கா, என்ன வெளை யாடறியா? நாங்க வாங்குன பணத்துக்கு இந்த மாசம் வட்டியக் கூட குடுக்கல."

"சுப்பு. நெசமாலுமே இது உங்க பணம் தான்டி. நீங்க குடுத்த வட்டிப் பணத்த நான் நம்மூர் போஸ்டாபீஸ்ல என்னமோ ஆர்.டி. யாமா. அதுல போட்டேன். போன மாசத் தோட அஞ்சு வருஷமாச்சு. மாசம் 250 ரூபா. அஞ்சு வருஷம் கழிச்சு இருவதாயிரம் வந்துச்சு. எங்கடன் பணம் பத்தாயிரத்த நா எடுத்துக்கிட்டு வந்தும் ரெண்டு நாளாச்சு. உங்க மச்சான்தான் 'போ, போய் குடுத்திட்டு வா. வாங்கி ரெண்டு நாளாச்சில்ல. வெச்சுக் கிட்டிருந்தா எப்பிடின்னு ஒரே நச்சரிப்பு. இந்தா எடுத்து வை."

சுப்புவுக்குக் கண்கள் பனித்தன. 'யக்கா...' என்று பேச்சு வராமல் இழுத்தாள். 'போடி கொச கெட்டவளே. பணத்த எடுத்து வை' என்று கைகளில் திணித்து விட்டு எழுந்தாள்.

"இங்க பாரு. இன்னொண்ணையும் சொல்லிர்றேன். இதே மாதிரி அக்கா கிட்ட வேணுங்கும்போது வாங்கிக்கலாம். அக்கா வும் இப்பிடியே கொண்டாந்து குடுப்பா அப் பிடின்னு நெனச்சுக்காதே, தெரியுதா?" என்று நீட்டி முடிக்கினாள்.

கண்டிப்பாம்!

"உங்க பையன் கொஞ்சம் ரூமச்சா போறான்; கண்டிச்சு வையுங்க..."

"ஏன், என்ன சொல்றான்?"

"நீல நிறம் கொண்ட மூன்று பொருள் கள் கூறுன்னு கேட்டா, வானம், கடல், வயாகரா'ன்றான்!"

– நெல்லையப்பபுரம் செல்வன்





முப்பத்திரெண்டாம் அத்தியாயம்

கிள்ளி வளவன் யானை

கூத்து முடிவதற்கும் சமையல் ஆவதற்கும் சரியாயிருந்தது. கட்டுக் கட்டாகத் தாமரை இலைகளைக் கொண்டு அவ்வீரர்களின் முன்னால் போட்டார்கள். பிறகு பொங்கலும் கறியமுதும் கொண்டு வந்து பரிமாறினார்கள்.

வீரர்கள் சாப்பிடத் தொடங்கிய பிறகு இளவரசர் அவர்களிடையே பந்தி விசாரணை செய்து கொண்டு வலம் வந்தார். அங்கங்கே நின்று அவ்வீரர்களின் உடல் நலத்தைப் பற்றி விசாரித்தார். அவர்களுடைய ஊரையும், பெயரையும் விசாரித்தார். அப்படி விசாரிக்கப்பட்டவர்கள் ஆனந்தக் கடலில் ஆழ்ந்தார்கள். பக்கத்திலிருந்தவர்கள் அவர்களுடைய அதிர்ஷ்டத்தைப் பாராட்டினார்கள்.

ஏற்கெனவே சோழ நாட்டு வீரர்களுக்கெல்லாம் இளங்கோவின் பேரில் மிக்க அபிமானம் இருந்தது. சமீபத்தில் அந்த அபிமானம் பன்மடங்கு பெருகியிருந்தது. தாய்நாட்டிலிருந்து தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களைத் தருவிப்பதற்கு இளவரசர் பெரும் பிரயத்தனம் செய்ததை அவர்கள் அறிந்திருந்தார்கள்.

அத்துடன் சாதாரணப் போர் வீரர்களுடனே இளவரசர்

அமரர் கல்கி



கல்கி கலெக்ஷன்

சமநிலையில் கலந்து பழகி க்ஷேமம் விசாரித்து அவர்களுக்கு உற்சாகத்தை அளித்து வந்தார். இந்த குணாதிசயம் இளவரசரை அவ்வீரர்கள் தங்கள் கண்ணுக்குக் கண்ணாகக் கருதுமாறு செய்திருந்தது.

ஆகையால், வீரர்கள் அங்கங்கே இளவரசரை நிறுத்த முயன்றார்கள். துணிச்சலை வருவித்துக் கொண்டு அவரை ஏதேனும் கேள்வி கேட்பார்கள். முக்கியமாக, அவர்களில் பலரும் கேட்ட கேள்வி, "புலத்திய நகரத்தின் மீது படையெடுப்பு எப்போது?" என்பதுதான். இந்தக் கேள்விக்கு விடையாக இளவரசர் "புலத்திய நகரின் மீது படை எடுத்து என்ன பயன்? மகிந்தன் ரோஹணத்துக்கல்லவா போயிருக்கிறான்?" என்று சிலருக்குச் சொன்னார். "கொஞ்சம் பொறுத்திருங்கள்; மழைக் காலம் போகட்டும்" என்று வேறு சிலரிடம் சொன்னார். யுத்தமின்றிச் சோம்பி இருப்பதில் சில வீரர்கள் தங்கள் அதிருப்தியை வெளியிட்டுக் கொண்டார்கள். வேறு சிலர், "தாங்கள் மாதமொரு முறையாவது இவ்விதம் வந்து எங்களைப் பார்த்து விட்டுப் போனால் பொறுமையாயிருக்கிறோம்" என்றார்கள்.

பந்தி விசாரணை முடிந்ததும் இளவரசர் சற்று ஒதுக்குப்புறமாக அவருக்கென அமைந்திருந்த படை வீட்டுக்குச் சென்றார். வந்தியத்தேவனையும் ஆழ்வார்க்கடியானையும் அவர் தம்முடன் அழைத்துக் கொண்டு போனார்.

"இந்த வீரர்களின் உற்சாகத்தைப் பார்த்தீர்கள் அல்லவா? தஞ்சையிலிருந்து மட்டும் தகுந்த ஒத்துழைப்புக் கிடைத்திருந்தால் இதற்குள் இந்த இலங்கைத் தீவு முழுவதும் நம் வசமாகியிருக்கும். அருமையான சந்தர்ப்பம் வீணாகிப் போய் விட்டது. இங்கே மழைக் காலத்தில் யுத்தம் நடத்த முடியாது. இன்னும் மூன்று நாலு மாதம் நம் வீரர்கள் சும்மா இருக்க வேண்டியதுதான்!" என்று சொன்னார்.

இதைக் கேட்ட திருமலை, "இளவரசே! தாங்கள் இதைப் பற்றிக் கவலைப்படுவது வியப்பாயிருக்கிறது. அங்கேயோ சோழ சாம்ராஜ்யத்துக்கே பேரபாயம் நேர்ந்திருக்கிறது! விஜயாலய சோழர் ஸ்தாபித்த ராஜ்யம், பராந்தகராலும் சுந்தர சோழராலும் பல்கிப் பெருகிய மகாராஜ்யம், உள் அபாயங்களினால் சின்னாபின்னமாகி விடும் போலிருக்கிறது!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"ஆம். ஆம்! நீங்கள் இருவரும் முக்கியமான செய்தி கொண்டு வந்திருக்கிறீர்கள். நான் என்னுடைய அற்பக் கவலையை வெளியிட்டுக் கொண்டிருக்கிறேன். நல்லது; இப்போது நீங்கள் சொல்ல வேண்டியதையெல்லாம் விவரமாகச் சொல்லுங்கள். முதலில் இவர் ஆரம்பிக்கட்டும்!" என்று இளவரசர் வந்தியத்தேவனைச் சுட்டிக் காட்டினார்.

வந்தியத்தேவன் உடனே தன் கதையைத் தொடங்கினான். காஞ்சியிலிருந்து தான் புறப்பட்டது முதல் கண்டவை, கேட்டவை எல்லாவற்றையும் கூறினான். பல அபாயங்களிலிருந்து தப்புவதற்குத் தான் புரிந்த சாகஸச் செயல்களைக் குறித்து அதிகமாக விஸ்தரிக்க விரும்பாதவன் போல் காட்டிக் கொண்டு, அதே சமயத்தில் தன் பிரதாபங்களை வெளியிட்டான். கடைசியில், "ஐயா! தங்கள் அருமைத் தந்தையாரைச் சிறையில் வைத்திருப்பது போல் வைத்திருக்கிறார்கள். நெருங்கிய பந்துக்களும் பெருந்தர அதிகாரிகளும் சிற்றரசர்களும் சேர்ந்து பயங்கரமான சதி செய்கிறார்கள். இதனாலெல்லாம் தங்கள் சகோதரி இளையபிராட்டி பெருங்கவலையில் ஆழ்ந்திருக்கிறார். ஆகையால் தாங்கள் உடனே புறப்பட்டு என்னுடன் பழையாறைக்கு வர வேண்டும். ஒருகணமும் தாமதிக்கக் கூடாது!" என்று முடித்தான்.

பிறகு ஆழ்வார்க்கடியான் தனது வரலாற்றைக் கூறினான். வந்தியத்



தேவன் கூறியவற்றையெல்லாம் அவனும் ஆமோதித்தான். அத்துடன் திருப்புறம்பயம் பள்ளிப்படையருகில் நள்ளிரவில் நடந்த கொலைகாரர்களின் சதியைப் பற்றியும் கூறினான். சோழ நாட்டு நிலைமை இவ்வளவு அபாயகர மாயிருப்பதால் தற்சமயம் இளவரசர் அங்கு வராமலிருப்பதே நல்லது என்று முதன் மந்திரி அநிருத்தர் சொல்லி அனுப்பிய செய்தியை மறுபடியும் வற் புறுத்திக் கூறினான்.

"தாங்கள் சோழ நாட்டுக்குத் தற் சமயம் வராமலிருப்பது மட்டுமல்ல; இங்கேயும் படையெடுப்பை மேலும் விஸ்தரித்துக் கொண்டு போக வேண் டாம் என்று முதன்மந்திரி கேட்டுக் கொள்கிறார். படைகளையெல்லாம் திரட்டி வட இலங்கையில் சேர்த்து வைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறார். சதிகாரர்கள் சீக்கிரத்தில் வெளிப்பட்டு வந்து தங்கள் உண்மைச் சொரூபத்தைக் காட்டுவார்கள். அச் சமயம் இப்போது இலங்கையிலுள்ள படை மிக்க உபயோகமாயிருக்கும் என்று முதன் மந்திரி அபிப்பிராயப் படுகிறார். பாண்டிய நாட்டில் தற் சமயம் உள்ள கைக்கோளர் படை, வன்னியர் படை, வேளாளர் படை - மூன்றும் இளவரசருக்காக உடல் பொருள் ஆவியை அர்ப்பணம் செய்யக் காத்திருக்கின்றன. இதையும் தங்களுக் குத் தெரிவிக்கும்படி முதல் மந்திரி எனக்குக் கட்டளையிட்டார்!" என் றான் ஆழ்வார்க்கடியான்.

"திருமலை! உன் குருநாதர் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்? பாடலி புரத்துச் சாணக்கியரைப் போல் இவர் அன்பில் சாணக்கியர் என்று தன்னை எண்ணிக் கொண்டிருக்கிறாரா? என் உற்றார் உறவினரோடு நான் சண்டை போட வேண்டும் என்கிறாரா?" என்று இளவரசர் ஆத்திரமாய்க் கேட்டார்.

"இல்லை, ஐயா! அநிருத்தர் அவ் விதம் சொல்லவில்லை. ஆனால் சக்கர வர்த்திக்கு விரோதமாகச் சதி செய்கிற வர்களை - சாம்ராஜ்யத்துக்குத் துரோ கம் செய்ய முயற்சி தொடங்கியிருப் பவர்களை, - சமயம் பார்த்து தண்டிக்க

வேண்டும் என்கிறார். அதற்கு உதவி புரிவது தங்கள் கடமை அல்லவா?'' என்றான் திருமலை.

''அதற்கு நான் எப்படி அதிகாரியாவேன்? சதி நடப்பது உண்மையானால் அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது சக்கரவர்த்தியல்லவா? என் தந்தையின் 'கட்டளையின்றி நான் எப்படி இந்தக் காரியத்தில் பிரவேசிக்க முடியும்!'' என்றார் இளவரசர்.

வந்தியத்தேவன் இப்போது குறுக்கிட்டு, ''இளவரசே! தங்கள் தந்தை இப்போது சுயாதீனமாயில்லை. பழுவேட்டரையர்கள் அவரைச் சிறை வைத்திருப்பது போல் வைத்திருக்கிறார்கள். யாரும் நெருங்க முடியாதபடி அரண்மனைக்குள்ளே வைத்திருக்கிறார்கள். தங்கள் தமையனாரோ, தஞ்சைக்கு வருவதில்லையென்று விரதம் வைத்துக் கொண்டிருக்கிறார். இந்த நிலைமையில் சாம்ராஜ்யத்தைப் பாதுகாப்பது தங்கள் பொறுப்பல்லவா? உடனே பழையாறைக்கு வர வேண்டியது தங்கள் கடமை அல்லவா?'' என்றான்.

''இளவரசர் பழையாறைக்கு வர வேண்டிய அவசியம் என்ன? அதுதான் எனக்குத் தெரியவில்லை!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

இளவரசர் சற்று சிந்தனையில் ஆழ்ந்திருந்துவிட்டு, ''மண்ணாசை மிகப் பொல்லாதது. இராஜ்யத்தின் பேரில் உள்ள ஆசையினால் இவ்வுலகில் என்னென்ன பயங்கரமான பாவங்கள் நடந்திருக்கின்றன? இன்று சிம்மகிரிக் கோட்டைக்குப் போயிருந்தேனல்லவா? அந்தக் கோட்டையின் வரலாறு உங்களுக்குத் தெரியுமா?'' என்றார்.

''நான் கேட்டதில்லை'' என்றான் வந்தியத்தேவன்.

''சொல்கிறேன், கேளுங்கள்! சுமார் ஐந்நூறு வருஷங்களுக்கு முன்பு இந்த இலங்கைத் தீவைத் தாதுசேனன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள். ஒருவன் பெயர் காசியபன்; இன்னொருவன் மகல்லன். தாதுசேனனின் சேனாபதியும் காசியபனும் சேர்ந்து சதியாலோசனை செய்தார்கள். காசியபன் தன் சொந்தத் தந்தையைச் சிறையில் அடைத்து விட்டு சிங்காதனம் ஏறினான். மகல்லன் கடல் கடந்து தமிழ்நாட்டுக்கு ஓடிப் போனான். சில நாளைக்குப் பிறகு தாதுசேனனின் சிறையைச் சுற்றிச் சுவர் எழுப்பி அடைத்து அவனைக் கொன்று விட்டார்கள். இந்தக் கொடூர பாவத்தைச் செய்த காசியபனுக்குத் தன் சகோதரன் மகல்லன் திரும்பி வந்து பழிக்குப் பழி வாங்குவான் என்ற பீதி உண்டாகி விட்டது. அதற்காக இந்த சிம்மகிரிக் குன்றுக்கு வந்தான். இதன் உச்சியில் கோட்டை கட்டிக் கொண்டு வசித்து வந்தான். செங்குத்தான குன்றாகையால் பகைவர்கள் அதன் பேரில் ஏறிக் கோட்டையைப் பிடிப்பது இயலாத காரியம் என்று நினைத்தான். இம்மாதிரி பதினெட்டு வருஷம் ஒளிந்து வாழ்ந்திருந்தான். கடைசியில் ஒருநாள் மகல்லன் தன் உதவிக்குப் பாண்டியராஜாவின் சைன்யத்தையும் அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்தான். சிம்மகிரிக் கோட்டையை அணுகினான். அச்சமயத்தில் காசியபனின் புத்தி பேதலித்து விட்டது. அத்தனை வருஷம் கோட்டையில் ஒளிந்திருந்தவன் அசட்டுத் தைரியத்துடன் வெளிவந்து போராடி இறந்தான்! அப்பேர்ப்பட்ட பாதகன், - தந்தையைக் கொன்ற பாவி, - கட்டிய கோட்டையில் சில அற்புதமான வர்ணச் சித்திரங்கள் இருக்கின்றன. இன்று சீன யாத்திரீகர்களுடன் போயிருந்தபோது பார்த்தேன். அடாடா! அந்தச் சித்திரங்களின் அழகை என்னவென்று சொல்வது? பல நூறு வருஷங்களுக்கு முன்பு எழுதியவை. ஆனால், இன்றைக்கும் சிறிதும் வர்ணம் மங்காமல் புத்தம் புதிய சித்திரங்கள் போல் இருக்கின்றன...''

''ஐயா! நான் ஒரு கேள்வி கேட்கலாமா?'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''தயக்கம் ஏன்? தாராளமாய்க் கேட்கலாம்.''

''சிம்மகிரிக் கோட்டை இன்னமும் பகைவர் படைகளின் வசத்திலேதானே இருக்கிறது?'' என்றான் ஆழ்வார்க்கடியான்.



"ஆமாம்; அதைக் கைப்பற்றும் முயற்சியை இப்போது தொடங்கும் உத்தேசம் எனக்கு இல்லை. அதனால் வீணான உயிர்ச்சேதம் ஏற்படும்."

"அதைப் பற்றி நான் கேட்கவில்லை. ஐயா! பகைவர் கோட்டைக்குள் தாங்கள் பிரவேசித்தது உசிதமா என்று கேட்டேன். சீன யாத்திரீகர்களுக்கு யானைப் பாகனாகத் தாங்கள் போக வேண்டிய அவசியம் என்ன நேர்ந்தது? யானையின் கழுத்தில் தங்களைப் பார்த்ததும் என் கண்களை நம்புவதா இல்லையா என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டு விட்டது. தங்களுடைய புருவத்தின் நெரிப்பைப் பார்த்துத்தான் சந்தேகம் தெளிந்து நிச்சயப்படுத்திக் கொண்டேன். இப்படித் தங்கள் உயிருக்கு அபாயத்தை ஏற்படுத்திக் கொள்ளலாமா?"

"என் உயிர் மட்டும் அவ்வளவு உயர்ந்ததா, திருமலை! எத்தனை சோழ நாட்டு வீரர்கள் இந்த இலங்கையில் வந்து உயிரை விட்டிருக்கிறார்கள்?"

"அவர்கள் போர்க்களத்தில் உயிர் துறந்தார்கள். தாங்கள் அநாவசியமாகத் தங்களை அபாயத்துக்கு உள்ளாக்கிக் கொண்டீர்கள்!"

"அநாவசியமில்லை; இரண்டு காரணங்கள் உண்டு. சிம்மகிரி சித்திரங்களைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை எனக்கு வெகு நாளாக இருந்தது. அந்த ஆசையை இன்று பூர்த்தி செய்து கொண்டேன்..."

"இளவரசே! இன்னொரு காரணம்?"

"பார்த்திப பல்லவர் திரிகோண

மலையில் வந்து இறங்கினவுடனே, எனக்குச் செய்தி கிடைத்தது. அவரை இன்று பார்க்க விரும்பவில்லை. ஏனெனில்..."

"ஏனெனில்..."

"மாதோட்டத்துக்கு முதன் மந்திரி வந்திருக்கிறார் என்பதும் எனக்குத் தெரியும். அவரிடமிருந்து செய்தி வரும் என்று எதிர்பார்த்தேன். இரண்டு மூத்தவர்களிடமிருந்து செய்தி வந்தால், முதலில் கிடைக்கிற செய்தியின்படி தானே நான் நடந்தாக வேண்டும்?"

வந்தியத்தேவன் "ஆகா! அப்படிச் சொல்லுங்கள். என் கட்சிதானே ஜெயித்தது?" என்று குதூகலித்தான்.

"அரசே! இவன் தங்களைத் தந்திரத்தினால் ஏமாற்றி விட்டான்..."

"அவன் ஏமாற்றவில்லை. நானாகவே ஏமாந்தேன். உன்னை அழைத்து வருவதற்கு வைத்திருந்த வீரனை இவன் குதிரை மேலிருந்து தள்ளிவிட்டு அக் குதிரை மீது தான் ஏறிக்கொண்டு வந்ததை நான் கவனித்து விட்டேன். இவனுக்கு ஒரு பாடம் கற்பிக்க விரும்பினேன்..."

"நல்ல பாடம் கற்பித்தீர்கள்! ஒவ்வொரு பாடமும் ஒரு மணங்கு நிறையிருக்கும். இப்போது நினைத்தாலும் என் முதுகும் மார்பும் வலிக்கின்றன! ஓலை கொண்டு வந்த தூதனை இப்படித்தானா நடத்துவது? போனால் போகட்டும்; தாங்கள் மட்டும் என்னுடன் பழையாறைக்கு வருவதாயிருந்தால்..."

"எனக்கு ஒரு பழைய பாடல் ஞாபகம் வருகிறது! திருமலை! என் முன்னோர்களில் பெருங்கிள்ளி வளவன் என்று ஒரு மன்னர் இருந்தார். அவரிடம் ஓர் அதிசயமான யானை இருந்தது. அதன் ஒரு கால் காஞ்சியில் இருக்கும். இன்னொரு காலினால் தஞ்சையை மிதிக்கும்; மற்றொரு கால் இந்த ஈழ நாட்டை மிதிக்கும். நாலாவது கால் உறையூரில் ஊன்றி நிலைத்திருக்கும்.

'கச்சி ஒரு கால் மிதியா,
ஒரு காலால்
தத்துநீர்த் தண்தஞ்சை தான்
மிதியாப் – பிற்றையும்
ஈழம் ஒரு கால் மிதியா வருமே நம்
கோழியர் கோக் கிள்ளி களிறு!'

என்று அற்புதமான கற்பனையுடன் ஒரு புலவர் பாடியிருக்கிறார். இந்த இலங்கையில் மந்தை மந்தையாக ஆயிரம் ஆயிரம் யானைகள் இருக்கின்றன. இருந்து என்ன பயன்? புலவருடைய கற்பனை யானையைப் போல் ஒரு யானை இருந்தால் நானும் ஒரே சமயத்தில் காஞ்சியிலும், பழையாறையிலும் மதுரையிலும் இலங்கையிலும் இருக்கலாம் அல்லவா?"

புலவரின் யானையைப் பற்றிக் கேட்டதும் வந்தியத்தேவனும் ஆழ்வார்க்கடியானும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

"அப்படிப்பட்ட யானைதான் இல்லையே? தாங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று திருமலை கேட்டான்.

"சந்தேகம் என்ன? பழையாறைக்கு வருவதென்றுதான் முடிவாகி விட்டதே?" என்றான் வந்தியத்தேவன்.

"உங்கள் சண்டையைக் கொஞ்சம் நிறுத்தி வையுங்கள். நாளை அநுராதபுரம் போவோம். அங்கே பார்த்திப பல்லவரை நான் எப்படியும் சந்திக்க வேண்டும். அவர் சொல்வதையும் கேட்டு விட்டுத் தான் முடிவு செய்ய வேண்டும்" என்றார் இளவரசர்.

முப்பத்து மூன்றாம் அத்தியாயம்

சிலை சொன்ன செய்தி

மறுநாள் காலையில் சூரியன் உதயமாவதற்குள் அருள்மொழி வர்மர், ஆழ்வார்க்கடியான், வந்தியத்தேவன் ஆகிய மூவரும் அநுராதபுரத்துக்குப் புறப்பட்டார்கள். சிறிது தூரம் காட்டுப் பாதையில் வந்த பிறகு இராஜபாட்டையை அடைந்தார்கள். வேறு

வீரர்கள் யாரையும் இளவரசர் தம்முடன் மெய்க்காவலுக்கு அழைத்து வராதது வந்தியத்தேவனுக்கு வியப்பை அளித்தது. காலை நேரத்தில் இருபுறமும் மரங்களடர்ந்த அந்த இராஜபாட்டையில் பிரயாணம் செய்வதே ஓர் ஆனந்த அனுபவம். பழையாறை அரசிளங்குமரி தன்னிடம் ஒப்புவித்திருந்த வேலையைச் செய்து முடித்து விட்டோம் என்ற பெருமித உணர்ச்சி அவன் உள்ளத்தில் பொங்கிக் கொண்டிருந்தது. அது மட்டுமா? பல வருஷங்களாக அவன் இருதயத்தில் பொங்கிக் கொண்டிருந்த ஆசையும் நிறைவேறி விட்டது. சோழவள நாட்டின் செல்லப் பிள்ளையைப் பார்த்தாகி விட்டது. நாடு நகரமெல்லாம் மக்கள் எந்த வீர இளைஞரின் வீரப் பிரதாபங்களையும் குணாதிசயங்களையும் பாடிப் புகழ்ந்து கொண்டிருந்தார்களோ, - அந்த அரசிளங்குமாரரைச் சந்தித்தாகி விட்டது. அந்தச் சந்திப்புதான் எவ்வளவு அதிசயமான சந்திப்பு? - அருள்மொழி வர்மர் ஒரு விசித்திரமான மனிதர் என்று தான் கேள்விப்பட்டிருந்தது உண்மைதான்! திடீரென்று குதிரையைத் திருப்பித் தன்னைத் தாக்கித் திக்குமுக்காடச் செய்து விட்டாரே? அவர் சேனைக்குத் தலைமை வகித்துச் செல்லுமிடங்களிளெல்லாம் வெற்றி மேல் வெற்றியாக இருந்து வருவதின் இரகசியமும் இதுதான் போலும்! பகைவர்கள் எதிர்பாராத சமயத்தில் எதிர்பாராத இடத்தில் தாக்குவதே இவருடைய போர் முறை போலும்! ஆனால் இவரது இடைவிடா வெற்றியின் இரகசியம் இது மட்டுந்தானா? சேனா வீரர்களுடன் எவ்வளவு பவ்யமாக இவர் பழகுகிறார்? எப்படி அவர்களைத் தம் அன்புக்கு வசப்படுத்தி வைத்திருக்கிறார்!


போர் வீரர்களை மட்டுந்தானா? தாம் வெற்றி கொண்ட நாட்டின் மக்களையும் எப்படி வசீகரப்படுத்தி வைத்திருக்கிறார்? சமீபத்தில் மாபெரும் போர் நடந்த நாடு என்று இதைச் சொல்ல முடியுமா? சாலைகளில் மக்கள் எவ்வளவு உல்லாசமாக நடந்து கொண்டிருக்கிறார்கள்! இரு பக்கங்களிலுமுள்ள கிராமங்களில் ஜனங்கள் எப்படி நிர்ப்பயமாகவும் கவலையின்றியும் தத்தம் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்? மக்களின் முகங்களில் பீதியின் அறிகுறியோ துயரத்தின் சின்னமோ சிறிதும் காணப்படவில்லையே? கலகலவென்று பெண்களும் குழந்தைகளும் சிரிக்கும் சத்தம்கூட அடிக்கடி காதில் விழுகிறதே! இது என்ன விந்தை! இவர் எத்தகைய விந்தையான மனிதர்! - 'வெற்றி கொண்ட நாட்டு மக்களிடமிருந்து உணவுப் பொருளைக் கைப்பற்றக் கூடாது' என்று இளவரசர் பிடிவாதம் பிடித்துச் சோழ நாட்டிலிருந்து சைன்யத்துக்கு உணவுப் பொருள் வர வேண்டுமென்று வற்புறுத்தியதும், அதன் காரணமாகப் பழுவேட்டரையர்களுக்கு ஏற்பட்ட கோபமும், அவர்கள் சுந்தர சோழரிடம் புகார் கூறியதும், - இவையெல்லாம் வந்தியத்தேவனுக்கு நினைவு வந்தன. அன்றியும் ஆதித்த கரிகாலர் கையாளும் கொடூரமான போர் முறையையும் அருள்மொழி வர்மரின் தயாளம் பொருந்திய தர்ம யுத்தமுறையையும் அவன் தன் மனத்திற்குள்ளே ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டான். சில நாளைக்கு முன்பு வரையில் தன்னுடைய எஜமானராயிருந்த ஆதித்த கரிகாலரைப் பற்றி எவ்விதத்திலும் குறைவாக எண்ணுவது அவனுக்கே பிடிக்கவில்லை. ஆயினும் அந்த அநுராதபுரத்து இராஜபாட்டையில் இருபுறமும் வசித்த கிராம ஜனங்களின் மலர்ந்த முகங்களைப் பார்க்கும் போதெல்லாம் அவன் மேற்கண்டவாறு ஒப்பிட்டுப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அம்மம்மா! ஆதித்த கரிகாலர் யுத்தம் செய்து திரும்பிய நாடுகளில் இத்தகைய காட்சிகளைக் காண முடியுமா? எங்கெங்கும் ஒரே ஓலக்குரல் அல்லவா கேட்டுக் கொண்டிருக்கும்?

இத்தகைய அபூர்வ குணாதிசயம் படைத்த இளவரசருடன் எத்தனையோ விஷயங்களைப் பற்றிப் பேச வேண்டும்; எவ்வளவோ காரியங்களைப் பற்றிக் கேட்க வேண்டும் என்று வந்தியத் தேவ



னுடைய உள்ளம் துடிதுடித்தது. ஆனால் புரவிகளின் பேரில் ஆரோகணித்து விரைவாகச் சென்று கொண்டிருக்கும் சமயத்தில், பேசுவதற்கு இடம் எங்கே? – ஆம், பேசுவதற்கு ஒரே ஒரு சந்தர்ப்பம் மட்டும் அவனுக்குக் கிடைத்தது.

அநுராதபுரத்துக்குக் கிட்டத்தட்டப் போய்க் கொண்டிருந்தபோது சாலை ஓரத்தில் பெரியதொரு புத்த பகவானின் சிலை நிற்பதை வந்தியத்தேவன் கண்டான். இம்மாதிரி சிலைகள் இலங்கையில் பற்பல இடங்களிலும் இருந்த படியால் அதைப் பற்றி வந்தியத்தேவன் அதிக கவனம் செலுத்தவில்லை. ஆனால் பொன்னியின் செல்வர் அச்சிலையின் அருகில் குதிரையைத் திடீரென்று இழுத்துப் பிடித்து நிறுத்தியதும் இவனும் நிற்க வேண்டியதாயிற்று. சற்று முன்னாலேயே போய்க் கொண்டிருந்த ஆழ்வார்க்கடியானும் குதிரையை நிறுத்தி இவர்கள் பக்கம் திரும்பினான்!



பொன்னியின் செல்வர் சற்று நேரம் அந்த புத்த பகவானுடைய கம்பீரமான சிலையைக் கவனமாக உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"அடடா! என்ன அற்புதக் கலை!" என்றார்.

"எனக்கு ஓர் அற்புதமும் தெரியவில்லை. இந்த நாட்டில் எங்கே பார்த்தாலும் இத்தகைய பிரம்மாண்டமான புத்தர் சிலைகளை வைத்திருக்கிறார்கள். எதற்காகவோ தெரியவில்லை!" என்றான் வந்தியத்தேவன்.

இளவரசர் வந்தியத்தேவனைப் பார்த்துப் புன்னகை செய்தார். "மனத்தில் உள்ளதை உள்ளபடி பேசுகிறீர். அதில் எனக்கு மகிழ்ச்சி!" என்றார்.

"இளவரசே! வல்லவரையர் இன்றைக்குத்தான் உண்மை பேசுவதென்கிற வழக்கத்தைக் கைக்கொண்டிருக்கிறார்!" என்றான் திருமலை.

"வைஷ்ணவரே! எல்லாம் சகவாச தோஷந்தான்! வீர நாராயணபுரத்தில் உம்மைப் பார்த்தது முதல் என் நாவில் கற்பனா சக்தி தாண்டவமாடி வந்தது. இளவரசரைப் பார்த்ததிலிருந்து உண்மை பேசும் வழக்கம் வந்து விட்டது!" என்றான் வந்தியத்தேவன்.

அவர்களுடைய சொற்போரை இளவரசர் கவனிக்கவில்லை. சிலையின் தோற்றத்தில் ஆழ்ந்திருந்தார்.

"உலகத்திலேயே சிற்பக் கலையின் அற்புதம் பூரணமாக விளங்கும் வடிவங்கள் இரண்டுதான். ஒன்று நடராஜர், இன்னொன்று புத்தர்" என்றார்.

ஆனால் நடராஜ வடிவங்களை இம்மாதிரி பிரம்மாண்ட வடிவங்களாக நம் நாட்டில் செய்வதில்லையே!"

இலங்கையில் முற்காலத்தில் இருந்த மன்னர்களில் சிலர் மகா புருஷர்கள். அவர்கள் ஆண்ட ராஜ்யம் சிறியது. ஆனால் அவர்களுடைய இருதயம் பெரியது; அவர்களுடைய பக்தி மிகப் பெரியது. புத்த பகவானிடம் அவர்களுடைய பக்தியை இப்படிப் பெரிய வடிவங்களை அமைத்துக் காட்டினார்கள். புத்த சமயத்தில் அவர்களுடைய பக்தியைப் பெரிய பெரிய ஸ்தூபங்களை அமைத்துக் காட்டினார்கள். இந்த நாட்டில் உள்ள புத்தர் சிலைகளையும் விஹாரங்களையும் ஸ்தூபங்களையும் பார்த்துவிட்டு நம் சோழ நாட்டிலுள்ள சின்னஞ்சிறு சிவன் கோவில்களை நினைத்தால் எனக்கு அவமானமாயிருக்கிறது" என்றார் பொன்னியின் செல்வர்.

இவ்விதம் சொல்லிவிட்டுக் குதிரையிலிருந்து இறங்கி இளவரசர், புத்தர் சிலையண்டை சென்றார். சிலையின் பத்ம பாதங்களையும் அந்தப் பாதங்களை அலங்கரித்த தாமரை மொட்டுக்களையும் சிறிது நேரம் கவனமாகப் பார்த்தார். பின்னர் புத்தர் சிலையின் பாதங்களைத் தொட்டுக் கும்பிட்டு விட்டுத் திரும்பி வந்து பழையபடி குதிரையின் மீது ஏறினார்.

குதிரைகள் சற்று மெதுவாகவே சென்றன. "ஏதேது? இளவரசர் புத்த மதத்தைச் சேர்ந்து விடுவார் போலிருக்கிறதே!" என்று வந்தியத்தேவன் திருமலையிடம் சொன்னது இளவரசர் காதில் விழுந்தது.

அவர்கள் இருவரையும் பொன்னியின் செல்வர் பார்த்து, "புத்த பகவானிடம் என்னுடைய பக்தி காரணார்த்தமானது. அந்தப் புத்தர் சிலையின் பத்மபாதங்கள் எனக்கு ஒரு முக்கியமான செய்தியை அறிவித்தன!" என்றார்.

"ஆகா! எங்கள் காதில் ஒன்றும் விழவில்லையே?"

"மௌன பாஷையில் அச்செய்தி எனக்குக் கிடைத்தது."

"அது என்ன செய்தி? எங்களுக்குத் தெரியலாமா?"

"இன்றிரவு பன்னிரண்டு நாழிகைக்கு அநுராதபுரத்தில் சிம்மதாரைத் தடாகத்துக்கு அருகில் நான் வர வேண்டுமென்று பகவானுடைய பாதமலர்கள் எனக்கு அறிவித்தன!" என்றார் பொன்னியின் செல்வர்.

(தொடரும்)

கல்கி கலெக்ஷன்



தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நெடுங்காலம் நடந்து வந்த போர்களைக் குறித்துக் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

அதே மாதிரியாக ஸ்வரங்களுக்கும் அபஸ்வரங்களுக்கும் நீடித்த பெரிய யுத்தம் ஒரு காலத்தில் நடந்தது. இந்த யுத்தத்தில் அபஸ்வரங்களின் கட்சி ஜயித்து விடுமோ என்று ஒருசமயம் பீதி யுண்டாயிற்று. ஏனெனில் ஸ்வரங்களின் சைன்யம் கணக்குக்கும் வரையறைக்கும் உட்பட்டது. இத்தனை வீரர்கள்தான் என்று எண்ணி விடலாம். அந்த வீரர்கள் இன்னின்ன ஸ்தானத்திலே நிற்க வேண்டும் என்ற வரையறையும் இருந்தது. ஆனால் அபஸ்வரங்களின் சைன்யமோ இராவணனுடைய மூலபலத்தைப் போல அளவிட முடியாத எண்ணிக்கை கொண்டதாயிருந்தது. புற்றிலிருந்து கிளம்பும் ஈசலைப் போல அபஸ்வர சேனா வீரர்கள் முடிவில்லாமல் வந்து கொண்டிருந்தார்கள். வரை துறை, ஒழுங்கு, கட்டுப்பாடு எதுவும் இல்லாமல் நினைத்த நினைத்த வேளைகளிலெல்லாம் கிளம்பிக் கண்டகண்ட இடங்களிலெல்லாம் புகுந்து தாக்கினார்கள். ஸ்வரங்களின் பாடு மிக ஆபத்தாய்ப் போய்விட்டது. இந்தப் பூவுலகத்திலிருந்து அடியோடு அழிந்து போக வேண்டியதாக நேருமோ என்று ஸ்வரங்கள் பீதியுற்றுத் தங்களுடைய தாயாகிய சங்கீத தேவதையிடம் சென்று முறையிட்டன. சங்கீத தேவதையும் அபஸ்வரங்கள் படுத்திய பாட்டினால் மிகவும் நொந்து போயிருந்தாள். "வாருங்கள்; குழந்தைகளே! நாதப் பிரம்மமாகிய நம் இறைவனிடம் போய் முறையிடுவோம்!" என்று

அமரர் கல்கி

ஆறுதல் சொல்லி அழைத்துப் போனாள். நாதஸ்வரத்தின் சந்நிதிக்குச் சென்று சங்கீத தேவதையும் அவளுடைய குழந்தையாகிய ஸுஸ்வரங்களும் முகாரி ராகத்தில் தங்களுடைய சோகக் கதையைச் சொல்லிப் புலம்பினார்கள். அதனால் மனமிரங்கிய நாதப் பிரம்மம் தமது சந்நிதானத்தில் நின்ற வீரர்களில் சிலரைப் பார்த்து, "நீங்கள் பூவுலகத்தில் போய்ப் பிறந்து அபஸ்வரங்களை அதம் செய்து ஸுஸ்வரங்களின் ஆட்சியை நிலை நாட்டி வாருங்கள்!" என்று அருள் புரிந்தார்.

நாதஸ்வரச் சக்கரவர்த்தி!

அவ்வாறு நாதப் பிரம்மத்தின் கட்டளைக்கு உட்பட்டுப் பூலோகத்தில் பிறந்த கானவீரரின் பெயர் திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை.

★

இந்த நாளில் தமிழ் நாட்டில் பிறந்தவர்கள் பல விதங்களில் கொடுத்து வைத்தவர்கள். சிறப்பாக, சங்கீத உணர்ச்சி வாய்ந்தவர்களுக்குத் திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளையின் நாதஸ்வர கானத்தைக் கேட்பது வாழ்வில் ஒரு மிகச் சிறந்த அநுபவமாயிருக்கும். அவருடைய வாசிப்பைக் கேட்டு ஆனந்திக்கக் கொடுத்து வைத்தவர்கள் அதிர்ஷ்டசாலிகள்தான். நம்மைக் காட்டிலும் கர்நாடக சங்கீதக் கலை அதிக அதிர்ஷ்டசாலி. கர்நாடக சங்கீதத்திலும் தோடி ராகத்தின் அதிர்ஷ்டத்தை இவ்வளவென்று சொல்லி முடியாது.

இதற்கு முன்னால் தென்னாட்டில் எவ்வளவோ வித்வான்கள் தோடி ராகத்தைச் சிறப்புறக் கையாண்டு புகழ் பெற்றிருக்கிறார்கள். ஆனால் ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளையோ, தோடி ராகத்தைச் சக்கரவர்த்தியின் சிம்மாதனத்திலேயே ஏற்றி வைத்து விட்டார். மற்றப் பெரிய வித்வான்களெல்லாம் தோடி ராகத்தைக் கையாண்டதனால் தாங்கள் புகழ் பெற்றார்கள். ஆனால் ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளை தோடியைக் கையாண்டதனால் தோடி ராகம் புகழ் பெற்றது.

ஆஹா! ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளையின் தோடி ஆலாபனையை முதன் முதலில் கேட்டபோது, அவருடைய கற்பனையை விட்டுத் தள்ளுங்கள், - நம்முடைய மனதில் என்னென்ன இன்பமயமான கற்பனைகள் எல்லாம் உதித்தன!

குழந்தை தாயிடம் கெஞ்சும் குரலைக் கேட்டோம்; அன்னை குழந்தையிடம் கொஞ்சும் குரலைக் கேட்டோம்; ரதியும் மன்மதனும் பேசிக் கொண்ட காதல் மொழிகளைக் கேட்டோம்; முருகன் சிவபெருமான் செவிகுளிர மொழிந்த உபதேசத்தைக் கேட்டோம்; கலைமகள் கவிஞனுக்கு அருளிய ஆசி மொழிகளைக் கேட்டோம். நாரத முனிவருடைய தம்புரா சுருதியைக் கேட்டோம்; இராவணன் தன் எலும்பை ஒடித்து வீணையாகச் செய்து வாசித்த கானத்தைக் கேட்டோம்; கானப் பறவைகளின் கலகல த்வனியைக் கேட்டோம்; கோலக் குயில்களின் குரல் இனிமையைக் கேட்டோம்...

இவ்விதம் ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளை தோடி வாசித்துக் கொண்டிருந்த வரையில் நம்முடைய உள்ளமும் கற்பனை உலகில் சஞ்சரித்துக் களித்துக் கொண்டிருந்தது. அவர் வாசிப்பை நிறுத்தியதும் நாமும் இந்தப் பூவுலகத்துக்கு வந்து இத்தனை நேரமும் நாம் அனுபவித்த இன்பங்கள் எல்லாம் கனவோ, நினைவோ என்ற வியப்பில் முழுகினோம்.

★

கர்நாடக சங்கீதத்தில் தோடி ஓர் அபூர்வமான ராகம். அந்த ராகத்தின் வரம்புகளுக்கு உட்பட்டு, பூரண ஸ்வரங்களுடன் ஜீவகளை தோன்றப் பாடுவதும் வாத்தியத்தில் வாசிப்பதும் அபூர்வமான சாதனை. ஆகையினாலேயே தோடி ராகத்தை விசேஷமாகக் குறிப்பிட்டுச் சொன்னோம். அந்த ராகத்தை அவ்வளவு அற்புதமாக ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளை கையாளுகிறார் என்றால், அவர் மற்ற ராகங்களை எப்படி வித்தைகள் தோன்ற வாசிக்கிறார் என்பதைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

கல்யாணி, காம்போதி போன்ற பழமையான ராகங்களை வாசித்தாலும் சரி, அல்லது ஜகதலப் பிரதாப் பிரியா, ஜவாஹர்லால் மனோகரி போன்ற புதிய ராகங்களை வாசித்தாலும் சரி. ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளையின் தனி மெருகு வாய்ந்த கற்பனைத் திறனையும் இனிய மழலை ஓசையையும் அவருடைய வாசிப்பில் காண்போம்; கண்டு உள்ளத்தைப் பறி கொடுத்து உலகத்தையே மறப்போம்.

★

ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளை அவர்களின் நண்பர்கள் அவருக்கு 'அகில உலக நாதஸ்வர ஏக சக்ராதிபதி' என்ற பட்டத்தைச் சூட்டியிருக்கிறார்கள். இதை ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளையும் ஏற்றுக் கொண்டு கடிதத் தலைப்புகளில் அச்சடித்திருக்கிறார். இவ்வளவு படாடோபமான பட்டத்தைக் குறித்து 'நாஸுக்' மனிதர்கள் புன்னகை புரிவார்கள். நாமும் அந்தப் பட்டங்களை அவ்வளவாக ரஸிக்கவில்லைதான். ஏனெனில், இந்தக் காலத்தில் 'ராஜா' 'மன்னர்' 'சக்கரவர்த்தி' முதலிய பட்டங்கள் அவ்வளவு மதிப்புப் பெற்றிருக்கவில்லை. ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளையினால் அல்லவா அநாவசியமாக மதிப்பு உண்டாகி வருகிறது?

மற்றபடி, 'ராஜா' 'சக்கரவர்த்தி' என்னும் பட்டங்களுக்கு மதிப்புள்ள காலமாயிருந்தால் ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளை 'அகில உலக நாதஸ்வர சக்கரவர்த்தி' என்ற பட்டத்துக்குப் பொருத்தமானவர் என்பதில் ஐயமில்லை. கர்நாடக சங்கீத உலகத்தில் நாதஸ்வர வாத்தியம் ராஜ சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கிறது. அந்த ராஜ வாத்தியத்தை இணையில்லா கற்பனைத் திறனுடன் கையாண்டு அந்த வாத்தியத்துக்கு முன் எப்போதுமில்லாத பெருமையை ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளை அளித்திருக்கிறார். அப்படியிருக்கும்போது 'நாதஸ்வர சக்கரவர்த்தி' என்று அவரை ஏன் சொல்லக் கூடாது?

★

சமூக வாழ்க்கையையொட்டிய லௌகிக விவகாரங்களில் ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளையைப் பற்றிச் சில குறைகள் சொல்லப்படுவதுண்டு. "கச்சேரிக்கு ஒப்புக் கொண்டு வராமலிருந்து விடுவார்" என்பார்கள். "வந்தாலும் சரியான சமயத்துக்கு வந்து சேர மாட்டார்" என்பார்கள். "சரியான சமயத்துக்கு வந்தாலும் மனது வைத்து வாசிக்க மாட்டார்; ஏமாற்றிப் போடுவார்!" என்பார்கள்.

இந்த மாதிரி குறைகள் சொல்வதற்கு இடமில்லாதபடி ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளை நடந்து கொண்டால் நல்லதுதான். ஆனால் இப்படியெல்லாம் நடந்து கொள்ளும் ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளையிடம் அவருடைய கலை மேதையும் கற்பனைத் திறனும் இல்லாமலிருந்தால் நாம் திருப்தியடைய முடியுமா? ஒரு நாளும் இல்லை. "பூலோகத்துக்கு வரும்போது அவரிடம் இம்மாதிரி குறைகள் இருந்தால் இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால் சங்கித உலகில் சஞ்சரிக்கும்போது அவர் கற்பனையின் உச்சியில் – கலையின் சிகரத்தில் இப்போதுள்ளதுபோல் எப்போதும் இருக்க வேண்டும்" என்றுதான் ரஸிகர்கள் ஒருமுகமாய்க் கூறுவார்கள். அவ்விதமே நாமும் சங்கீத தேவதையிடம் விண்ணப்பம் செய்து கொள்கிறோம். ●

(கல்கி, மே.21, 1950)

பாராட்டு

கனம் மாதவ மேனன் அவர்கள் சட்ட இலாகாவுக்கு மந்திரியா யிருந்து கொண்டு கல்வி இலாகா மந்திரியாகவும் பொறுப்பு வகிக்க முன் வந்தபோது நாம் நம் முடைய அநுதாபத்தையும் கவலையையும் தெரிவித்துக் கொண்டிருந்தோம்.

ஏனெனில், சட்ட இலாகாவே கொஞ்சம் கஷ்டமான இலாகா. வக்கீல்கள், பப்ளிக் பிராஸிக்யூடர்கள், மாஜிஸ்ட்ரேட்டுகள், கோர்ட்டுகள், குற்றவாளிகள், சிறைகள், வார்டர்கள், கம்யூனிஸ்ட் கைதிகள், - ஆகியவர்களோடு விடாமல் மாரடிப்பது இலேசான காரியம் அல்ல.

கல்வி இலாகாவிலோ என்றால், ஓயாமல் அதிகச் சம்பளம் கேட்கும் உபாத்தியா யர்கள், கிராண்ட் அதிகம் கேட்கும் பள்ளிக்கூடங்கள், உளுத்துப்போன கல்வி அதிகாரிகள், பரீட்சை தேறாத மாணாக் கர்கள், வீரத் தமிழ் ஆசிரியர்கள், வகுப்பு வாரி ஸீட்டுக்கள், கட்டாய ஹிந்தி, கருப்புச்சட்டை, - ஆகிய பல சஞ்சித கர் மங்களைக் கட்டிக் கொண்டு தொல்லைப் பட வேண்டும்.

இவ்வளவு தொல்லைகளுக்கும், தர்ம சங் கடங்களுக்குமிடையே, கல்வி மந்திரி பதவி வகிப்பவர் நாம் பாராட்டக் கூடியதான ஏதாவதொரு காரியத்தைச் செய்து விட் டால், அதைப் பூதக் கண்ணாடி வைத்துப் பார்த்தாவது தெரிந்து கொண்டு, நாம் களிப்படைந்து அவரையும் பாராட்டுவது நியாயமேயல்லவா?

★

அன்னிய அரசாங்க இயந்திரத்துக்கு குமாஸ்தாக்களை உற்பத்தி செய்து கொடுப் பதே முக்கிய இலட்சியமாகக் கொண்ட கல்வி முறை இந்திய தேசத்தில் சென்ற நூற்றைம்பது வருஷத்துக்கு மேலாக நிலை பெற்று வந்திருக்கிறது. அந்தக் கல்விமுறை சுதந்தர இந்தியாவுக்குப் பொருந்தவே பொருந்தாது. அதை அடியோடு ஒழித்து விட்டு வேறுமுறையை அமைப்பதுதான் நல்லது. ஆனால் அப்படி அடியோடு பழையமுறையை ஒழிப்பதற்கு வேண்டிய தைரியம் உள்ளவர் யாரும் இல்லை. அத் தகைய தைரியசாலி காந்தி மகான் ஒருவர்தான். அவர் இன்று நம்மிடையே இல்லை. ஆகையால் அந்தப் பழைய காலங்கடந்த உளுத்துப் போன குமாஸ்தா கல்வி முறையையே இன்னமும் கட்டிக் கொண்டு அழுகிறோம். அந்தக் கல்வி முறை யில் உள்ள குறைகளைப் போக்கிச் சீர் திருத்தச் சுதந்தர இந்தியாவுக்குத் தகுதி யாக்குவதற்காக நம் தேசியத் தலைவர்களும் காங்கிரஸ் மந்திரிகளும் முயன்று வரு கிறார்கள். அவர்களுடைய முயற்சி இது வரையில் கணிசமான பலன் எதுவும் அளித்து விடவில்லை. சல்லடைத் துவாரங் களை ஒவ்வொன்றாக அடைப்பதற்குச் செய்யும் முயற்சியைப் போலவே கல்விச் சீர்திருத்த முயற்சியும் இருந்து வருகிறது. ஒரு துவாரத்தை அடைத்து விட்டு இன்னொரு துவாரத்துக்குப் போவதற்குள்ளே, அடைத்த துவாரம் மறுபடியும் பொத்துக் கொண்டு விடுகிறது.

பழைய கல்வி முறையில், - அதாவது இன்னமும் நம்மைப் பிரிய மனமின்றி அட்டைபோல் ஒட்டி, நம் குழந்தைகளின் இரத்தத்தை உறிஞ்சிக் கொண்டிருக்கும் கல்வி முறையில் - பாஷைகள் வகித்த ஸ்தா னம் முக்கியமாகச் சீர்திருத்த வேண்டிய காரியங்களில் ஒன்றாயிருந்தது. நமது பள்ளிக் கூடங்களிலும் கலாசாலைகளிலும் ஆங்கில பாஷையே தனியரசு செலுத்தி வந்தது. பிள்ளைகளின் தாய் மொழியும் மற்ற இந்திய மொழிகளும் மூலையில் ஒதுங்கி நின்று, அழைக்கும்போது அருகில் வந்து, கைகட்டி வாய் பொத்தி ஆங்கிலத் துக்குச் சேவகம் செய்து வந்தன. இந்தப் படு கேவலமான நிலைமையைச் சுதந்தர இந்தியாவில் யாரும் சகிக்க முடியாது தானே?

ஆகையால் மாகாணங்களில் காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்டவுடனே காங்கிரஸ் மந்திரிகள் பாஷைச் சீர்திருத்தத்தை முதலாவது சீர்திருத்தமாக எடுத்துக் கொண்டனர். ஆங்கிலத்தைச் சர்வாதிகார பீடத்திலிருந்து இறக்கவும், தாய் பாஷைக் கும் தேசிய பாஷையாகிய ஹிந்திக்கும் தக்க இடம் கொடுக்கவும் முயன்றனர்.

சென்னையில் மாஜி கல்வி மந்திரி ஸ்ரீ.டி.எஸ். அவிநாசிலிங்கம் தமிழ்நாட்டில் தமிழுக்கும் தெலுங்கு நாட்டில் தெலுங்குக் கும் - இப்படித் தாய்மொழிகளுக்கு அதிக

கிரேராம்!

கௌரவம் கொடுக்க ஏற்பாடு செய்தார். தேசிய பாஷையாகிய ஹிந்தி போதனைக்கும் ஏற்பாடு செய்தார். ஹிந்தியைக் கட்டாயமாகப் போதிப்பதா, இஷ்ட பாடமாகப் போதிப்பதா, பதினாறு அணா கட்டாயத்துக்கும் இரண்டணா இஷ்டத்துக்கும் போதிக்குமாறு விடுவதா என்னும் மகத்தான பிரச்னைகளில் கொஞ்சம் குழப்பம் ஏற்பட்டது. கருப்புச் சட்டைப் பயம் இத்தகைய குழப்பத்துக்குக் காரணமாயிருந்தது. கடைசியில் அந்தப் பயம் ஒரு வழியாகத் தீர்ந்ததும் குழப்பமும் ஒருவாறு தெளிந்தது. ஆனால் மொத்தத்தில் எந்தெந்த பாஷைக்கு எந்தெந்த வகுப்பில் எவ்வளவு இடம் என்னும் விஷயம் நிச்சயமாகவில்லை. வருஷத்துக்கு வருஷம் பாஷைத் திட்டங்கள் மாறித் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தன. பிள்ளைகளும் தொல்லைப்பட்டார்கள்; ஆசிரியர்களும் தொல்லைப்பட்டார்கள்; மந்திரிமார்களும் தொல்லைப்பட்டார்கள்.

★

தாய் பாஷை தமிழ், – தேசிய பாஷை ஹிந்தி, – சர்வ தேச பாஷை ஆங்கிலம், இந்த மூன்று பாஷைகளையும் தமிழ் நாட்டுக் குழந்தைகள் கற்றுக் கொண்டேயாக வேண்டும். இவற்றுடன், இந்தியாவின் பூர்வீக கலாசார பாஷையான சம்ஸ்கிருத பாஷைக்கும் இடம் கொடுக்கத்தானே வேண்டும்? சம்ஸ்கிருத பாஷையின் அபூர்வமான செல்வங்களையெல்லாம் தென்னாடல்லவோ இத்தனை காலமும் போற்றிக் காப்பாற்றி வந்திருக்கிறது? ஆப்கானியர் – மொகலாயர் படையெடுப்பினால் வடநாட்டில் வடமொழிச் செல்வம் மறைந்து விட்டதே! நமது சங்கரர், இராமானுஜர் போன்றவர்கள் அல்லவா காப்பாற்றி வந்திருக்கிறார்கள்? உபநிஷதமும், பகவத்கீதையும், வால்மீகியும், காளிதாஸனும், பவபூதியும், பட்டபாணனும் அளித்திருக்கும் மகா இலக்கியச் செல்வங்களைத் தென்னாடு அலட்சியம் செய்ய முடியுமா? செய்து விட்டால் நஷ்டம் யாருக்கு? இந்த நாளில் சம்ஸ்கிருதம் கற்பிக்கும் தனிப்பட்ட வேத பாடசாலைகள் மறைந்து போய்விட்டன. சாதாரணப் பள்ளிக்கூடங்களிலும் சம்ஸ்கிருதம் கற்க வழியில்லாவிட்டால், அந்த பாஷை அரோகராதான்! – இவ்வாறு பாரத நாட்டின் பழம்பெரும் கலாசாரத்திலும் பண்பாட்டிலும் மிகுந்த சிரத்தை கொண்ட பெரியோர்களும் அறிஞர்களும் தங்கள் கவலையைத் தெரிவித்தனர்.

இந்தக் கோரிக்கைகள் எல்லாவற்றையும் சம்மேளனப் படுத்திச் சமரசம் செய்து ஹைஸ்கூல்களில் பாஷைகளின் போதனைக்கு ஒரு திட்டம் வகுத்து வெளியிட்டார் கல்வி மந்திரி கனம் மாதவ மேனன். துரதிர்ஷ்டவசமாக, அதில் ஒரு பெரிய குறை இருந்து விட்டது! நல்ல எண்ணம் படைத்தவர்களுக்கு அது கண்ணை உறுத்தும் குறை; எதிரிகளுக்கும் விஷமிகளுக்கும் மனதிற்குள் கொண்டாட்டம் அளிக்கக் கூடிய குறை.

குறையுடன் கூடிய மேற்படி திட்டத்தின் முக்கிய அம்சங்கள் இவை:-

1. இங்கிலீஷ் மூன்றாவது ஸ்தானத்துக்குத் தள்ளப்படும். எனினும் அதை நம் ஹைஸ்கூல் பிள்ளைகள் வாரத்துக்கு ஐந்து பீரிட் கட்டாயமாகக் கற்றுத் தொலைக்க வேண்டும்.

2. தேசிய பாஷை ஹிந்தி நடு நாயகமான இரண்டாவது ஸ்தானத்தை வகிக்கும். அதை வாரத்துக்கு நாலு பீரிட் அவசியமாக நம் பிள்ளைகள் படித்தாக வேண்டும்.

3. பிரதான முதல் பாஷையாக எந்த பாஷையைக் கற்பது என்ற கேள்விக்கு மூன்று விடைகள்:

(அ) தமிழ்நாட்டில் உள்ள தமிழ்க் குழந்தைகள் தமிழை முதல் மொழியாகக் கற்கலாம்.

(ஆ) தமிழ்நாட்டில் உள்ள தெலுங்குக் குழந்தைகள் தெலுங்கை முதல் மொழியாகக் கற்கலாம். (அதே மாதிரி தெலுங்கு நாட்டில் வசிக்கும் தமிழ்க் குழந்தைகளும் தமிழை முதல் மொழியாகக் கொள்ளலாம்.)

(இ) மற்ற எல்லாப் பாடங்களும் தாய் பாஷையில் இனி நடக்குமாதலால், தாய் பாஷையைத் தனியாகக் கற்க அவசிய

அமரர் கல்கி

மில்லை என்று நினைப்போர் இந்தியாவின் புராதன கலாசார மொழியாகிய வட மொழியைப் பிரதான முதல் மொழியாக எடுத்துக் கொண்டு படிக்கலாம்.

மேற்படி பாஷைத் திட்டம் எவ்வளவோ ஆழ்ந்த யோசனைகளின் பேரில் சமரசப் படுத்தும் நோக்கத்துடன் தயாரிக்கப் பட்டிருக்கிறது என்பது படிக்கும்போதே தெரிகிறது. ஆயினும் அதில் உள்ள குறையும் தெளிவாகத் தெரிகிறது. தாய்மொழியான தமிழ் அல்லது தெலுங்கையும் கலாசார பாஷையான சம்ஸ்கிருதத்தையும் போட்டியிட்டு முட்ட விடுவதுதான் அந்தப் பெருங் குறையாகும்.

வெறும் வாயை மெல்லுகிறவர்களுக்கு அவலும் கிடைத்ததுபோல், தேசத்தின் விரோதிகளும் காங்கிரஸ் எதிரிகளும் இதை நன்றாக உபயோகப்படுத்திக் கொள்வார்கள். "சம்ஸ்கிருத பூதம் தமிழ்க் கன்னியின் கழுத்தை நெறித்துக் கொல்லுகிறது!" என்று கூச்சலிடுவார்கள். முக்கியமாக, தமிழ் நாட்டில் இத்தகைய பூசல்களைக் கிளப்பியே வாழ்க்கை நடத்தி வருகிறவர்களுக்குக் கொண்டாட்டமாயிருக்கும்.

எதிரிகளின் கொண்டாட்டம் ஒரு புறம் இருக்க, தமிழ்நாட்டில் தமிழையும் தெலுங்கு தேசத்தில் தெலுங்கையும் தனிப் பாடமாகக் கற்க வேண்டிய அவசியமில்லை என்ற நிலைமை அபத்தமானது தானே!

இதையெல்லாம் பலரும் எடுத்துக் காட்டினார்கள். கோயமுத்தூரில் நடந்த தமிழ் வளர்ச்சி மகாநாட்டில் தீர்மானமும் போட்டார்கள். கனம் மாதவ மேனனின் காதிலும் இந்தக் கூக்குரல்கள் விழுந்தன.

★

ஜனநாயகம் என்பது பொது மக்களின் கருத்தைக் கூடியவரையில் அறிந்து, அதையொட்டி அரசியல் நடத்துவதுதான். தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று பிடிவாதம் பிடிப்பதல்ல. சத்தியம், நேர்மை, மனச்சாட்சி சம்பந்தப்பட்ட காரியங்களிலும் கொள்கைகளிலும் பொது ஊழியர்கள் இம்மியும் அசையாமல் உறுதியுடன் நிற்க வேண்டும். மற்றப்படி சாதாரண சௌகரியங்களை முன்னிட்ட காரியங்களில் மக்களின் கருத்தையொட்டிப் போக வேண்டும். இந்த முறையில் கனம் மாதவமேனன் ஜனநாயகத் தத்துவத்தையனுசரித்து நடந்து கொள்ள முன் வந்தார். பாஷை போதனைத் திட்டத்தை மறுபடியும் மாற்றினார். நல்ல முறையில் மாற்றியிருக்கிறார்.

முதல் மொழிக்கென்று அளித்திருந்த ஆறு பீரிடுகளில் ஒரு பீரிடை எடுத்தார். இரண்டாவது ஹிந்தி பாஷைக்குக் கொடுத்திருந்த நாலு பீரிடில் இரண்டை எடுத்தார்.

இந்த மூன்று பீரிடுகளையும் புராதன பாஷைக்கு என்று ஒதுக்கினார். அதாவது இந்த மூன்று பீரிடுகளில் ஒரு மாணாக்கன் இஷ்டப்பட்டால் சம்ஸ்கிருதம் கற்கலாம்; அல்லது பழைய தமிழ் இலக்கியங்களைக் கற்கலாம்.

மற்றப்படி தமிழ்நாட்டில் தமிழையும் தெலுங்கு தேசத்தில் தெலுங்கையும் முதல் மொழியாக ஐந்து பீரிடுகள் எல்லா மாணாக்கர்களும் கற்க வேண்டும்.

இது நிராட்சேபணையான திட்டம் என்று கருதுகிறோம். இரண்டு விதத்தில் நன்மை பயப்பது.

ஹிந்தி நாலு பீரிடுகளில் இரண்டு பீரிடைக் குறைத்தது ஒரு பெரிய நன்மையல்லவா? போதும்! ஹிந்திக்கு வாரம் இரண்டு பீரிடு யதேஷ்டம்!

தாய் பாஷைக்கும் சமஸ்கிருதத்துக்கும் போட்டியில்லாமல் போயிற்று.

தாய் பாஷை கட்டாயம் கற்றாக வேண்டும். சமஸ்கிருதம் இஷ்டமுள்ளவர்கள் கற்கலாம்.

ஏதேதோ கஷ்டப்பட்டுத் திண்டாடித் திணறிக் கடைசியில் பாஷை விஷயமாக ஒரு நல்ல முடிவுக்கு வந்ததின் பொருட்டுக் கல்வி மந்திரி கனம் மாதவமேனனை மனமாரப் பாராட்டுகிறோம்.

இந்தப் புதிய திட்டம் நிகழும் வருஷத்தில் அமுலுக்கு வராது என்று தெரிகிறது. இதுதான் சிறிது ஏமாற்றத்தை அளிக்கிறது. போன வருஷத்து முறையே இந்த வருஷத்தில் அனுசரிக்கப்படும் என்றும்; புதிய திட்டம் அடுத்த வருஷத்தில் வரும் என்றும் அறிகிறோம்.

சாத்தியமானால், இந்த வருஷத்திலே புதிய திட்டம் அமுலுக்கு வருவது நலம் என்று கருதுகிறோம். பள்ளிக்கூடங்களில் பாஷைப் பிரச்னை ஒரு வழியாகத் தீர்ந்து விட்டது என்று திருப்தியடைய ஏதுவாயிருக்கும். கல்வி இலாகாவின் நூறு பிரச்னைகளில் ஒன்று தீர்ந்து விட்டது என்ற குதூகலத்துடன் மற்ற 99 பிரச்னைகளைக் கவனிக்கலாம் அல்லவா? ●

(கல்கி, ஜூன் 18, 1950)

பொறுமை இண்டர்நேஷனல்!

ஆச்சி என்றாலே மனோரமா...
மனோரமா என்றாலே
பொறுமை!



• ரேவதி



• ஏவி.எம். சரவணன்

''வீரத் திருமகன் என்கிற ஏவி.எம். படத்தில் மனோரமாவுக்கு காஸ்டியூம், மேக்-அப் என்று ஷூட்டிங்கிற்கு ரெடியாவதற்கே இரண்டு மணி நேரம் பிடிக்கும் கேரக்டர். ஒருநாள் திடீரென்று ஷூட்டிங் கேன்சலாகி விட, அந்த விவரம் அனைவருக்கும் தெரிவிக்கப்பட்டது. படத்தின் புரொடக்ஷன் மேனேஜர் புதியவர். மனோரமாவுக்கு மட்டும் ஷூட்டிங் கேன்ஸலான விஷயத்தைச் சொல்லத் தவறி விட்டார்.

''மறுநாள் வீட்டிலேயே முழு மேக்-அப் போட்டுக் கொண்டு, ஸ்டூடியோவுக்கு வந்து விட்டார் மனோரமா. விஷயம் என் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்ட நேரத்தில் மனோரமாவே, என் அறைக்கு வந்து விட்டார். நான் தவறுக்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, தவறு செய்த புரொடக்ஷன் மேனேஜர் மீது தக்க நடவடிக்கை எடுத்து விடுகிறேன்'' என்று கூறியபோது,

''நான் அதுபற்றிப் பேசத்தான் உங்களிடம் வந்தேன். தவறு என்பது சகஜம். தயவுசெய்து, அந்த புரொடக்ஷன் மேனேஜர் மீது எந்த நடவடிக்கையும் எடுத்து விடாதீர்கள். பாவம்! புதியவர்; வளர வேண்டியவர்'' என்றார்.

இதைச் சொன்னவர் ஏவி.எம். சரவணன். எங்கே? மனோரமாவுக்கு நடந்த பாராட்டு விழாவில்.

எதற்கு?

ஏவி.எம்மின் 'ஆச்சி இன்டர்நேஷனல்' டிவி தொடரின் வெற்றிக்கு அவர் உதவியதற்கு.

ரேவதி பேசும்போது இன்னொரு சம்பவத்தைக் குறிப்பிட்டார் :

''பொள்ளாச்சியில் ஒரு கல்லூரியில் ஷூட்டிங். அங்கு வசதிகள் குறைவு. டைரக்டர் புதியவர். ஷூட்டிங் பார்க்க ஏராளமான கூட்டம். காலையில் எட்டு மணிக்கு ஆச்சி மனோரமா ஷூட்டிங்கிற்கு வந்து விட்டார். அவ்வப்போது, ''இதோ, அடுத்து உங்கள் சீன்தான்'' என்று டைரக்டர் சொல்லிக் கொண்டிருந்தாரே தவிர, அவரால் மனோரமா சம்பந்தப்பட்ட காட்சிகளைப் படம் பிடிக்க முடியவில்லை. மாலை ஆறு மணி வரை இதே கதைதான்.

புறப்படும்போது, டைரக்டர் மன்னிப்புக் கேட்டுக் கொண்டபோது, 'நாளைக்கும், இன்னிக்கு மாதிரியே காலை எட்டு மணிக்கு வந்திடவா?' என்று கேட்ட ஆச்சி, நடிப்பில் மட்டுமில்லை; பொறுமையிலும் சிகரம்தான்.''

— மௌலி




அக்னிசர்மா பக்கம்

நடக்குமென்பார் நடக்கும்!




மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

எந்தக் காரியமானாலும் பிரச்னையில்லாம ஸ்மூத்தா முடியற வாரம் உங்களுக்கு. கெஸ்டுங்க, பிரண்ட்ஸ்ங்கன்னு வர்றதால குடும்பத்துல விருந்து, கேளிக்கைன்னு குதூகலமா இருக்கும். உங்களுக்கு வர்ற கடிதங்களும் நல்ல சேதி சொல்றதாத்தான் இருக்கும். சிலருக்குக் கல்யாண யோகமும் இருக்கு. இன்னும் சிலருக்கு திடீர் அதிர்ஷ்டத்துக்கான சான்ஸும் அமோகமாத் தெரியுது. கவர்மெண்ட் சர்வண்ட்ஸ், போலீஸ்காரங்களுக்கு மாமூல் வாழ்க்கைல பிரச்னை இருக்காது. அலைச்சல் அதிகமா இருக்கும். எல்லோருமே பயணத்துல உஷாரா இருக்கணும்.




ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

ஷார்ஜா மேட்சல நூறு ரன்னைக் கூட எட்ட முடியாம இந்தியாகிட்ட தோத்துப்போன ஸ்ரீலங்கா அணியோட நிலைமைதாங்க உங்களுக்கும். மத்தவங்க கைவிட்டாலும் ரணதுங்கா நின்னு ஆடி அணியை பலப்படுத்துவார்னு நினைக்கற நேரத்துல அவரும் அவுட்டான மாதிரிதான் உங்க நிலை. நீங்க நம்பறவங்களால கூட உங்களுக்குப் பிரச்னைதான் வரும். உத்தியோகஸ்தர்கள் ரொம்பவும் ஜாக்கிரதையா இருக்கணும். இல்லேன்னா, அதிகாரிங்களோட எரிச்சலுக்கு ஆளாயிடுவீங்க. கூடவே குடும்பச் செலவும் கூடும். பம்பர் பரிசு மாதிரி யாரோ ஒருத்தருக்கு வேணா, வெளிநாட்டுத் தொடர்பால நன்மை கிடைக்கும். எதிலும் உஷாரா இருக்கறதுதான் நல்லது.




மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

ஃபீல்டர்களே இல்லாம ரன்னடிக்கிற பேட்ஸ்மேன் மாதிரிதாங்க நீங்க. எந்தக் காரியத்தைத் தொட்டாலும் ஜெயம்தான். வழக்கு கிழக்குன்னு வர்ற விஷயங்களில் கூட வெற்றி உங்க பக்கம்தான். கொடுக்கல், வாங்கல், லாட்டரி எதுவானாலும் அதிர்ஷ்டத்துக்குப் பஞ்சமிருக்காது. பண விஷயமும் தாராளமாவே இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு புரமோஷன், டபுள் இன்கிரிமெண்ட்னு தடபுடலா நடக்கும். சிலருக்கு கலைப் பொருள்கள் அல்லது லக்ஜுரி அயிட்டங்கள் வந்து சேரும். குடும்பத்துல சுப விஷயங்கள் நடக்கறதால மனசு சந்தோஷமாவே இருக்கும்.



கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

நீங்க அடிக்கற பந்தை அம்பயரே 'காட்ச்' பிடிச்சு அவுட்டாக்கினா எப்படி இருக்கும்? அந்த மாதிரி முக்கியமான கிரகங்கள் எதுவுமே உங்களுக்குச் சாதகமா இல்லீங்க. எந்தக் காரியமானாலும் நிதானமாவும் பக்குவமாவும் கையாளணும். இல்லேன்னா எல்லாத்துலயும் பிரச்னைங்கதான். பதற்றம், உணர்ச்சி வசப்படுதல் இந்த இரண்டையும் இந்த வாரம் தலையைச் சுத்திக் கடாசிடுங்க. கொடுக்கல், வாங்கலும் வேண்டாம். கூடப் பிறந்தவங்க உடல் நலனிலும் தந்தையின் உடல் நலனிலும் அதிக அக்கறை காட்டறது நல்லது.



சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*


நண்பர்கள், உறவினர்கள்னு நிறையப் பேர் உங்களைத் தேடி வருவாங்க. தண்டச் செலவானு நினைக்காதீங்க. அவங்களால உங்களுக்கு நல்லதே நடக்க உதவி கிடைக்கும். வியாபாரத்துல ஆதாயம் பெருகும். கடிதப் போக்குவரத்தும் ஆதாயமாவே இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு பிரகாசமான வாய்ப்புகளுக்கு சான்ஸ் இருக்கு. சில வீட்டுல கல்யாணப் பேச்சு அடிபடும். புதுமண ஜோடிகளாயிருந்தா அருமையான இடங்களுக்குப் போய் தேனிலவு கொண்டாடும் அதிர்ஷ்டம் அடிக்கும். சிலருக்கு அலைச்சலும் சில குறுக்கீடுகளும் உண்டுன்னாலும் உஷாரா இருந்தா ஊதித் தள்ளிடலாம்.



கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*


மலையைக் குடைஞ்சு எலியைப் பிடிக்கற வாரங்க இது. அலைச்சல் அதிகமா இருந் தாலும் பலன் கொஞ்சமாதானே இருக்கும். செலவும் கட்டுக்குள்ள இருக்காது. வீண் வம்பு, சண்டை சச்சரவுன்னு எதிலும் போய் மாட்டிக் காதீங்க. இன்னும் சொல்லப் போனா,

இரண்டு பேர் சண்டை போட்டுக்கிட்டாங்கன்னா, பக்கத்துல நின்னு வேடிக்கை கூடப் பார்க்காதீங்க. 'நாங்க சண்டை போடறது உனக்கு இலவச சினிமா மாதிரி தெரியுதா?'ன்னு அவுங்க இரண்டு பேரும் சேர்ந்து உங்ககிட்டே சண்டை போட ஆரம்பிச்சுடுவாங்க. கைப் பொருளை பத்திராம வெச்சுக்கணும். இல்லேன்னா களவு போயிடும். புதிய முயற்சிகளும் இந்த வாரம் வேண்டாம்.




துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)*

டெண்டுல்கர் சிக்ஸரும் பவுண்டரியுமா அடிக்க ஆரம்பிச்சுட்டாருன்னா அப்புறம் நம்ம அணிக்கு என்னங்க கவலை? அந்த மாதிரிதான் உங்களுக்கு குருவின் சஞ்சாரம் சாதகமா இருக்கு. அப்புறம் உற்சாகமான பலன்களுக்கு என்ன குறை வந்திட முடியும்? வெற்றியோட புகழும் பாராட்டும் சேர்ந்தே வரும். கல்யாணப் பேச்சும் வீட்டுல அடிபட ஆரம்பிக்கும். ஷேர் விஷயங்களும் உங்களுக்கே சாதகமா இருக்கும். செலவு இருக்கும்னாலும் குடும்ப நலத்துக்கான செலவாத்தான் இருக்கும். சிலருக்குப் புனித யாத்திரை புறப்படுவதற்கான சான்ஸ்'ம் அமோகமா இருக்கு.




விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

நீங்க மனகல எப்படிக் கணக்குப் போட்டு வெச்சிருக்கீங்களோ, அதுபடியே காரியங்கள் நடக்கும். எதிர்ப்புகளெல்லாம் அம்பேல் ஆயிடும். கோர்ட், கேஸ்'ன்னு ஏதாவது இருந்தாலும் அதெல்லாம் உங்களுக்குச் சாதகமாவே இருக்கும். கூடப் பிறந்தவங்க உதவுவாங்க. கலைத்துறையில் உள்ளவங்களுக்குப் புதுப்புது ஒப்பந்தங்கள் ஏற்பட சான்ஸ் இருக்கு. அரசாங்கப் பணியில் இருக்கறவங்க, ரொம்ப ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும். அரசியல்வாதிகளுக்கு திடீர் திருப்பங்களும் பிரச்னைகளும் வரும். பயணத்தில் எச்சரிக்கையா இருந்தா நன்மை உண்டாகும்.



தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

ஜான்ட்டி ரோட்ஸ் இல்லாத சவுத் ஆப்ரிக்க அணியோட ஃபீல்டிங் எப்படியிருக்கும்? அப்படித்தான் உங்களுக்கு இந்த வாரமும் இருக்கும். எதிலும் சிறப்பான பலன்களை எதிர்பார்க்க முடியாதுன்னாலும் அதி ஜாக்கிரதையா செயல்பட்டா கொஞ்சம் பலனையாவது எதிர்பார்க்கலாம். பணப் புழக்கம் குறையும்; அதே சமயம் செலவு கூடும். சமாளிக்கப் பெரும்பாடு பட வேண்டியிருக்கும். புதுக் காரியங்கள் தொடங்கறதுக்கான நேரம் இது நிச்சயமா இல்லை. எந்த நிலையிலும் நிதானத்தை விட்டுடாதீங்க.




மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

சூரியன், புதன், குரு ஆகியோரின் அனுகூலம் இருக்கறபோது உங்களுக்கு என்னங்க கவலை? உங்கள் செயல்திறன், நிர்வாகத் திறன் எல்லாமே வெளிப்பட்டு பாராட்டைக் குவிக்கப் போறீங்க. எதிரிங்க ஓடப் போற ஓட்டத்தைப் பார்த்து விலா நோகச் சிரிக்கப் போறீங்க. அப்பா வழிச் சொத்துக்கள் ஏதும் வரலாம். குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். மின்சாரம், இயந்திரப் பணியாளர்கள் எச்சரிக்கையா இருக்கணும். பயணத்தின் போது எல்லோருமே ஜாக்கிரதையா இருக்கணும்.



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

நீங்க நெனச்சுக்கிட்டிருக்கிற விஷயங்களும், திட்டங்களும் ரொம்ப ரொம்பச் சுலபமா நிறைவேறும். பொது நலப் பணியாளர்களுக்குப் பாராட்டுக் கிடைக்கிற வாரம். தொழிலாளர்கள் கோரிக்கைகள் ஏதாவது முதலாளிகள் கிட்ட வெச்சிருந்தா இந்த வாரம் அது ஈசியா நிறைவேறிடும். வியாபாரிகளுக்கு இந்த வாரம் அமோகம்தான். மாணவர்களுக்கு உல்லாசப் பயணம் போற சான்ஸ் இருக்கு. பெண்களுக்கு ஆடை அலங்காரப் பொருள்களுக்கு கியாரண்டியே தரலாம். நினைச்சபடி வாங்குவாங்க. எல்லோருமே கூட்டுத் தொழில், ஷேர் மார்க்கெட் விஷயங்களில் உஷாரா இருங்க.



மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

இது உங்களுக்குச் சோம்பலான வாரம். ஆமாம்; எதுவுமே சுறுசுறுப்பா நடக்காது. எல்லாமே ரொம்பவும் சாதாரணமாத்தான் நடக்கும். கூடவே குறுக்கீடுகளும் வரலாம். பண விஷயத்தில் ரொம்பவே எச்சரிக்கை அவசியம். யாரையும் நம்பி ஜாமீன் கையெழுத்துப் போட்டுடாதீங்க. புது முயற்சிகள், புது ஆளுங்க கிட்ட நட்பு இதெல்லாம் இந்த வாரம் வேண்டாம். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாகலாம். எந்தக் காரியத்தையும் பெரியவங்க ஆலோசனைப்படி செய்யுங்க. அப்பத்தான் பிரச்னைகள் வராம தப்பிப்பீங்க.




மேஷ ராசிக் காரரான 'நக்கீரன்' கோபால் வீட்டுல விருந்து. கேளிக்கைன்னு ஒரே அமக்களப் படப் போவுதாம்.

ரியாஸ் பாரதியின் வீட்டிலிருந்து விலகி ராஜேஸ்வரி நகரின் ஆர்ச் வளைவைத் தாண்டி மைசூர் ரோடில் வந்து சேர்ந்தபோது, போக்குவரத்து துரிதமாக இருந்தது. ரியாஸுக்கு ஏதோ ஒன்று மனத்தில் உறுத்திக் கொண்டிருந்தது. இத்தனை சுலபமாக சோமசேகர் ஒப்புக் கொண்டதில் ஏதோ உதைத்தது. எது என்று தீர்மானிக்க இயலாமல் மனத்தில் தத்தளித்தார்.

மூன்று விஷயங்களைத் தொடர்பு படுத்த ஒரு சங்கிலி தேவைப்பட்டது. அது இந்த கேசில் இன்னும் கிடைக்கவில்லை. ஆனந்தை சுட்டுக்கொன்ற துப்பாக்கியில் சோமசேகரின் விரல் ரேகைகள் இருந்தன, அதன் உடல் பாகத்தில். ஆனால் அதன் ட்ரிக்கரில் விரல் பதிவுகளே இல்லை.

இரண்டாவது, ஆனந்தின் உடலில் போராட்டத்துக்கான எந்த அடையாளமும் இல்லை. சற்றும் எதிர்பாராமல் சுடப்பட்டிருக்க வேண்டும். அல்லது தெரிந்தவன் சுட்டிருக்க வேண்டும். மூன்றாவது, ஆனந்தின் அந்தஸ்துடன் பொருந்தாத அவ்வளவு பெரிய வீடு அவனுக்கு எப்படிக் கிடைத்தது?

முதல் விஷயம் – யாரோ முதலில் சுட்டிருக்



17



சுஜாதா

ஆர்யபட்டா

கிறார்கள். சுட்டபின் அதன் ட்ரிகரில் பதிந்த விரல் அடையாளங்களைத் துடைத்திருக்கலாம். பின் சோமசேகர் அந்தத் துப்பாக்கியைக் கையில் எடுத்திருக்கலாம். இரண்டாவது வெளி ஆட்கள் யாரோ வந்து ஆனந்தைச் சற்றும் எதிர்பாராத சமயத்தில் சுட்டிருக்கலாம். ஆனந்திடம் ஏதாவது ரகசிய ஆராய்ச்சிக் குறிப்பை விரும்பி ஒரு வேளை சிஐஏ அல்லது ஐஎஸ்ஐ அல்லது தாலிபான் போன்றவர்களிடம் நம் ரகசியங்கள் எதையாவது விற்பதாகச் சொல்லி ஆனந்த் கடைசி நிமிஷத்தில் முடியாது என்று சொல்லியிருக்கலாம். அதனால் அவர்கள் கோபமடைந்து சுட்டிருக்கலாம். அந்த வியாபாரத்தில் சோமசேகரும் உடந்தையாக இருந்திருக்கலாம்.

இந்த திசையில் எண்ணிப் பார்த்தார். அதனால் சோமசேகர்தான் எல்லாவற்றையும் ஏற்பாடு பண்ணியிருக்க வேண்டும். ஆனந்த் வெளிநாட்டு சதிகாரர்களிடம் பணம் வாங்கியிருக்கலாம். அல்லது அவர்களே விடுவாங்க ஏற்பாடு செய்திருக்கலாம். சிந்தித்தால் மூன்று விஷயங்களும் ஒருவாறு பொருந்துகின்றன. கொன்றது சோமசேகர் அல்லது சோமசேகர் ஏற்பாடு செய்த ஆள். சோமசேகரைக் கைது பண்ணி வைத்திருக்கிறோம். அவனைக் கேள்விகள் கேட்கத் தீர்மானித்தார்.

ஒரு வாரத்தில் சொல்லிவிடுவான். அவர் அனுபவத்தில் ஒரு வாரத்துக்கு மேல் யாரும் கேள்விக்கணைகளைத் தாங்கியதில்லை. அடி இல்லை, உதை இல்லை, தொடர்ந்து இடை விடாமல் இருபத்து நாலு மணி நேரமும் கேள்விகள், கேள்விகள்தான். தூங்கினால் எழுப்பி கேள்விகள். உண்ணும் போது கேள்விகள், பாத்ரூமில் கூடக் கேள்விகள்.

நாளையிலிருந்து துவங்கிவிடலாம்.

ரியாஸ் கெஸ்ட் அவுசுக்கு ஜீப்பை ஓட்டச் சொன்னார். சட்டென்று அவர் மனத்தில் மற்றொரு விஷயம் ஓடியது. போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டில் எல்லா சந்தேகங்களும் தீர்ந்து விட்டனவா?

இல்லை. ஒரு விஷயம் பாக்கியிருக்கிறது.

ஆனந்தின் பூட்சு காலணியில் படிந்திருந்த உப்பு? அதற்கு என்ன விளக்கம்?

சங்கர் சொன்ன விளக்கம்தான் சரி. சில பேர் பயத்தில் திடீர் என்று ஒன்றுக்குப் போய்விடுவார்கள். அந்த பயத்தில்.

அப்படியென்றால் யாராவது சற்று நேரம் துப்பாக்கியை மார்பில் காட்டி பயமுறுத்தியிருக்க வேண்டும்.

யார் அது? அந்த சதிகாரனோ?

உப்பு எதில் எதில் இருக்கும்? சிறுநீரில் உப்பு இருக்குமா. கேட்க வேண்டும். வேறு எதில்?

கெஸ்ட் அவுஸ் திரும்பியதும் போன் செய்தார்.

"சங்கர் நாளைக் காலையில் சேகருடைய இன்டராகேஷனை ஆரம்பிக்கணும். எங்க ஆபிசுக்கு கொண்டுவந்துருங்க. அங்க ஒரு இன்டராகேஷன் ரூம் இருக்கு."

"ரியாஸ் இனிமே இன்டராகேஷன் எதுக்கு? அவன்தான் குற்றத்தை ஒப்புத்துக் கிட்டானே?"

"இல்லை. அவன் யாரையோ பாதுகாக்க றான். எதையோ மறைக்கிறான். இப்படி யோசி. ஆனந்துக்கு அவ்வளவு பெரிய வீடு எப்படி வந்தது என்கிறதுக்கு ஒரு விளக்கம்... ஆனந்த் சமீபத்தில் யார் கிட்டயாவது பெரிய தொகை வாங்கிருக்கணும்."

"அந்தப் பெரிய தொகைக்கு அவர் என்ன செய்யறதா இருந்தார்?"

"எதாவது ரகசியத்தை விக்கறதா இருந் தாரா? அரசாங்க ரகசியத்தை. இதை நெகோ ஷியேட் பண்ணது சோமசேகரா இருக்கும்னு நான் கருதறேன். அதனால் அவனை கேள்வி கள் கேட்டே ஆகணும். அவனை சிபிஐ கஸ்டடிக்கு மாத்தறதுக்கு ஏற்பாடு பண்ணிர் றேன்."

சங்கர் "சரி ரியாஸ். எனக்கென்னவோ அது விரயமான பயிற்சியா தோணுது."

"இல்லை சங்கர், ஒரு மிஸ்ஸிங் லிங்க் இருக்கு இந்த கேசில்."

"படுத்து தூங்குங்க ரியாஸ். காலையில் தெளிவாய்டும்."

காலையில் ஏதோ குழப்பமான கனவி லிருந்து ரியாஸ் எழுப்பப்பட்டார். டெலி போனால்.

"என்ன சங்கர்?"

"சோமசேகர் தப்பிச்சுட்டான் ரியாஸ்."

"என்னது!"

"ஆளு காணாமப் போய்ட்டான். கஸ்டடி யிலதான் இருந்திருக்கான். கொஞ்சம் கவனக் குறைவா இருந்திருக்காங்க. காணாம போய்ட் டான். இப்ப எனக்கு என்ன செய்யற துன்னே தெரியலை. பெரிய தர்மசங்கடம். உடனே சிட்டி கண்டோன்மெண்ட் ரெயில்வே ஸ்டேஷன், ஏர்போர்ட் எல்லாத் துலயும் அலர்ட் பண்ணிட்டோம். வீட்டில யும் கான்ஸ்டபிள்ஸ் போட்டுட்டம். இப்ப நான் ப்ரபாகர் ராவுக்கு என்ன சொல்லப் போறேன்!"

"எனக்கென்னவோ அவன் இன்னேரம் பாகிஸ்தான்லயோ, லண்டன்லயோ இருப் பான்னு தோணுது. என்ன சங்கர், கவனக் குறைவா இருந்துட்டமே சே!"

அவன் அவ்வளவு தூரம் தானே மன முவந்து ஒப்புக்க வந்ததினால அசந்துட்டம். நம்மையெல்லாம் கேலி பண்ணிட்டு போயிட்டான்."

"பாரதிக்கு சொல்லிட்டியா?"

"இன்னும் இல்லை."

"அவன் தப்பிச்சதை யாருக்கும் சொல்ல வேண்டாம்" என்றார்.

காலை எட்டரை மணிக்கு ரியாஸ் தனியாக பாரதியின் வீட்டை அடைந்தார். அமைதியாக இருந்தது.

மெல்ல கேட் கதவைத் திறக்கும் சப்தம் கேட்டு பாரதியின் தந்தைதான் நைட் கவுனில் வந்தார்.

"என்ன சார். உங்க விசாரணை இன்னும் முடியலையா. விசாரிக்க நேரம் காலம் கிடை யாதா?"

ரியாஸ் நேரடியாக பதில் சொல்லாமல் "நான் உங்க மகளைப் பார்க்கணும். ஒரே ஒரு கேள்வி மட்டும்தான் பாக்கி."

"வெளிய போயிருக்கா."

"காத்திருக்கேன். எப்ப வருவாங்க?"

"சரியா தெரியலை. நான் தூங்கிட்டு இருக்கறப்ப என்னவோ சொல்லிட்டு போனா."

"கோவிலுக்குப் போயிருப்பாங்களா?"

"தெரியலை."

"சார், சோமசேகர் இங்க வந்தாரா?"

"முன்னாவா? அவன் உங்க கஸ்டடியிலன்னா இருக்கான்."

"இங்க வரலை?"

"வரலை. தப்பிச்சுட்டானா?"

"அப்படித்தான் தெரியுது. வந்தா உடனே எங்களுக்குத் தகவல் சொல்லிருங்க."

"ஒரு வேளை வக்கிலைப் பார்க்கப் போயிருப்பானோ என்னவோ. நீங்கதானே அவனுக்கு வக்கிலைப் பார்க்க சொல்லி அட் வைஸ் பண்ணிங்களாம்?"

"வக்கில் யாருன்னு தெரியுமா?"

"எங்க பேமிலி உண்ணி கிருஷ்ணன் கிட்டத்தான் போவோம். ஜெய்நகர்ல இருக் கார்."

"போன் நம்பர் இருக்கா?"

"தரேன். நீங்க இப்ப பாரதி வரவரைக்கும் வெய்ட் பண்ணப் போறிங்களா?"

ரியாஸ், "இல்லை சார். வெய்ட் பண் ணலை. போய்ட்டு சாயங்காலம் வரேன். அதுக்குள்ள எதாவது தகவல் தெரிஞ்சா எங்களுக்குக் கட்டாயம் சொல்லணும்."

"சரி."

ரியாஸ் புறப்பட்டு ஏறக்குறைய ஐந்து கிலோ மீட்டர் வந்து பெட்ரோலுக்கு ஒரு பங்கில் திரும்பும்போது கோபால் தியேட்டரில் தெலுங்குப் பட போஸ்டரைப் பார்த்தார்.

அவர் மனத்தில் ஒரு மின்னல் அடித்தது. சட்டென்று எல்லாம் தெளிவாகி விட்டது.

"ஜீப்பைத் திருப்பு என்றார்."

அந்த வீட்டிற்குச் சற்று முன்னாலேயே நிறுத்தி மெல்ல நடந்து சென்றார். கேட் கதவை அதிகம் சப்தமிடாமல் திறந்தார்.

வாயில் கதவருகில் பைய நடந்து வந்து கேட்டார்.

உள்ளே பேச்சுக்குரல்.

"அவசரப்பட்டுட்டே முன்னா. அவசரப் பட்டுட்டே!"

பாரதியின் குரல்.

"டிக்கெட்ஸ் ஆர் ரெடி. கொஞ்சம் கேஷ் இதில இருக்கு. போறப்ப பெட்ரோல் ரொப்பிக்க. அன்லெடட் பெட்ரோல் வழியில கிடைக்காது. பாம்பே போன உடனே எனக்கு போன் பண்ணிறணும். சங்கர நாராயணன் வீட்டில் தங்குங்க, பாண்ட்ராவில்." தந்தையின் குரல்.

"அத்தான் பாரதியை கல்யாணம் பண்ணிக்கிட்டு போய்ட்டேன்! கோயில்ல வெச்சு ஒரு சிம்பிள் பங்ஷன்ல தாலி கட்டிட்டுப் புறப்பட்டுர்றோம்!"

"டோண்ட் பி ஸில்லி. போலீஸ் உம் பின்னால துரத்திக்கிட்டு இருக்காங்க. கல்யாணம் முக்கியமில்லை. காப்பாத்தறதுதான் முக்கியம். ரெண்டு பேரும் நாட்டை விட்டு ஒரு நாள்ல வெளிய போறதுதான் முக்கியம்."

ரியாஸ் கதவைத் தட்டினார்.

"ஹூ இஸ் இட்!"

"கூரியர்."

கதவு திறந்தது.

பாரதியும் சோமசேகரும் நின்று கொண்டிருந்தார்கள்.

"ஹலோ மிஸ்டர் சோமசேகர்!"

அவர்கள் புறப்படத் தயாராக உடையணிந்திருந்தார்கள்.

"குறுக்கிடறதுக்கு மன்னிக்கவும். மிஸஸ் பாரதி ஆனந்த், நீங்க ஏன் உங்க கணவரை கொலை செய்தீங்க?"

(தொடரும்)

"அம்மிணிங்க ஆட்டோகிராப்பு கேக்கறாங்க!"

கோவை நகைக்கடை அதிபர்கள் 'மெகா கோல்டு மேளா' நடத்தி ஒரு கிலோ தங்கம் பரிசளித்தனர்! இந்த மேளா கோவைவாசிகளை ஈர்த்ததோ இல்லையோ, அது சமயம் ஒரு நகைக்கடை முன்பு முயல், வாத்து பொம்மைகள் நடத்திய சேஷ்டை போவோர் வருவோர் அனைவரையும் கவர்ந்தது!

சாலையில் செல்லும் பெரியவர்களைக் கண்டால் குதி போடும் ஆட்டம், காவலர்களைக் கண்டால் பவ்யமாய் சல்யூட், கஸ்டமர்களைக் கண்டால் கைவிரித்து வரவேற்பு, இளம் பெண்களை-மாணவிகளைக் கண்டால் பறக்கும் முத்தங்கள்...

அந்த பொம்மைக்குள் இருந்தவர்கள்... மாணிக்கம், கருப்புசாமி- இளைஞர்கள். எப்படி வந்தார்கள் இந்தத் தொழிலுக்கு?

"நாங்க இங்கே டவுன்ஹால் மதுரை வீரன் கோயில் பக்கந்தான் சாரே... ஒயிலாட்டம் போடுவம்ங்க... ஒரு நாள் முழுக்க இருந்தா நூறு ரூபா கூலின்னாங்க. ஓடி வந்தோம். அவஸ்தைப்படறோம். பாருங்க... எங்க கூட வந்த பசங்க ஆறு பேர்... எல்லோரும் ரெண்டே நாள்ல ஓடிப் போயிட்டாங்க! எட்டு மணி நேரம் இந்த உடுப்பைப் போட்டுட்டு.... ஒரே உப்புசம்... வியர்வை நாத்தம்... இருந்தாலும் இந்த உடுப்புக்குள்ளே இருந்துட்டா அம்மிணிகளும் சிரிச்சுட்டே போறாங்க... ஆட்டோகிராப்பு கூட கேட்கறாங்க... முகமூடியக் கழட்டினா ஓடிடறாங்க..." என்றார்கள்!

— கேயெஸ்வி



இலவசம்! பக்தி புத்தகங்கள்



இலவச பக்திப் புத்தகங்கள் எங்களிடம் ஒரே தடவை-யில் ரூ.500-க்கு மேற்பட்ட ஸ்வீட், காரம் வாங்குபவர்களுக்கு வாங்கும் தொகையை அனுசரித்து பக்திப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படும்.

கல்யாண வைபவங்களுக்கு: சீர் முறுக்கு, சீர் முள்ளுத் தேன் குழல், தேன் குழல், அதிரசம், திரட்டுப்பால், அப்பம், பருப்புத் தேங்காய் வக்கைகள் முதலியவை செய்துத் தரப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு,
சென்னை - 20.
போன்: 4915662, 4914213



இந்த மாதம் முதல் வாரத்தில் பாட்னாவில் ஒரு கிலோ உப்பு அறுபது ரூபாய்க்கு விற்றது! பலசரக்குக் கடைகளில் மக்கள் க்யூவில் நின்று மொத்த மொத்தமாக உப்பு வாங்கினார்கள்.

பாட்னாவில் மட்டுமல்ல; அஹமதாபாத், பரோடா, சூரத் ஆகிய இடங்களிலும் இதே கதைதான். மூன்று பக்கமும் கடல் சூழ்ந்த நாட்டில் உப்புக்கே தட்டுப்பாடா என்று வியக்காதவர்கள் இல்லை.

தட்டுப்பாடு லிஸ்டில் வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகியவற்றுக்கு அடுத்து, உப்பும் இடம் பெற்றதற்கு என்ன காரணம்?

“நம் நாட்டுக்குத் தேவையான உப்பில் சுமார் எழுபது சதவிகிதம் குஜராத்திலிருந்துதான் வருகிறது. இங்கமைந்துள்ள கலின்ட்லாவில் ஜூன் '98 இல் ஏற்பட்ட வெள்ளத்தினால் உப்பு அம்பாரங்கள் கரைந்து கணிசமான இழப்பு ஏற்பட்டது. (சுமார் பத்து லட்சம் டன்). ஆனால் இவ்வித இழப்புகள் எதிர்பார்க்கப்படுபவையே. இன்று உப்பு 'அதிபதிகளிடம்' போதிய ஸ்டாக் உள்ளது. பாட்னாவில் உண்மையிலேயே தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தால் அதற்கு சரக்குப் போக்குவரத்துத் தாமதங்கள் ஏதேனும் காரணமாக இருக்கலாம் என்று நினைக்கிறேன்'' என்கிறார் கேப்டன் குக் உப்பு தயாரிக்கும் டிசிடபிள்யூ நிறுவனத்தின் சீனியர் ஜெனரல் மானேஜர் தியாகராஜன்.

''சரியான நேரத்தில் உப்பு ஸ்டாக்கிஸ்ட்டை அடையாமல் தாமதம் ஏற்பட, அதற்குத் தட்டுப்பாடு என்று தப்பர்த்தம் கற்பித்து, வேண்டுமென்றே விலை ஏற்றப்பட்டிருக்கலாம்.

''எங்கள் நிறுவனத்துக்கு மும்பை, சென்னை, குஜராத் ஆகிய இடங்களில் பேக்டரிகள் உள்ளன. இதன் மூலம் ஆண்டுக்குச் சுமார் ஐந்து லட்சம் டன் உலர் தன்மையுடைய ப்ரீ ப்ளோ அயோடைஸ்ட் உப்பைத் தயாரித்து விற்கிறோம். எங்கள் வாடிக்கையாளர்களாக உள்ள உயர் மத்திய தர (upper middle class) நுகர்வோர்களுக்கு இந்தியா முழுவதும் ஒரே விலையில் 'கேப்டன் குக்' கிடைக்கிறது. உப்புக்கு விற்பனை வரி கிடையாது என்பதால் எங்கும் ஒரே விலைதான்'' என்கிறார் அவர்.

பாதிக்கப்பட்ட 'மெகா' மாநில மான உத்திரபிரதேசம் முழுமைக்கும் சமையல் உப்பின் ஆண்டு தேவை பத்து லட்ச டன்னும் டெல்லிக்கு அறுபத்து நாலாயிரம் டன்னும் ஆகும்.

உப்புக்கே தட்டுப்பாடா?!





• என்.பி. மேத்தா



• பொன்ராஜ்

ஒரு நபருக்கு நாளொன்றுக்கு ஐந்து கிராம் உப்பே தேவை எனில் நம் நூறு கோடி குடிமக்களுக்கு மொத்தம் சுமார் 60 லட்சம் டன் உப்பு ஆண்டுக்குத் தேவை.

நமது தேசத்தின் மொத்த உற்பத்தியோ 140 லட்சம் டன்கள்! இதில் காஸ்டிக் சோடா, சோடா ஆஷ், டிடர்ஜென்ட் உற்பத்திகளுக்குப் போக சுமார் ஆறு லட்சம் டன்னை ஏற்றுமதியும் செய்ய முடிகிறது. (இந்த முறை தேக்க நிலையில் உள்ள தொழிலகங்களும் வழக்கத்தை விடக் குறைவாகவே உப்பை வாங்கின.)

மேலும் இந்தியாவில் வடகிழக்கு, தென்மேற்கு என்று இருவகை பருவமழைகள் வருவதால், மழைக் காலங்களில் ஒரு பகுதியில் உப்பு காய்ச்ச முடியாதபோது அடுத்தப் பகுதியில் தொடங்கி ஆண்டு முழுவதும் தடைபடாமல் உப்பு உற்பத்தி நாட்டின் ஏதாவது ஒரு பகுதியில் மாறி மாறி நடைபெற்று வருகிறது.

உண்மையிலேயே உற்பத்தி பாதிப்பு, திட்டமிடாத ஏற்றுமதி ஆகியவற்றால் காய்கறிகளின் விலை ஏறினாலும், உப்பின் செயற்கை விலை ஏற்றத்திற்கு அரசியல் காரணங்கள் இருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. விரைவில் தேர்தலை சந்திக்க உள்ள வட மாநிலங்களில் வாக்காளர்கள் மனத்தில் போக்ரானா? பொட்டேட்டோவா? எது நினைவில் நிற்கும் என்ற கேள்வி பி.ஜே.பியை பயமுறுத்திக் கொண்டிருக்கிறது. இவ்வேளையில் எதுவுமே உப்பு பெறாத விஷயமல்ல!

உப்பு கொடோனுக்கே நேரடியாக விஜயம் செய்த டில்லி முதலமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ், "தயாரிப்பாளர்களிடம் அடுத்த ஆறு மாதத்துக்குத் தேவையான உப்பு ஸ்டாக் உள்ளது. வெங்காய விஷயத்தில் நடந்தது போல் இதுவும் அரசியல் எதிரிகளால் கிளப்பப்பட்ட புரளிதான். இதை மக்கள் நம்ப வேண்டாம்" என்று அறிக்கை விட்டார்.

அதன் பின்னும் பீதி குறைந்த மாதிரி தெரியவில்லை. கிலோ உப்பு ஐம்பது ரூபாய்க்குக் குறையாமலே விற்று வந்தது. டில்லியின் கல்காஜி என்னுமிடத்தில் ஒரு மொத்த வியாபாரி இந்த அதித விலையில் 2.25 லட்சம் பாகெட்களை விற்று இருக்கிறார்!

அடுத்து, உப்பு பதுக்கியதாகச் சில வியாபாரிகளை தேசியப் பாதுகாப்புச் சட்டம் உட்பட பல பிரிவுகளில் கைது செய்திருக்கிறார்கள்.

"இந்த அரசியல் திருவிளையாட்டுகளில் கடைசியில் பாதிக்கப்படுவது வியாபாரிகள்தான். பதுக்க வேண்டும் என்று முடிவெடுத்த பிறகு அதற்கு வற்றாத கடலிலிருந்து ஆண்டு முழுவதும் கிடைக்கும் உப்பையா வியாபாரிகள் தேர்ந்தெடுப்பர்? எல்லாம் அரசியல் ஆதாயங்களுக்காகச் சில விஷமிகள் செய்து உள்ளனர். கொத்தமல்லி, கொத்தவரங்காய் விலைகள் ஏறினாலும் இறங்கினாலும் பெரிய பாதிப்பு இருக்காது என்பதால் சாதாரண மக்களைத் தொடும் 'உப்பு' இலக்கானது" என்கிறார் டாடா உப்பின் தேசிய விற்பனையாளரான வர்தமான் கெமிக்கல்ஸின் மேலாளர் என்.பி. மேத்தா.

தமிழகத்தில், எண்ணூரில் 250 ஏக்கர் உப்பளம் வைத்து சொந்தத் தயாரிப்பு, பிற உப்பு ப்ராண்ட்களின் விநியோகம் இரண்டிலும், ஈடுபட்டுள்ள நரசிம்மா சால்ட் இன்

"பேஷண்ட்டோட முகத்தைப் பார்த்ததுமே, இந்த டாக்டர் கரெக்டா கண்டு பிடிச்சிடுவார்."

"என்ன வியாதின்னா...?"

"ஊஹூம்... எப்படி வசதின்னு!"

— சீர்காழி ரேவதி



டஸ்ட்ரீஸின் மேலாண் இயக்குநர் ஐ. பொன் ராஜ், "பேப்பர்ல ஒரு கிலோ உப்பு ஐம்பது ரூபாய்க்கு விக்கறதா படிச்சவுடனே, அதே விலையில் வேண்டிய அளவு அனுப்பறேன்னு டில்லி அதிகாரிகளுக்கு எழுதிப் போட்டேன். உப்பைப் பொறுத்தளவில் சுண்டக்காய் கால் பணம், சும கூலி முக்காப் பணம்ங்கற கதைதான். போக்குவரத்து செலவுகளைக் கழிச்சிட்டா நூறு கிலோ சுத்திகரிக்கப்படாத உப்பை அதே ஐம்பது ரூபாயில் வாங்கலாம்" என்கிறார்.

உப்பில் இப்பொழுது ப்ராண்ட்கள் உருவாகி, மற்ற நுகர் பொருட்களைப் போலவே தொழிலகத் தயாரிப்பாக மக்களுக்குக் காட்சியளிப்பதால் 'உற்பத்தியில் ஏதோ பாதிப்பாம்' என்று சொன்னால் அவர்களுக்கு நம்புவதில் கஷ்டம் இருக்கப் போவதில்லை.

சப்ளையை முடக்கி தொழிற்சாலைகளே செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தியிருக்கலாம் என்றும் சந்தேகங்கள் எழுப்பப்பட்டன.

"ஒவ்வொரு நிறுவனமும் இந்த அளவுதான் உப்பை உற்பத்தி செய்ய வேண்டும் என்றே வரையறுத்துள்ளோம். உப்பளக்காரர்கள் கூட தங்கள் தயாரிப்பை நாட்டின் எல்லா பகுதிகளுக்கும் அனுப்ப முடியாது. டில்லி என்றால் அதற்கு 64000 டன் உப்பு தேவை! ஆக, குஜராத்திலிருந்து 51,000 டன்னும் ராஜஸ்தானிலிருந்து 13,000 டன்னும் சென்றடையும்படி ரயில் போக்குவரத்துகளுக்கு அனுமதி வழங்கியுள்ளோம். தயாரிப்பகங்களிலும் தொடர்ந்து ஸ்டாக் இன்ஸ்பெக்ஷன் செய்து வருகிறோம். எனவே இவ்விலை ஏற்றத்தில் தொழிற்சாலைகளின் பங்கு நிச்சயம் கிடையாது" என்கிறார் சென்னை வட்ட உப்புத்துறை கண்காணிப்பாளர் டி.எஸ். பாலகிருஷ்ணன்.

வழக்கமான விலையிலேயே நம் ஊரில் உப்பு விற்பனையாகி, இந்த ஒரு வாரக் கூத்து முடிவுக்கு வந்து விட்டது. யாரோ, ஏதோ சொல்கிறார்கள் என்று ஆளுக்கு இருபது பாக்கெட், முப்பது பாக்கெட் வேண்டும் என கடைகளில் போய் நின்றால் கடைக்காரர் உப்பு என்ன, தண்ணீர் பாக்கெட்டையே அந்த விலைக்கு விற்பார் என்பதில் சந்தேகமில்லை.



"இந்த ரவி காசெல்லாம் என்னதான் செய்யறான்னு தெரியவேயில்லை. நேத்திக்குக் கேட்டா இல்லைங்கறான். முந்தாநாள் கேட்டா, இல்லேங்கறான்!"

"ஏன், உன்கிட்ட ஏதாவது கடன் வாங்கியிருக்கானா?"

"இல்லே, நான்தான் அவன்கிட்ட கடன் கேட்டேன்!"

– ச. அருண்சித்தார்த்

"பொது மக்கள் என்றில்லை; ஸ்டாகிஸ்ட்களே இந்தப் புரளிகளை நம்பி, கூடுதல் ஸ்டாக் கேட்கிறார்கள்" என்கிறார் கேப்டன்குக் தியாகராஜன்.

தமிழகம் உப்பு உற்பத்தியில் இரண்டாமிடம் வகித்து, வருடத்திற்கு சுமார் 25 லட்சம் டன் உப்பை உற்பத்தி செய்கிறது. நம் மாநிலத்துக்கு வருடத்திற்கு நாலு லட்சம் டன் உப்பே போதுமானது.

"என்ன பஞ்சம் வந்தாலும் இங்கு உப்பு கொள்முதல் விலையில் கிலோவுக்கு பத்து பைசா வரை (பாக்கெட்டுக்கு 50 பைசாவுக்கு) வேண்டுமானால் ஏறலாம். ஆனால் இன்று வாங்குவதற்கு ஆளில்லாமல் விலை குறையத்தான் வாய்ப்பு உள்ளது" என்கிறார் ஐ. பொன்ராஜ்.

எனவே, கடல் கொடுத்த உப்புக்கில்லை தட்டுப்பாடு என்று தாராளமாக மெட்டுப் போடலாம்!

— ஜி. சங்கரநாராயணன்

பாக்கியம் செய்த

தீவன ஊழலில் சிக்கிய லாலு, தமது வழக்கு விசாரணைக்காக சைக்கிள் ரிக்ஷாவில் ஏறி ஊர்வலமாக வந்தார். காரில் ஏறிவரக் காசு இல்லையாம் அவரிடம்! நம் ஊர்த் தலைவர்கள், சைக்கிள் ரிக்ஷாவில் வரக்கூடாதா என்ன?

அறிவாலயத்துக்கு சைக்கிள் ரிக்ஷாவில் வந்தார் கலைஞர்

தமிழகத் தலைநகரில் மோட்டார் கார் தொழிற்சாலைகளை ஒவ்வொன்றாகத் திறந்து வைத்து விட்டு, நேராக அண்ணா அறிவாலயத்துக்கு சைக்கிள் ரிக்ஷாவில் கலைஞர் வந்த போது, கூடவே ஏராளமான தொண்டர்களும் ஓடி ஓடி வந்தனர். சைக்கிள் ரிக்ஷாவைத் தாம்தான் ஓட்டுவேன் என்று முதலில் பிடிவாதம் பிடித்தார் ஆற்காடு வீராசாமி. கலைஞர்தான் வேண்டாம் என்று தடுத்து விட்டதாக அறிவாலய வட்டாரம் தெரிவித்தது.



''சாலையில் எந்த இடத்தில் குண்டும் குழியுமாக இருக்கிறது, எந்தப் பாதாளச் சாக்கடை மூடி திறந்திருக்கிறது என்று உங்களுக்குத் தெரியாது. அதனால், அடுத்த மோட்டார் கார் தொழிற்சாலை தொடங்கும்போது, திருப்பெரும்புதூர் வரை நீங்களே சைக்கிள் ரிக்ஷாவை மிதிக்கலாம்'' என்று ஆற்காட்டார் காலை (தெரியாமல்) மிதித்து விட்டாராம் கலைஞர். ஆற்காட்டார் இரண்டு நாட்களாக, தலைமைச் செயலகத்துக்கு வந்து ஃபைல்கள் எதுவும் பார்க்காமல் இருந்ததற்குக் கலைஞர் அவர் வேண்டுகோளை ஏற்காததா, காலை (தெரியாமல்) மிதித்ததா – எது காரணமாக இருக்கும் என்று மூத்த அமைச்சர்கள் மூளையைக் குடைந்து கொண்டிருக்கின்றனர். எப்போதும் கலைஞரின் தோள் துண்டு போல அவருடன் ஒட்டிக் கொண்டே இருக்கும் ஆற்காட்டார், கலைஞர் சொன்ன படியே, கோபாலபுரத்திலிருந்து திருப்பெரும்புதூர் வரை சைக்கிள் ரிக்ஷா ஓட்ட வேண்டியதை நினைத்துக் கலங்கிப் போயிருக்கிறாராம்.

'இனி சைக்கிள் ரிக்ஷாவே நமது சின்னம்!'

''காங்கிரஸ் சொத்துக்களை மீட்போம்'' என்று திண்டிவனம் ராமமூர்த்தி சவால் விட்டிருப்பதால், த.மா.கா. தலைவர்கள் சத்தியமூர்த்தி பவனுக்குள்ளேயே பூட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள். கார்கள் எல்லாம் கூடப் பாதுகாப்பான இடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன.

காரில் வந்தால் நடு வழியில் அதைத் திண்டிவனம் ராமமூர்த்தி பறித்து விடுவார் என்பதால், தலைவர் மூப்பனார் சைக்கிள் ரிக்ஷாவில் ஏறி சத்தியமூர்த்தி பவனுக்கு வந்தார். வந்ததும் நிருபர்கள் எல்லாரும் அவரைப் பார்த்துச் சிரித்தார்கள். மூப்பனாரும் அவர்களைப் பார்த்துச் சிரித்தார். ''இனி சைக்கிள் ரிக்ஷாதான் எங்கள் தேர்தல் சின்னம். சைக்கிள் அல்ல!'' என்று அறிவித்தார் மூப்பனார். அப்போது மறுபடியும் நிருபர்கள் சிரித்தார்கள்.

''நீங்கள் இதற்கெல்லாம் சிரிக்க வேண்டியதில்லை. சிரிக்க வேண்டிய விஷயத்துக்குச் சிரிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். 2021-ல் தமிழகத்தில் காமராஜர் ஆட்சி அமையும். அப்போது தம்பி சிதம்பரம் முதலமைச்சராக இருப்பார். அவரும் இதே போல சைக்கிள் ரிக்ஷாவில்தான் தலைமைச் செயலகத்துக்கு வருவார். இப்போது சைக்கிள் ரிக்ஷா ஓட்டி வந்த பீட்டர் அல்ஃபோன்ஸ், வழியில் கொஞ்சம் தடுமாறுகிறார். காமராஜர் ஆட்சி வந்து விடும்போது, எந்தத் தடுமாற்றமும் இல்லாமல் அவர் ரிக்ஷாவை ஓட்டுவார்!'' என்று அறிவித்தார் மூப்பனார்.

அப்போது அங்கிருந்து புறப்பட்டுப் போன அல்ஃபோன்சை, இதுவரை காணவில்லை என்கிறார்கள்.

சைக்கிள் ரிக்ஷா!



சைக்கிள் ரிக்ஷாவில் ஸ்டாலின் ஊர்வலம்

வெறும் சென்னையை, பதவி ஏற்ற இரண்டே வருடங்களில் சிங்காரச் சென்னையாக்கி விட்ட வணக்கத்துக்குரிய மு.க. ஸ்டாலின், நகரம் முழுவதையும் சுற்றிப் பார்த்து, தமது சாதனையில் மகிழ்ச்சியடைந்து, தமது முதுகில் தாமே தட்டிக் கொள்வதற்காக, சைக்கிள் ரிக்ஷாவிலேயே வேளச்சேரியிலுள்ள தமது வீட்டிலிருந்து சென்னை மாநகராட்சிக்கு வந்தார். வெள்ளை உடையும், வெள்ளை ஷூவும் அணிந்த இளைஞர் படை, கட்டுப்பாட்டோடு வந்தது. இதனால் நான்கு மணி நேரத்துக்குப் போக்குவரத்துத் தடைப்பட்டு மக்கள் அவதியுற்றனர். அவதியுற்ற மக்களைப் பார்த்து மகிழ்ச்சியுடன் சிரித்துக் கொண்டே கையசைத்தார் மு.க. ஸ்டாலின். வழியில் சைக்கிள் ரிக்ஷா ஓர் இடத்தில் சற்றுக் குலுங்கிய போது, 'இங்கே குழி இருக்கிறது. இந்த நிமிடமே சரிசெய்தால்தான் நான் இங்கிருந்து நகருவேன்' என்றார் மேயர் பிடிவாதமாக. கூடவே வந்த மாநகராட்சி கமிஷனரும், நூற்றுக்கணக்கான அதிகாரிகளும் அதைக் குறித்துக் கொண்டு, உடனடி நடவடிக்கை எடுத்தனர். மேயர் குறைகளை எப்படி உடனுக்குடன் தீர்க்கிறார் என்று தொண்டர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள்.


ஆடம்பர சைக்கிள் ரிக்ஷா



எல்லாக் கட்சித் தலைவர்களும் இப்போது சைக்கிள் ரிக்ஷாவில் போய்த்தான் மக்களின் ஆதரவைத் தேடிக் கொள்ளுகிறார்கள் என்பதால், போயஸ் தோட்டத்திலும் ஒரு சைக்கிள் ரிக்ஷா தயாராகி விட்டது!

உள்ளே குளிர்சாதனப் பெட்டி பொருத்தப்பட்ட பாத்ரூம், உடம்பு வலித்தால் படுக்க வசதி, ஏறி நின்றால் தலை மட்டும் தெரிகிற மாதிரி ஃபோம் மெத்தை வைத்த உயர ஸ்டூல் எல்லாம் இதில் இருக்கிறது. அ.இ.அ.தி.மு.க. தலைமையகத்துக்கு அதில் புறப்பட்டார் ஜெ. கூடவே உடன் பிறவா சகோதரியும் ஏறிக் கொண்டார்.

பத்து மீட்டர் தாண்டுவதற்குள் இரண்டு பேரும் இறங்க வேண்டியதாயிற்று. காரணம், ஒரே மிதியில் சைக்கிள் ரிக்ஷாவின் செயின் அறுந்து விட்டதுதான் என்றார் கூடவே வந்த நாவலர். இப்படி முறியும் என்று தெரிந்துதான் தாம் வரவில்லை என்று பிறகு தெரிவித்தார் திராவிடர் கழகத்தின் கி. வீரமணி. 'இது கலைஞர் செய்த சதி. சங்கிலியை முறிக்கலாம்; கட்சியை முறிக்க முடியாது!' என்றார் காளிமுத்து, காட்டமாக.



'அடுத்த முறை தங்கத்தால் கெட்டியான செயின் போட்டு ஓட்டிக் கொண்டு போகலாம்' என்று உ.பி.ச.விடம் ஆறுதல் சொன்னார் ஜெ.

கற்பனை : **சாருகேசி**

சமீபத்தில் பெங்களூரில் 'கார்ட்டூனிஸ்டுகள் மாநாடு' நடைபெற்றது. அப்போது, கௌரவிக்கப்பட்ட கார்ட்டூனிஸ்டுகளில் 'ஹிந்து' நாளிதழின் 'கேசவ்' ஒருவர். கார்ட்டூனிஸ்ட் மாநாடு பற்றிய சில சுவையான விஷயங்களை அவர் கூறுகிறார் :

கர்நாடக மாநிலத்தில் உள்ள கார்ட்டூனிஸ்டுகள் சங்கம் சுமார் இருபது வருடங்களுக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்டது. அவர்கள் ஏற்பாடு செய்திருந்த இந்த மாநாட்டை நடத்த, கர்நாடக அரசே நிதி உதவி செய்திருந்தது என்பது வியப்பளிக்கிற உண்மை. மாநாட்டைத் துவக்கி வைக்க கர்நாடக முதலமைச்சர் ஜே.ஹெச். படேல் வந்திருந்தார். மாநாட்டுக்கு வந்திருந்த பன்னிரண்டு வயதுச் சிறுவன் நசிகேத், கர்நாடக

விநாயகர் வாகனம் மூஞ்சூறு மௌஸ்!



• ரங்காவின் கார்ட்டூன்கள்

முதலமைச்சரைக் கார்ட்டூனாகப் போட்டிருந்தான். அந்தக் கார்ட்டூனில், முதலமைச்சரின் முன்னால், ஒரு மது பாட்டிலும், மதுக்கோப்பையும் வரைந்திருந்தான். அந்தக் கார்ட்டூனை, முதலமைச்சரிடம் காட்டினபோது, அவர் அதை எப்படி எடுத்துக் கொள்ளப் போகிறாரோ என்று நான் நினைத்துக் கொண்டே இருந்தேன். அவர், அதனை ரொம்ப ரசித்தார். இந்தக் கார்ட்டூனிலிருக்கிற படேல், குடிப்பதற்கு முன்பா? குடித்த பின்பா? என்று ரொம்ப ஸ்போர்டிவாக கமெண்ட் அடித்த போது, எனக்கு ஒரே ஆச்சரியம்!

விழாவில் உரையாற்றிய கர்நாடக செய்தித் துறை அமைச்சர் நானய்யா "நீங்கள் எல்லாரும், கருத்துச் சுதந்தரத்துடன் கார்ட்டூன்கள் போடுங்கள். சம்பந்தப்பட்ட அரசியல்வாதியின் மனம் புண்படுமே என்று கவலைப்படாதீர்கள். அது உங்கள் வேலை. ஆகவே, உங்கள் கருத்துச் சுதந்தரத்தில் தலையிட யாருக்கும் உரிமையில்லை" என்று பேசினார்.

கேரளா கார்ட்டூன் அகாடமியின் தலைவரான சுகுமாரன், மிகச் சிறந்த கார்ட்டூனிஸ்ட். அவர் ஒரு முன்னாள் போலீஸ்காரர் என்று அறிந்த போது வியப்படைந்தேன். மாநாடு நடந்த இரண்டு நாளும், வெகு அமைதியாக, தமது குறிப்பு நோட்டில் இடைவிடாமல் ஏதாவது வரைந்து கொண்டிருந்த அறுபது வயது கடந்த சுகுமாரனின் தொழில் பக்தி என்னை பிரமிக்க வைத்தது.

மிகத் தத்ரூபமாய், ஆன் தி ஸ்பாட் வரைந்து வியப்பூட்டினார் சுகுமாரன்!

ஏசியன் ஏஜ் பத்திரிகையின் மாயா காமத், மாநாட்டில் பங்கேற்ற ஒரே பெண் கார்ட்டூனிஸ்ட்.



கார்ட்டூனிஸ்டுகள், தங்கள் அனுபவங்கள் சிலவற்றைப் பகிர்ந்து கொண்டது சுவாரசியமாக இருந்தது. சீனியர் கார்ட்டூனிஸ்டான ரங்கா நினைவுகூர்ந்த இரண்டு சம்பவங்கள் :

- ரங்கா, பாகிஸ்தானின் பிரதமர் புட்டோவை வரைந்து, அவரிடம் கொடுத்தபோது, "என்னைப் போலவே இல்லையே! எனக்கு இன்னும் நிறைய முடி உண்டே!" என்றாராம்.
- ஸ்ரீலங்காவின் ஜனாதிபதியாக பிரேமதாஸா இருந்த போது, அவரைச் சந்தித்தார் ரங்கா. தாம் வரைந்த பிரேமதாஸாவின் உருவச் சித்திரத்தை அவரிடம் கொடுத்தபோது, உடனே பிரேமதாஸா ஒரு வெள்ளைத் தாளில், ரங்காவின் உருவத்தை வரைந்து, "நான் எதையும் சும்மா பெற்றுக் கொள்ள மாட்டேன் எனவே, இதை நான் உங்களுக்குத் தருகிறேன்" என்றாராம்.

ரங்காவிடம் ஒரு விசித்திரமான பழக்கம். எந்தப் பிரமுகரானாலும், இரண்டு சித்திரங்கள் வரைந்து, ஒன்றை சம்பந்தப்பட்டவருக்கே பரிசளித்து விடுவா இன்னொன்றில், சம்பந்தப்பட்டவரது ஆட்டோகிராபை வாங்கி, தாம் பத்திரப்படுத்திக் கொள்ளுவார்!

மாநாட்டை யொட்டி, ஒரு கார்ட்டூன் போட்டியும் நடந்தது. முதல் பரிசு பெற்ற விநாயகர் கார்ட்டூனின் சிறப்பு அம்சம் என்ன தெரியுமா? அவரது வாகனமாக மூஞ்சூறுக்கு பதிலாக கம்ப்யூட்டர் "மௌஸ்".

மாநாட்டுத் துவக்க நிகழ்ச்சியின் போது, முதலமைச்சர் படேல், போர்டில் காந்திஜியைக் கார்ட்டூனாகப் போட்டு ஆச்சரியப்படுத் தினார் என்றால், கர்நாடக செய்தித் துறை அமைச்சரை,

- மௌலி



• கேசவ்

மனசந்தோ

ரவி என்கிற ரவிச்சந்திரனுடன் ஆட்டோவில் அமர்ந்து பயணம் செய்தபோதே யோசித்திருக்க வேண்டும். ஏனோ அப்போது நான் யோசியாது போனேன்.

ஆட்டோவில் ஒன்றாய்ப் பயணம் செய்ததற்கு அடுத்த வாரத்தில் ஒருநாள் ரவிச்சந்திரன் என்னிடம் ''ஐ லவ் யூ'' சொன்னான்.

அவனைப் பார்க்கையில் என்னுள் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. ''நான் உங்களை நேசிக்கிறேன் நந்தினி'' என்றான் முதலில் சொன்னதின் தமிழாக்கம் போல்.

எனக்குப் புரிந்தது.

பக்கத்தில் அமர்ந்து பிரயாணித்தது அவனுள் இளமை உணர்வுகளைத் தூண்டி விட்டிருக்க வேண்டும். அந்த ஈர்ப்பை, மன மயக்கத்தைக் காதல் என்கிறான் பைத்தியக்காரன்.

சொல்லலாமா?

முகத்திலறைந்தாற் போல் பேசி விடலாமா?

ஆனால் தாங்க மாட்டான். அறிவுபூர்வமாய் இதை அலச அவன் புத்தி ஒத்துழைக்காது. மாறாக சோக முகமாய் தாடி வளர்த்து, அலுவலகத்தில் எதிர்ப்படுகிற நேரமெல்லாம், பரிதாபப் பார்வை பார்த்து ஒரு ஓரங்க நாடகத்திற்கு வித்திடுவான்.

இதை இவ்விதம் அணுகக் கூடாது.

ஒரு நிதானமான சந்தர்ப்பத்தில் மெல்ல விளக்க வேண்டும்.

இப்போது அதற்கான தருணமில்லை.

எனவே,

''எனக்குக் கொஞ்சம் அவகாசம் கொடுங்க ரவிச்சந்திரன்'' என்றேன் அவனிடம்.

என்னைப் பற்றி என்ன தெரியும் அவனுக்கு?

என் குணம் பற்றி ஏதேனும் தெரியுமா?

என் சிவப்புத் தோலும், அழகான முகமும் வாளிப்பான உடற்கட்டும் அவனைக் கவர்ந்து இழுத்திருக்க வேண்டும். அந்தக் கவர்ச்சியை, காதல் என்று சொல்கிறான்.

நான் யோசித்த இவை அனைத்தையும் ஒரு வெள்ளிக்கிழமை மாலை அந்த அரையிருட்டு ரெஸ்டாரெண்டில் வைத்து அவனிடம் சொன்னேன்.

பேயறைந்தாற் போல் விழிப்பான் என்று நான் எதிர்பார்த்ததற்கு மாறாக மெல்லச் சிரித்தான்.

''சரி. அப்போ உண்மையான காதல்ன்றது என்னா?''

''என்ன ரவி?''

''இல்லை. நான் வந்து உங்க அழகைப் பார்த்து மயங்கி தான் 'லவ் யூ'ன்னு சொன்னதா சொல்றீங்க. அது காதல் இல்லை. மன மயக்கம்ன்றீங்க. இப்போ நெஜக் காதல் எது...?''

''அது... வந்து...''

இந்தக் கேள்வி வரும் என்று நான் நினைக்கவில்லை. 'உண்மைக் காதல் என்றால் என்ன?' எனக்குப் பதில் தெரியவில்லை. பொய்யாய், போலியாய் ஏதேனும் சினிமா வசனம் மாதிரி சொல்லலாம். ஆனால், அது உண்மையாய் இராது.

நான் விழித்தது கண்டு அவன் சிரித்தான்.

''கடவுள்ன்றவர் உருவம் இல்லாதவர்னு சொல்றாங்க. உருவமில்லாம கடவுளை உணரணும்னா, அதுக்கொரு ஞானம் வேணும். நாமல்லாம் சாதாரண மனுஷங்க. கோவிலுக்குப் போய் முருகா, பிள்ளையாரப்பான்னாதான் பக்தியே வருது. அது தப்புன்னு சொல்ல முடியுமா? அந்த பக்தியே தேவையில்லைனு ஒதுக்க முடியுமா? என் காதல்கூட அது மாதிரிதான். உங்க அழகைப் பார்த்துதான் எனக்குக் காதல் வந்தது. இதை மறைச்சி எதுக்குப்

சிவ சூர்யா



பொய் சொல்லணும். உண்மை அது தானே."

நான் பதிலற்று அமர்ந்திருந்தேன். என் கர்வம் பொடிப் பொடியாயிற்று.

"என்ன பேச மாட்டேங்கறீங்க."

"ஐ லவ் யூ ரவிச்சந்திரன்."

ரவியின் கண்களில் ஒரு நெகிழ்வு வந்ததை என்னால் உணர முடிந்தது. மெல்ல என் கைகளை அழுத்தியபடிக் கேட்டான்.

"இப்பவாச்சும் புரிஞ்சுதோ..."

"எது...?"

"காதல்னா என்னன்னு...."

புரிந்தது. காதல் என்பது உண்மையாய் இருந்தால். ○



மீடப்பட்ட கலைமகள் சபா!

'இரண்டே கால் கோடி ரூபாய் மோசடி. கலைமகள் சபா நிறுவனர் ஜான் கைது. சுமார் ரூ. 200 கோடி சொத்துக்கள் முடக்கம்...' என்கிற செய்தியைக் கேட்டுப் பதறியபடி சேலம் அலுவலகத்திற்கு வந்த உறுப்பினர்களுக்கு அப்போதும் பதில் சொல்லி அனுப்பிக் கொண்டிருந்தனர் சில சபா பொறுப்பாளர்கள்.

"209 கோடி ரூபா கலெக்ஷன்ல 18 லட்சத்திற்கு வவுச்சர் சரியா இல்லேங்கறதுக்காக நம்ம ஜி.எம்.மைக் கைது செஞ்சுருக்காங்க. வேறொன்றுமில்லை. அப்படி அவர் இல்லேன்னாக்கூட நம்ம பொறுப்புக் குழு இருக்கே... அரசே ஏற்று நடத்தும்னு கூட பத்திரிகையில செய்தி வந்திருக்கே! இது ஒரு மோசடிக் கம்பெனின்னா அரசாங்கமே இப்படி ஒரு அறிவிப்புக் கொடுக்குமா? அதனால நம்புங்க... நம்ம சபாவுக்கும் சபாவோட சொத்துக்கும் எந்தச் சிக்கலும் இல்லை....!"

சமாதானத்தை ஏற்றுக் கொண்டவர்கள், "எங்கள் ஜி.எம். ஜானை விடுதலை செய்க...!" என்று முதல்வருக்கும் டிஜிபிக்கும் அவசரத் தந்தி கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள். தந்திகளுக்கான செலவு முழுக்க சபாவினுடையது!

சபாவின் லேட்டஸ்ட் நிலவரம் அறிய கலைமகள் சபா டெபுடி மானேஜர் ஒருவரை (பெயர் வேண்டாம் என்றார்) அணுகினோம்.

"சபாவோட சொத்துக்கும் சபா உறுப்பினர்கள் சொத்துக்கும் சம்பந்தமில்லை. சபா கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. சொத்துக்கள் சபா உறுப்பினர்கள் பெயரில் வாங்கப்பட்டிருக்கிறது. இதை ஆராயாமல் ஒருத்தர் செஞ்ச புகாரின் எதிரொலிதான் இன்றைய நடவடிக்கை. போன தடவை பத்திரிகை வதந்தியிலிருந்து - கடந்த பத்து மாசத்துல மட்டும் சுமார் ஒன்றரை லட்சம் பேருக்குத் தொகையை திரும்பக் கொடுத்திருக்கோம். மோசடி செய்யறவங்க எங்கேயாவது பணத்தைத் திரும்பக் கொடுத்ததைப் பார்த்திருக்கிறீர்களா? இன்னைக்கு மட்டும் கள்ளக்குறிச்சி கிளையில 250 பேருக்கு ரீபண்ட் கொடுக்கணும். ஆனா இப்படி சொத்துக்களை முடக்கம் பண்ணினா எப்படி சார்? ஒரே குழப்பம்!"

'கண்ணியமான ஒரு சபாவுக்கு இப்படி இடையூறு கொடுப்பவர்கள் சில விஷமிகள். இதற்கு அரசியல் பின்னணி கூட உண்டு' என்பது சபாவில் ஒரு சிலரது கருத்து. நாம் விசாரித்த அளவில் அப்படி எதுவும் காணோம். முன்பு சேலம் ஆடிட்டர் பாலு கொடுத்த புகாரேதான் இப்போது திரும்பவும் வேலை செய்துள்ளது. அவருக்குப் பின்னணியில் அரசியல் ஏதும் உண்டா? பணபலம் பக்கபலம் ஏதாவது? அவரிடமே கேட்டோம். ரொம்பவும் சோர்வாய்ப் பேசினார்.

"நான் காசுக்கு விலை போயிருந்தா எப்பவோ போயிருக்க முடியும் சார். அது எங்


கிட்ட நடக்கலை. மக்களுக்கு இது விஷயத்துல விழிப்புணர்வு வரணும்ன்னுதான் போராடினேன். கிட்டத்தட்ட நூறு பெட்டிஷன்களுக்கு மேல இருக்கும். கவர்னருக்கு போட்ட பெட்டிஷன்தான் இப்போ வேலை செய்யுது. இப்ப இந்த சபாவை அரசே எடுக்கும்னு கூடத்தான் பேச்சு. அது நடக்குமா?"

போலீஸாரின் காலதாமதத்தில் வருத்தம் பாலுவுக்கு. கடந்த ஜனவரியில் சபா பற்றிப் புகார் செய்யப்பட்டது. அது பற்றிய விசாரணைக்கு மார்ச்சில் சி.பி.சி.ஐ.டி. வசம் ஒப்படைக்கப்பட்டது. நடவடிக்கை எடுக்க ஏன் இந்தக் காலதாமதம்?

கிட்டத்தட்ட ஐந்து லட்சம் உறுப்பினர்கள் உள்ள சபா. அவர்களின் போக்கு எப்படியிருக்குமோ...? கண்ணியமான சபாவாக இருந்து அவசர கதியில் நடவடிக்கை எடுத்து மக்களின் கோபத்தை சம்பாதித்துக் கொள்ளக் கூடாது; அத்தோடு பொது மக்கள் பணம் பொறுப்பாய் போய்ச் சேர வேண்டும்



• ஆடிட்டர் பாலு



• ஜான்

என்கின்ற உணர்வினாலேயும் தீவிர விசாரணையினாலும்தான் காலதாமதம் என்கிறது சி.பி.சி.ஐ.டி. போலீஸ் வட்டம்.

சரி, கலைமகள் சபாவின் எம்.டி. ஜான் செய்த குற்றம் என்ன? அதன் எதிர்காலம் என்ன என்பது குறித்து சி.பி.சி.ஐ.டி.யில் - இவ்வழக்கு குறித்து மும்முரமாய் இயங்கிக் கொண்டிருந்த போலீஸ் அதிகாரி ஒருவரிடம் கேட்டோம். அவர் சில தகவல்களைத் தந்தார்.

கலைமகள் சபா கூட்டுறவுச் சட்டத்தில் வருவதே தவறு. கூட்டுறவுச் சங்கம் என்பது மக்களுக்காகச் சேவை செய்வதே அல்லாமல் உறுப்பினர்களுக்காக இயங்குவது அல்ல. இது உறுப்பினர்களுக்காகவே இயங்குவது.

கலைமகள் சபா ஆரம்பித்தபோது இருந்த அதன் சட்ட திட்டங்களின்படி, இடங்கள் வாங்கி அவற்றை மக்களுக்குப் பயன்படுகிற மாதிரி பிரித்துக் கொள்வது என்பதே நோக்கம். பிறகு அதைத் திருத்தி அமைத்துள்ளார். அதன்படி கட்டடங்கள் கட்டுவது, தொழில் உலகம் அமைப்பது (மினரல் வாட்டர், கொரியர், நட்சத்திர ஹோட்டல்... ஜவுளி...) எனப் புதிய புதிய திட்டங்கள் வைத்து அதற்குத் தனித் தனியே வசூலும் நடத்தியுள்ளார். இவையெல்லாமே சட்ட விதிகளுக்குப் புறம்பானவை.

சபா மேம்பாட்டுக் காரியங்களுக்கும், மற்ற காரியங்களுக்கும் ஜெனரல் மானேஜர் ஜான் தம் சொந்த விருப்பில் 3% சந்தாவைச் செலவு செய்யலாம் என்றுள்ளது. 1986-ம் வருடத்திலிருந்து சுமார் இரண்டே கால் கோடி ரூபாய் எடுத்துச் செலவு செய்திருக்கிறார். இது எந்தக் கணக்கிலும் வரவேயில்லை. இது தவிர மீட்டிங் செலவுகளுக்கான விரிவான விவரங்களும் இல்லை. சபாவிலிருந்து அவர் இரண்டரை லட்சம் ரூபாயைக் கடனாகவும் பெற்றுள்ளார். அதைத் திருப்பிச் செலுத்தவுமில்லை. சபாவின் சட்ட திட்டங்களின்படி உறுப்பினர் யாரும் கடன் பெற முடியாது. கூடாது. அந்த விதி மீறலையும் இவர் செய்துள்ளார்.

'கண்ணிமை' எனும் மாதம் இருமுறை பத்திரிகை ஆறு லட்சம் பிரதிகள் வெளியிடப்படுவதாகக் கணக்கு. ஆனால் அது எந்த சந்தாதாரர்களுக்கும் சரியாகப் போய்ச் சேரவில்லை என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. ரூபாய் மூன்று என்கிற விலையில் கடைக்குப் போட்டால் மாதம் 36,00,000 ரூபாய்க்கு என்ன கணக்கு? பத்திரிகை என்கிற பெயரில் ஒரே ஒரு தாளை மட்டும் அச்சடித்து உறுப்பினர்களுக்கு அனுப்புவதற்கான அத்தாட்சி கூட இல்லையாம். அச்சடித்த பிரஸ் வட்டாரங்கள் 50,000 பிரதிகள் மட்டுமே அடிப்பதாகப் போலீஸ் விசாரணையில் தெரிவித்துள்ளனர். ●

கட்டுரை, படங்கள் :

கேயெஸ்வி

ஓர் எழுத்தாளரின் மெகா ஊழல்!

கல்யாண ரிஸப்ஷன்ல கச்சேரியோ, லைட் மியூசிக்கோ வெச்சா ஒரு ஜென்மமும் உட்கார்ந்து கேட்கறது கிடையாது. இருந்தாலும் தாலி கட்டறது மாதிரி அது ஒரு சடங்கு ஆயிடுச்சு. இதை மாத்தணும்; லேம் டைம், ரிஸப்ஷனுக்கு வரவங்க சாப்பாட்டுக்குக் கூட எழுந்து போயிடாதபடி, மயங்கிடறாப்பல ஏதாவது புதுசா பண்ணணும்னு என் ஃப்ரெண்ட் கிஷோருக்கு ரொம்ப நாளா ஒரு யோசனை. அவன் கல்யாணத்துல ஒண்ணும் போணியாகலை. (பரீட்சைகளையெல்லாம் அடுத்தவங்க மேல பண்ணிப் பார்க்கறது தானே சாலச் சிறந்தது!) அவன் தம்பி கல்யாணத்து ரிஸப்ஷன்ல (லாஸ்ட் வீக் நடந்தது) ஒரு புதுமை செஞ்சான்.

ஒரு வீடியோ கேமராவை வாடகைக்கு எடுத்து, சொந்தக்காரங்க, ஃப்ரெண்ட்ஸ், தெரிஞ்ச வி.ஐ.பிக்கள் எல்லோரோடும் மினி பேட்டிகள். தவிர, கல்யாணப் பையன் – பொண்ணு ரெண்டு பேரையும் கூட நிக்க வெச்சு கேள்விகள் கேட்டு அவங்கவங்க கேரக்டர் வெளிப்படறாப்பல பண்ணி, போரடிக்காம இருக்க நடுநடுல சினிமாப் பாடல்களைச் சேர்த்து சுமார் ரெண்டரை மணி நேரப் படமா எடிட் பண்ணினான்.

ரெண்டு சைட் குடும்பங்களும் ஒருத்தரை ஒருத்தர் தெரிஞ்சிக்கப் பிரமாதமான ஐடியா இல்லை?

இதை ஸ்டேஜ்ல ஒரு ஸ்க்ரீன் வெச்சு, ப்ரொஜக்டர் மூலம் போட்டுக் காட்டினப்ப, ரிஸப்ஷனுக்கு வந்திருந்த யாருக்கும் பிஸிபேளா ஹோளி, பகளாபாத் ஞாபகமே வரலை!

இளைஞர்களெல்லாம் விரும்பி ரசிச்ச இந்த ப்ரோக்ராமை சீனியர் ஸிடிஸன்ஸ் அவ்வளவா விரும்பலைன்னு தெரிஞ்சுக்கிட்டேன். காரணம், நிகழ்ச்சி 'கிளாமரா' இருக்கறதுக்காக பையனும் பொண்ணும் 'Woo'லைல்லா போனதையெல்லாம் துரத்திப் போய் ஷூட் பண்ணி, 'எங்கெங்கே, எங்கெங்கே' பாட்டுப் பின்னணியோட ஒளிபரப்பினது!

'கல்யாணத்துக்கு முன்னால ஜாலியா வெளில சுத்தறதெல்லாம் சகஜமப்பா'ன்னு நிறைய பிள்ளைகள் அவங்கவங்க பேரன்ட்ஸுக்கு ஞானோபதேசம் பண்ணிட்டிருந்ததையும் பார்த்தேன். I enjoyed both!

* * * *

அரசியல்வாதிகள் மட்டும்தான் ஊழல் பண்ணணுமா? ஓர் எழுத்தாளர்-கம்-மொழிபெயர்ப்பாளரோட மெகா ஊழலைப் போன வாரம் ஹிண்டுல படிச்ச போது மூச்சடைச்சுடுச்சி.

எண்டமூரி வீரேந்திரநாத் – சுசீலா கனகதுர்கா காம்பினேஷன்ல பல மொழி பெயர்ப்பு நாவல்கள் தமிழ் வாசகர்களைத் 'துடிதுடிக்க' வெச்சிருக்கு.

அந்தத் துடிதுடிப்பைத் தூக்கி சாப்பிடற அளவுக்கு இருக்கு, மேடம் சு.க. துர்காவோட லேட்டஸ்ட் கைங்கர்யம்.

ஒரு பெரிய நாவலை தைரியமா எண்டமூரி எழுதினதா சொல்லி ட்ரான்ஸ்லேட் பண்ணி, ரிலீஸ் பண்ணி, புக்காகவும் பப்ளிஷ் பண்ணியிருக்காங்க. ஆக்சுவலா அது எண்டமூரி எழுதினதே இல்லை! வேற யாரோ எழுதி (தெலுங்குதான்) எப்பவோ வெளியானது!

விற்பனை நோக்கம் ஒண்ணு தவிர, எண்டமூரி பேரை யூஸ் பண்ணினதுக்கு வேற காரணம் இருக்க முடியாது!

கிட்டத்தட்ட முப்பது நாப்பது எண்டமூரி நாவல்கள் மேடம் மூலமா தமிழுக்கு வந்திருக்கும்னு நினைக்கறேன். 'எல்லாம் ஹாட் கேக்!'னு பப்ளிஷர்ஸ் சொல்லக் கேட்டிருக்கேன். This is also a hot cake but in bad taste.

* * * *


சாரு நிவேதிதாவோட 'Zero Degree' (நாவல்) படிச்சிட்டிருக்கேன். நாவல்னு சொன்னதும் உடனே உங்க மனசுல வரக்கூடிய விஷயங்களை ஒரு லிஸ்ட் போட்டீங்கன்னா (ஹீரோ, ஹீரோயின், காதல், கல்யாணம், கதை, வர்ணனை, சஸ்பென்ஸ், ஹ்யூமர், கிளுகிளுப்பு etc., etc.) அந்தப் பட்டியல்ல இருக்கக்கூடிய எந்த ஒரு

அம்சத்தோடவும் பொருந்தி வராத ஒரு நாவல் இது! மரபுகளை உடைத்தல்ங்கற ஒரே ஃபார்முலாதான்! பலர் எழுத (நினைக்கவே) கூச்சப்படக்கூடிய விஷயங்களை பட்டவர்த்தனமா போட்டு உடைக்கிறார்.

போஸ்ட் மார்டனிஸ - நான் லீனியர் ஜுரம் இன்னிக்கு நிறையப் பேரைப் பிடிச்சு ஒரு உலுக்கு உலுக்கிட்டிருக்கு. குறுக்க யோசிக்காம, கேள்வி கேட்டுக் கொடி பிடிக்காம இந்த ரகப் புஸ்தகங்களைப் படிக்க முடியுமானால் நீங்க பொறுமையின் சிகரம்!

நடை விஷயத்துல இந்த நாவல்ல சாரு பண்ணியிருக்கிற சில எக்ஸ்பெரிமென்ட்ஸை ரசிக்கிறேன். ஆனா, ஸாம்பிள் தர பயம்மா இருக்கு. விஷயரீதியா எடிட்டர் எடிட் பண்ண ஆரம்பிச்சா ஒரு வரி கூட நிக்காது!

• • • •



முழு உலகத்தையும் நிமிர்ந்து பார்க்கவெச்ச ஸ்ரீலங்கா கிரிக்கெட் டீமோட சமீபத்திய சரிவுகளை அனுதாபத்தோட பார்க்கறேன். ஜிம்பாப்வேகிட்ட உதை வாங்க வேண்டிய கஷ்ட காலம்! ஜெயசூர்யாவோட மேஜிக் பேட்டோ, சமிந்தா வாஸோட ஜாலப் பந்து வீச்சோ எடுபடலையே? கேப்டன் ஆயிட்டாலே ரெண்டு டஜனுக்கு மேல ரன் எடுக்கக் கூடாதுங்கறது உலகப் பொது விதி போலருக்கு. (நம்ம ஆளுங்களையும் சேர்த்தே சொல்றேன்.) ஷார்ஜா சீரீஸ்ல நான் ரசிச்ச ஒரே விஷயம் ஆக்ஷன் ரீப்ளேஸ். (எப்பவாவது) சிக்ஸர் பறந்த பந்துகளை கேமரா துரத்திட்டுப் போறது என்ன அழகா இருக்கு! இருட்டுக்கும் பந்தோட வெள்ளை நிறத்துக்குமான காண்ட்ராஸ்டை எவ்வளோ அக்யூரட்டா காண்பிக்க முடியறது! ஸ்டேடியம் உயரத்துக்குப் பந்து பறக்கறதை ரசிக்கறப்ப, வானம் அளவுக்கு டெக்னாலஜி உயர்ந்திருக்கறதையும் வியக்காம இருக்க முடியலை!

— சுபி

இது லாராக்களின் காலம்!

பங்களா தேஷில் நடைபெற்ற வில்ஸ் கோப்பைத் தொடருக்குப் பிறகு மேற்கிந்தியக் குழுவினர் ஜோகன்னஸ்பர்க்குக்குப் பறந்திருக்க வேண்டும். அங்கு அவர்கள் தென்னாப்பிரிக்க அணியுடன் மோத ஏற்பாடுகள் தயார். ஆனால் மேற்கிந்திய அணி கேப்டன் லாராவும், உதவி கேப்டன் கார்ல் ஹூப்பரும் டாக்காவிலிருந்து நேரே லண்டனுக்குச் சென்று விட்டார்கள்!

"தென்னாப்பிரிக்க அணியுடன் நாங்கள் மோத வேண்டுமானால் நாங்கள் கேட்கும் தொகையை அளிக்க வேண்டும்" என்று அவர்கள் அடம் பிடிக்க, இருவரையும் அணியிலிருந்தே விலக்கியது மேற்கிந்திய கிரிக்கெட் போர்டு! அந்த இருவரோடு ஒட்டிக் கொண்ட ஏழு கிரிக்கெட் வீரர்களுக்கு அபராதம் மட்டுமே என்றது. அந்த ஏழு வரும்கூட உடனே தென்னாப்பிரிக்கா செல்லவில்லை. போதாக்குறைக்கு சமர்த்தாக தென்னாப்பிரிக்கா சென்ற அணியின் கோச்ச வீரர்களும்கூட லண்டனுக்குப் போய்விட, மேற்கிந்திய கிரிக்கெட் போர்ட் தலைவர் பாட் ரூஸோவுக்கு அடி மேல் இடி! 'நவம்பர் 13ம் தேதி அத்தனை பேர் மீதும் ஒழுங்குமீறல் நடவடிக்கை" என்றிருக்கிறார். யாரும் அசருவதாகவோ, அசைந்து கொடுப்பதாகவோ தெரியக் காணோம்.

இத்தனைக்கும் 'சும்மா பயமுறுத்திப் பார்க்கிறது கிரிக்கெட் போர்டு' என்று யாரும் நினைத்திருக்க முடியாது. ஏற்கெனவே வெவ்வேறு சந்தர்ப்பங்களில் ஜிம்மி ஆடம்ஸ், கர்ட்லி ஆம்ப்ரோஸ், கர்ட்னி வால்ஷ் ஆகியோர், கட்டுப்பாடு இல்லாமல் நடந்து கொண்டதற்காக அவர்களது வருமானத்தில் பத்து சத வீதம் அபராதம் விதிக்கப்பட்டதுண்டு. ஏன், லாராவுக்கேகூட முன்பு அபராதம் விதிக்கப்பட்டதுண்டு – பயிற்சி நாட்களில் மட்டம் போட்டதற்காக.

சரி, என்னதான் மனக்குறை லாராவுக்கு?

இரு வருடங்களுக்கு முன் ஆஸ்திரேலிய டூர் சென்றபோது மேற்கிந்திய கிரிக்கெட் வீரர்களுக்குத் தலா 2500 டாலர் வழங்கப்பட்டது. ஆனால் இப்போதைய தென்னாப்பிரிக்க டூருக்கு வெறும் 1000 டாலர்தான் ஊதியம். போதிய ஸ்பான்ஸர்கள் இல்லையாம். தவிர பயிற்சிக் காலத்துக்கும் ஊதியமளிக்க வேண்டுமென்பதும் லாராவின் வாதம்.

வரும் பிப்ரவரி ஏழாம் தேதி வரை நடக்கவுள்ள இந்த டூருக்கு ஒரு தனி முக்கியத்துவம் உண்டு. தென்னாப்பிரிக்காவில் (அதன் மீது விதிக்கப்பட்ட தடைகள் நீங்கிய பிறகு) மேற்கிந்திய அணி மேற்கொள்ளும் முதல் அதிகாரபூர்வமான சுற்றுப்பயணம் இது.

மேற்கிந்திய கிரிக்கெட் போர்ட் தலைவரும் டூர் மேனேஜர் கிளைவ் லாயிடும் லண்டனுக்குச் சென்று பேச்சுவார்த்தைகள் நடத்த, ஒருவழியாக வெள்ளைக் கொடி பறந்திருக்கிறது; ஒப்பந்தம் உருவாகியிருக்கிறது. அதிக சம்பளம்; எந்த விளையாட்டு வீரர் மீதும் நடவடிக்கை கிடையாது என்று ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

லாராவின் தரப்பிலும் நியாயங்கள் உண்டு என்றாலும் நம் ஸ்ரீகாந்த் தலைமையில் முன்பு கிரிக்கெட் வீரர்கள் நடத்திய 'காந்திய வழிப் போராட்டம்' நினைவுக்கு வருகிறது. 'சீனியர், ஜூனியர் விளையாட்டு வீரர்களிடையே ஊதிய வித்தியாசம் தேவை' என்று சீனியர்கள் கொடி பிடிக்க, அப்போதைய கேப்டன் ஸ்ரீகாந்த் 'இது தீர்மானிக்கப்பட்டால்தான் பாகிஸ்தான் செல்வோம்' என்று முரண்டுபிடிக்கவில்லை. மாறாக 'பாக் சென்று விளையாடுவோம். ஆனால் அதற்கு ஊதியம் வாங்கிக் கொள்ள மாட்டோம்' என்று கூறிச் செயல்பட்டார். ஆனால் அதன் பிறகும் அவர்களுடைய கோரிக்கை ஏற்கப்படவில்லை. ஆனால் லாரா கேட்டது கிடைத்து விட்டது! ●

— குல்ஹா

• லாரா • ஹூப்பர்





கஸ்தூரி திலகம்

காந்தி - கஸ்தூர்பா வாழ்க்கையிலிருந்து சில சம்பவங்களை எடுத்து கற்பனை கலந்து நாடகமாக்கியிருக்கிறார் மெரீனா.

குடும்பச் சித்திரங்கள், துணுக்குத் தோரணங்கள் என்ற செக்குமாட்டு சுழற்சியிலிருந்து தமிழ் நாடகத்தை வெளியே கொண்டு வர எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சி வரவேற்க வேண்டிய ஒன்று.

ஆனால், தென்னாப்பிரிக்க வாழ்க்கை தொடங்கி பாவின் மரணம் வரை நிகழ்ச்சிகள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் அரங்கேறுவதால் 'கிளிப்பிங்ஸ்' பார்க்கிற உணர்வே ஏற்படுகிறது. சம்பவங்களை ஏதேனும் ஒரு நூல் கொண்டு சேர்ப்பதன் மூலமோ காட்சிகளிடையே அர்த்தமுள்ள இணைப்புரையின் மூலமோ இந்தக் குறை தெரியாமல் செய்திருக்கலாம்.

பிரதான பாத்திரங்கள் நிஜ நாயக - நாயகியைத் தோற்றத்தில் ஒத்திருக்க வேண்டும் என்பதற்காக மிகுந்த சிரமம் எடுத்துக் கொண்டிருக்கிறார் நாடகாசிரியர். மேடை, ஒப்பனையிலும் கூர்ந்து கவனம் செலுத்தியிருக்கிறார். (பாவின் சூப்பர் சைஸ் ஸ்டிக்கர் பொட்டு நீங்கலாக!) இதனால் நம்பகத்தன்மை வலுப் பெறுகிறது.

ஆனால், சரித்திர நாயக - நாயகிகள் நாடகப் பாத்திரங்களாகிப் பேசும்போது மொழியை எப்படிக் கையாள்கிறார்கள் என்பதுடன் என்ன தொனியில் பேசுகிறார்கள் என்பதும் கவனத்துக்குரியது. 'நீ கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணிக்கோ கஸ்தூரி' என்றும் 'நான் இந்தத் துணியையெல்லாம் வாஷ் பண்ணிட்டு வந்துடறேன்..' என்றும் மகாத்மா காந்தி பேசும்போது நம்பகத் தன்மை காணாமல் போய் நகைச்சுவையாகி விடுகிறது.

இதனையும் மீறி நாடகத்தின் சில காட்சிகள் சிலிர்ப்பூட்டுகின்றன; மனத்தைத் தொடுகின்றன; சிந்திக்க வைக்கின்றன... காரணம், அந்த உதாரண மனிதர்களின் உத்தம வாழ்க்கையில் பிரகாசிக்கிற சத்திய ஒளி.

கஸ்தூர்பாவுக்கு மகாத்மா ராட்டையில் நூல் நூற்கக் கற்றுத் தரும் காட்சியில் கதர் தத்துவத்துடன் சேர்ந்து வெளிப்படுகிற சராசரி தாம்பத்யத்தைக் கடந்த நேச உணர்வு உருக்குகிறது.

காந்தி ஆசிரியராக, பா மாணவியாகி பஞ்சாபின் ஐந்து நதிகளைப் பட்டியலிட முடியாமல் திணறும் குழந்தைத்தனத்தை ரசிக்க முடிகிறது.

உண்ணாவிரதத்தில் உடல் நலிந்து மகாத்மாவின் உயிர் ஊசலாட, அவருக்காகப் பிரார்த்திக்கிறார் பா. மறு வருடம் அதே தேதியில் கஸ்தூர்பாவின் உயிர் பிரிகிறது - மகாத்மாவின் மடியில்... பாவின் இறுதிப் போராட்டத்தில் சற்றே நாடகத்தன்மை தூக்கலாயிருந்தாலும் இக்காட்சி நமக்குள் சிறிய சிலிர்ப்பை ஏற்படுத்துகிறது - காந்திஜியின் மௌனமான துக்கமும்; 'பா' என்று ஒலிக்கிற ஆசிரமப் பெண்ணின் ஒற்றைக் குரலும் அவளை செய்கையால் அமைதிப்படுத்தும் மகாத்மாவின் ஆளுமையும் - ஒரு உலுக்கு உலுக்கி யோசிக்க வைக்கின்றன.

காந்திஜியாக அப்பு சீனுவாசன், கஸ்தூர்பாவாக வர்ஸலா ராஜகோபாலன், ஹரிலாலாக விட்டல் பத்மநாபன் நடிப்பாற்றல் வெளிப்படுத்துகிறார்கள். பிறருக்கு வாய்ப்புக் குறைவு.

இதுபோன்ற சவால் மிகுந்த நாடக முயற்சிகளை மேற்கொள்ளும்போது, ஒன்றுக்கு மேற்பட்ட நாடகக் குழுக்களிலிருந்து திறமைகள் சங்கமித்தால் நல்ல பலன் கிடைக்காதோ..?

— மலர்



பழிக்குப் பழி!

முஜிபுர் ரஹ்மான் படுகொலை தொடர்பாகக் குற்றம் சாட்டப்பட்ட பத்தொன்பது பேரில் பதினைந்து பேருக்கு மரண தண்டனை அளித்திருக்கிறது டாக்கா நீதிமன்றம்.

இருபத்தி மூன்று வருடங்களுக்கு முந்தைய சம்பவம் அது. சுதந்தர பங்களாதேஷின் முதல் பிரதமரான முஜிபுர் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந்தன. பதவியேற்ற ஓரிரு ஆண்டுகளிலேயே நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்றினார் அவர் - ஜனாதிபதிக்கே முழு அதிகாரம் எனும் வகையில். பிறகு தன்னையே ஜனாதிபதியாக அறிவித்துக் கொண்டார். கூடவே எல்லா அரசியல் கட்சிகளுக்கும் தடை!

இந்த நிலையில்தான், ராணுவ அதிகாரிகள் சிலர் முஜிபுரின் வீட்டுக்குள் தடாலடியாக நுழைந்து குண்டு மழை பொழிந்தனர். முஜிபுர் இறந்தார் - அவரது உடலில் இருபது துப்பாக்கிக் குண்டுகள்! அந்த ராணுவ வெறிக்கூட்டம் அதோடு நின்று விடவில்லை. அவரது மனைவி, மூன்று மகன்கள், இரு மருமகள்கள் என்று பலரையும் சுட்டுத் தீர்த்தது. விடிகாலைப் பொழுதில் அங்கு நடந்த குண்டு வீச்சில் மொத்தம் இறந்தவர்கள் இருபத்தாறு நபர்கள்!

முஜிபுரின் மகள் ஹஸீனாவும் அவரது மகளும் அன்று உயிர் தப்பியதற்கு ஒரே காரணம் அவர்கள் அப்போது ஜெர்மனியில் இருந்ததுதான்!

காலப்போக்கில் ஹஸீனா அரசியலில் நுழைந்தார். முஜிபுரால் தொடங்கப்பட்ட அவாமி லீக் கட்சி தேர்தலில் பெரும்பான்மை பெற, நாட்டின் தலைமைப் பதவி ஹஸீனாவுக்கு அளிக்கப்பட்டது. உடனேயே தன் தந்தையைக் கொன்றவர்களைப் பழிவாங்கக் கடும் முயற்சி செய்தார். ஆனால் அது சுலபமானதாக இருக்கவில்லை. முஜிபுர் படுகொலை செய்யப்பட்ட பிறகு ஜியா-உர்-ரஹ்மான் தலைமையில் ராணுவ ஆட்சி நடைபெற்றது. அப்போது முஜிபுரைக் கொலை செய்த ராணுவ அதிகாரிகளைக் காக்கும் வகையில், 'தேசநலனைக் கருத்தில் கொண்டுதான் இந்தப் படுகொலைகளை ராணுவ அதிகாரிகள் செய்தார்கள்' என்று தீர்ப்புக் கூறும் வகையில் ஒரு சட்டம் உருவானது. உள்ளூர் எதிர்ப்பிலிருந்து படுகொலை செய்த ராணுவ அதிகாரிகளைக் காப்பாற்றும்விதமாக அவர்களை லிபியாவுக்கு அனுப்பியது ராணுவ அரசு. அங்கிருந்தே அவர்கள் கானடா, அல்ஜீரியா, சீனா, அர்ஜன்டைனா போன்ற நாடுகளின் தூதரக அதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் பிரதமரான கையோடு, அந்தத் தூதரக அதிகாரிகளை நாடு திரும்ப உத்தரவிட்டார் ஹஸீனா. அந்த உத்தரவின் உள்ளர்த்தத்தை உணர்ந்து கொண்டு கிட்டத்தட்ட அத்தனை பேரும் தலைமறைவாகி விட்டனர். நாடு திரும்பியவர் ஒருவர் மட்டுமே. நடந்த படுகொலைகளுக்காக அவரை மட்டும் ஒன்றும் செய்ய முடியாது என்பதால், சட்ட விரோதமாக ஆயுதங்களை வைத்துக் கொண்டிருந்ததற்காக(?) அவர் கைது செய்யப்பட்டார்.

அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்றலாம் என்றால், அதற்குப் பாராளுமன்றத்தில் மூன்றில் இரு பங்கு மெஜாரிட்டி வேண்டும். அது அப்போது அவாமி லீக்கிற்கு இல்லை. ஆனால் பிறகு நடந்த தேர்தலில் இந்த மெஜாரிடி கிடைத்து விட, சட்டம் மாற்றப்பட்டது. வழக்குத் தொடுக்கப்பட்டது. பிற நாடுகளின் உதவியுடன் பல 'படுகொலை ராணுவ அதிகாரிகள்' பங்களாதேஷுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

தமது குடும்பத்தினர் கொலையான அதே வீட்டில்தான் ஹஸீனா தொடர்ந்து வசித்து வந்திருக்கிறார். ரத்தக் கறைகள், துளைக்கப்பட்ட துப்பாக்கிக் குண்டுகள் இத்தனையும் கொண்ட அந்த வீட்டின் உட்புறச் சுவர்களை ஹஸீனா இதுவரை வெள்ளையடிக்கவில்லை - தமது பழிவாங்கும் உறுதி கரைந்து விடக்கூடாது என்பதற்காக!

— ஜி.எஸ்.எஸ்.

மதுரை சௌராஷ்ட்ரா கல்லூரி மாணவ, மாணவியரிடம், 'நீங்கள் திரைப்பட இயக்குநரானால்...?' என்று கேட்டோம்.

1. தேவிப்ரியா (எம்.ஏ.) : சினிமாக்களில் காலேஜ் என்றாலே கேவலமாகத்தான் காட்டுகிறார்கள். அறிவில் முதிர்ந்த பேராசிரியர்கள், சாதனை படைக்கும் மாணவர்கள், நட்பாய்ப் படரும் மாணவ, மாணவியர் உறவு... என்று நிஜத்தைப் படம் பிடித்துக் காட்டுவேன்.

2. மெய்காப்பாளன் (பி.ஏ.) : பொழுது போக்கத்தான் சினிமாவுக்கு மக்கள் வருகிறார்கள். குடும்ப மற்றும் சமூக சூழலில் சிரிக்க முடியாமல் தவிக்கும் மக்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கிற மாதிரி படமெடுப்பேன்.

சிம்ரனுக்கும் ரம்பாவுக்கும்

3. எம். சுதாதேவி (பி.ஏ.) : நமது தியாகிகளைப் பற்றிப் படமெடுத்து இளைஞர்களிடத்தில் நாட்டுப்பற்றை ஏற்படுத்துவேன்.


4. ஆர். மணிகண்டன் (எம்.ஏ.) : இன்று தென்மாவட்டங்களில் ஜாதிக் கலவரங்கள் கொழுந்து விட்டு எரிகின்றன. இதை மையமாக வைத்தே என் படம் அமையும்.

5. சி. நர்மதா (பி.வி.எஸ்.) : நாவரசு, சரிகாஷா போன்றோரின் மரணங்களை மையப்படுத்தி, இந்தியாவெங்கும் கல்லூரிகளில் ராகிங் மற்றும் ஈவ் டீஸிங் ஒழியும்படியான ஒரு சப்ஜெக்ட்தான் எனது முதல் படம்!

6. கே. ஜெயா (பி.ஏ.) : ரம்பா, சிம்ரன் அணியாத முழு ஆடைகளும், கவுண்டமணி கூறாத நல்வார்த்தைகளும், நாயகர்களின் அலட்டாத சிறந்த நடிப்பும்.. என் படத்தில் கண்டிப்பாய் இடம் பெறும்.

7. ஹெச். சங்கர் (பி.வி.எஸ்.) : இன்றைய சினிமாக்களில் இல்லாத ஒரு விஷயம் என் படத்தில் கண்டிப்பாய் இடம் பெறும். அதான் ஸார்.. கதை!

8. ஜே.ஆர். மஹாலட்சுமி (பி.ஏ.) : 'டைட்டானிக்' பட ஹீரோ 'ஜாக்'கும், ஹீரோயின் 'ரோஸ்'ஸும் தான் என் தமிழ்ப் படத்திற்கும் ஹீரோ, ஹீரோயின். தமிழ் ரசிகர்களை திருப்திப்படுத்த, ஊட்டி மலையில் ஏராளமாக துணை நடிகர் பட்டாளத்தோடு



டப்பாங்குத்து டான்ஸும் ஆடுவார்கள்.

9. பி. கவிதா (பி.எஸ்ஸி.) : சினிமாவெல்லாம் நமக்கு லாயக்குப்படாது. அப்படியே எடுத்தாலும் சத்யஜித்ரே பாணியில் அவார்ட் ஃபிலிம்தான்.

10. ஏ. பெலிக்ஸ் ராஜா (பி.ஏ.) : ராணுவ வீரர்களின் வாழ்க்கை குறித்துத்தான் என் முதல் படம்'

11. எம்.டி. அனுகுமார் (பி.எஸ்ஸி.) : ஒரே நேரத்தில் இருபது பேரை அடித்து வீழ்த்த முடியாத ஹீரோ, இடுப்பைக் கூடக் காட்டாத ஹீரோயின், இரட்டை அர்த்தம் இல்லாத காமெடி, வரிகள் புரிகிற மாதிரியான பாடல்கள்... என் படம் ஓடுமா ஸார்?

12. டி.ஜே. குமரேஷ் (பி.எஸ்ஸி.) : ஆடலுடன் பாடலைக் கேட்டு ரசிப்பதில்தான் சுகமா? வாழ்க்கை நிஜத்துடன் கருத்துக்களை ரசிப்பதிலும் சுகம் உண்டுதான். அந்த சுகத்தை மக்களுக்குத் தருவேன்.

13. என்.எம். ஸ்ரீ பிரசன்னா (பி.ஏ.) : நான் டைரக்டரா? அப்ப... உடனே நாலைஞ்சு புத்திசாலி அஸிஸ்டெண்ட் டைரக்டர்களைப் புடுச்சிப் போடணும். அப்பதானே... என் வண்டி ஓடும்?!

14. பி.ஏ. ஸ்ரீகுமார் (பி.ஏ.) : நான் டைரக்டரானால் 'காதல் கோட்டை' கட்டி 'காதலுக்கு மரியாதை' செய்வேன். 'காதலா காதலா?' என்று அலறும் பெற்றோருக்கு 'காதலே நிம்மதி' என்று உணர வைப்பேன்.

15. பிரசன்னா விக்னேஷ் (பி.எஸ்ஸி.) : என் படம் வெளிநாட்டில் நடக்கிற கதையாத்தான் இருக்கும். அப்புறம்... எப்படித்தான் நான் வெளிநாடு சுத்திப் பார்க்கிறது?

16. டி.கே. ப்ரியா (பி.எஸ்ஸி.) : இளையோரிடம் மட்டும்தான் அன்பும், காதலும் இருக்குமா? முதிய தம்பதியின் காதல் உணர்வுகளைப் படமாக்கி வெற்றி பெறுவேன்.


17. ஏ.ஆர். காயத்ரி (பி.எஸ்ஸி.) : சிம்ரனும், ரம்பாவும்தான் என் படத்து ஹீரோயின்கள். படம் முழுக்க அவர்களுக்கு ஒரே காஸ்ட்யூம்தான். அது என்ன தெரியுமா? கண்ணு மட்டும் வெளிய தெரியுற கருப்பு பர்தா!

பர்தா!

18. எஸ்.டி. சுபாஷிணி (பி.எஸ்ஸி.) : கல்வியை இழந்து சிறு வயதிலேயே குடும்ப பாரத்தைச் சுமக்கும் குழந்தைத் தொழிலாளர்தான் என் படத்து நாயகர்கள். அந்தச் சூழல்தான் என் படத்தின் களம். அந்த மெஸேஜ் 'ரீச்' ஆவதற்காக சில கமர்ஷியல் இட்டங்கள் சேர்த்துக் கொண்டு வெற்றி பெறுவேன்.

19. எல்.கே. ஹரீஷ் (பி.எஸ்ஸி.) : தந்தைக் குலம் போற்றும்படி படமெடுப்பேன். ஏன் ஸார்... தாய்க் குலம் போற்றினால்தான் படம் ஓடுமா?

20. பி.கே. மேகநாதன் (பி.எஸ்ஸி.) : ஏற்கெனவே படைப்பாளி - உழைப்பாளி பிரச்னை இருக்கிறப்ப நான் வேற டைரக்டர் ஆகணுமா? ஆளை விடுங்கப்பா...! என்ன.. இந்தியாவுக்கு ஆஸ்கார் அவார்ட் சான்ஸ் மிஸ்ஸாகிப்



போகும். அவ்வளவுதான்!

21. ஜி.எஸ். ஓம்பிரகாஷ் (பி.எஸ்ஸி.) : பத்திரிகைகள்ல வர்ற 10, 20 ஜோக்கை சேர்த்து ஒரு காமெடி ட்ராக், அஞ்சு பாட்டு; அதில ரெண்டு மெட்ராஸ் கானா, நாலு ஃபைட் சீன் சிச்சுவேஷன், மார்கெட் வேல்யூ உள்ள ஹீரோ, அரைகுறை ஆடை நாயகி... எல்லாம் ரெடியா? ரெடி... ஸ்டார்ட் காமிரா...

22. எஸ்.டி. கிருஷ்ண பிரபு (பி.காம்) : பழைய எம்.ஜி.ஆர். பட வீடியோ கேஸட், ஒரு டி.வி., ஒரு வீடியோ ப்ளேயர் போதும். எம்.ஜி.ஆருக்கு பதிலா சத்யராஜ், சரோஜா தேவிக்கு பதிலா மீனா! வெள்ளி விழாப் படம் ரெடி!

23. டி.ஏ. பூர்ணிமா (பி.காம்) : ஹீரோ குருடன், ஹீரோயின் செவிட்டு, ஊமை. இவர்களுக்கிடையே மலரும் காதல் தான் என் சப்ஜெக்ட். எப்படி சூப்பரா? (இதை யாராவது படமாய் எடுத்திட்டா எனக்கு ராயல்டி வாங்கித் தரவேண்டியது கல்கியின் பொறுப்பு தான்!)

24. டி.எஸ். பாலாஜி (பி.காம்.) : நிச்சயமாய் படப் பெயர்களில் 'ப்', 'ச்', 'க்' போன்ற ஒற்றெழுத்துக்களை இடம் பெறச் செய்வேன். நியூமராலஜிக்காக தமிழைக் கொல்ல மாட்டேன்.

25. பி.ஏ. ஹேமலதா (பி.காம்.) : கிராம வாழ்க்கையின் மகத்துவத்தையும், நகர வாழ்க்கையின் அவலத்தையும் சித்திரிக்கும் வகையில் படம் எடுத்து, கிராமத்தார் நகரத்திற்கு இடம் பெயர வேண்டாம் என வலியுறுத்துவேன். இதனால் நகர நெருக்கடி கூடாது. விவசாயம் போன்ற கிராமத் தொழில்கள் நசியாது.

26. ஜி.எம். கல்யாணி (பி.காம்.) : உணர்ச்சியைத் தூண்டாமல், உணர்வுகளைத் துயில் எழுப்பும் வகையில் மட்டுமே என் படங்கள் அமையும்.

27. ஜி.ஜி. உமா மகேஸ்வரி (பி.காம்.) : பாரதியார், பாரதி தாசன் பாடல்களை ஏ.ஆர். ரகுமான் இசையில் பதிவு செய்து என் படத்தில் இடம் பெறச் செய்வேன். அப்படியாவது மக்களுக்கு அந்தப் பாடல்கள் மனப்பாடம் ஆகும் பாருங்க!

28. எம்.எஸ். கிருத்திகா (பி.காம்.) : ஏதோ... சங்கர் ஒருத்தர்தான் தோல்வியே இல்லாமல் வெற்றிப்படமாய் தந்துக்கிட்டிருக்கார். என்னை டைரக்டராக்கி அவர் தூக்கத்தை ஏன் ஸார் கெடுக்கப் பார்க்குறீங்க?

29. ஏ. ஷ்யாம் (பி.காம்.) : தொப்புளில் பம்பரம் விடுறது, ஆம்லெட் போடுறது... இதெல்லாம் இல்லாமல் தொப்புள் கொடியின் - அதான் சார் தாய்மை - அதன் மகத்துவம் பற்றிப் படமெடுப்பேன்.

30. டி.ஆர்.ஆர். சங்கீதாமாய் (பி.காம்.) : தேசபக்தி, ஒழுக்கம்... அப்படி, இப்படின்னு கதைவிட விரும்பலை. என்னைத் தேடி வர்ற தயாரிப்பாளர் நஷ்டமடையாத அளவிற்கு எப்படிப் படமெடுக்கணுமோ, அப்படி எடுப்பேன்.



சந்திப்பு :
கிரண் நியூஸ்

படங்கள் :
'நேஷனல்' சுந்தர்






சொர்க்க மய(ம)ான பூமி!

குஜராத்தியர் குஷாலானவர்கள்; குடும்பத்தில் ஒருவர் சந்நியாசம் வாங்கிக் கொண்டால், அதைக் கல்யாணம் போல் கொண்டாடுவார்கள்! யாராவது மெனக்கெட்டு நாட்கணக்கில் விரதமிருந்தால், ஊருக்கே விருந்து வைத்து கோலாகலமாக்குவார்கள். இப்போது இன்னும் ஒரு படி மேலே போய், யாராவது மரணித்தால், அவரது கடைசிப் பயணத்தை, உல்லாசப் பயணமாக மாற்றி விட்டார்கள்!

நம்பிக்கை இல்லாதவர்கள், ஒரு நடை சௌராஷ்ட்ரத்தின் மத்தியிலிருக்கும் ராஜ்கோட்டுக்கு (பழைய கதியவாட்) சென்று வரலாம்.

இங்குள்ள 'பூனா சமர்த்பென் ஹரிலால் ஜெய்சந்த் தோஷி முக்தி தாம்', சாதாரண இடுகாடல்ல. மயங்க வைக்கும் மயான பூமி!

முகப்பில், பெரிய அலங்கார வளைவுகள்; இருபுறமும், 'யமராஜ்' சிலை வடிவில் வரவேற்பளிக்கிறார். நடை முழுதும் சலவைக் கற்களின் வழவழப்பு; வரிசையாக இரண்டு பக்கங்களிலும் சின்னச் சின்ன மண்டபங்கள், அவற்றுள் புராண, இதிகாச நாயகர்கள், கடவுளர்கள்... ஆங்காங்கே ராமாயணம், மகாபாரதம், கீதை போன்றவற்றி



''அந்த அரசியல் கட்சித் தலைவர் திடீர்னு சாதிச் சங்கம் ஆரம்பிச்சிருக்காரே ஏன்?''

''சாதிச் சங்கமா தொடங்கி, அரசியல் கட்சியா மாத்தினாத்தான் இனி 'ஓர்க் அவுட்' ஆகும்னு ஜோசியக்காரன் சொன்னானாம்!''

— பாம்பன் செ. சல்மான்ஸ்

விருந்து மேற்கோள்கள். அதைத் தாண்டி, இறுதியஞ்சலிக் கூட்டங்களை ஏற்பாடு செய்வதற்கோ, பூஜை புனஸ்கார விதிகளுக்கோ வசதியான ஏ.ஸி. அறைகள்; அஞ்சலி செய்பவர்கள் ரெஃப்ரன்ஸுக்கு, அமைதியான நூலகத்துடன் இணைந்த பெரிய ஹால்!

சுற்றுச் சுழலில் மரஞ்செடி கொடி களடர்ந்த நந்தவனம். ஒரிஸ்ஸாச் சிற்பிகள் வடிவமைத்த, தண்ணீர்க் குடமேந்திய நங்கையர், தண்ணென்ற நீர் வீழ்ச்சிகள், ஒதுக்குப்புறமாக ஒரு ஆலமரம் வேறு - யாக்கை நிலையாமை, ஆன்மாவின் நித்யத்வம் போன்ற பெரிய விஷயங்களைப் பற்றி தியானிக்கவோ, ஒன்றும் தெரியாவிட்டால் சும்மா அமர்ந்து 'மெடிட்டேஷன்' செய்வது போல் பாவ்லா காட்டவோ ஏதுவாக! சும்மா சொல்லக் கூடாது. இது ஒரு 'டிஸைனர் கிரிமேடோரியம்'தான்!

பழங்கால முறையில், மரக்கட்டை தகனத்திற்கு ஏற்ற மறைவிடங்கள்; அன்றியும் புதுமை விரும்பிகள் சௌகரியத்துக்கு மின்சார எரியூட்டு தனமும்' உண்டு. வாழ்க்கை முழுவதும் க்யூவில் நின்று சலித்த சராசரி இந்தியனை, மரணித்த பின்னும் 'க்யூ' கலாசாரம் விடுவதில்லை! இங்கேயும் உடல்களின் 'க்யூ'. மிக நெருங்கிய உறவினர்கள் மட்டுமே உள்ளே அனுமதிக்கப்பட, ஏனையோர் வெளியேயுள்ள கண்ணாடி அறையின் வழியாகப் பார்க்க முடியும். (எட்டி எட்டி வேடிக்கை பார்க்கும் கூட்டமும் அதில் அடக்கம்) ஒரு உடலின் மின் தகனத்துக்கு நாற்பத்தைந்து நிமிடங்கள் ஆகிறதாம். அஸ்தியைப் பெற்றுக் கொண்டு ஒரு கும்பல் கலைந்ததும், தானியங்கி எலெக்ட்ரானிக் கதவுகள், அடுத்தவர்களை அணைத்துக் கொள்கின்றன.

சுருங்கச் சொல்ல வேண்டுமென்றால், இறப்பு வேதனையானதென்றாலும், அதனுடன் இலவச இணைப்புகளாய் ஒட்டிக் கொண்டிருக்கும் பயம், பீதி, பேய் பிசாசுகளின் கோரக் கற்பனைகள், தனிமையின் கொடூரம் போன்ற இருளடிக்கும் பயங்கரங்கள் எதுவுமில்லாத இனிமையான (ம)ரணம்! இதற்குக் காரணமானவர்கள் 'சர்கம் க்ளப்' அங்கத்தினர்கள்.

இரண்டு வருடத்திற்கு முன்னால், ராஜ்கோட் முனிசிபாலிடி கார்ப்பொரேஷன்காரர்கள் இவர்களை அழைத்து, சாதாரணமாக எல்லா இடங்களிலும் இருக்கும் கிரிமடோரியம் போல, படுமோசமாக இருந்த இந்த இடத்தைச் செப்பனிட முடியுமா என்று கேட்டபோது, க்ளப்பின் பிரசிடெண்டான குண்வந்திபாய் தலாவாலாவும், ஏனைய கமிட்டி மெம்பர்களும் இதை ஒரு சவாலாகவே ஏற்று, 'இதுபோலில்லை' என்று எல்லோரும் வியந்து அதிசயிக்கும் வண்ணம், இதை உருமாற்றிக் காட்ட எண்ணமிட்டார்கள்.

டொனேஷன்கள் குவிந்தன; ஒன்றரைக் கோடியில், எழில் மிகு ஸ்மசானம் உருவானது! வெள்ளி முலாமிட்ட நுழைவுக் கதவுகள் அமைக்க, ஒருவர் ஏழு லட்சம் நன்கொடை தருவதாயுள்ளாராம்! தவிரவும் நினைவு மண்டபம் எழுப்பி, இஷ்ட தெய்வத்தையோ இதய தெய்வத்தையோ பிரதிஷ்டை பண்ண நன்கொடைகள் ஏற்றுக் கொள்ளப் படுகின்றன. (அதெல்லாம் கிழே சலவைக்கல்லில் டொனேஷன் கொடுத்தவரின் பெயரைப் பொறித்து விடுவார்கள்!)

இந்தியாவில் கௌரவமாக வாழ முடிகிறதோ இல்லையோ, ஒய்யாரமான கம்பீரத்துடன் மரணிக்க முடியும் என்பதற்கு சர்கம் க்ளப்காரர்கள் கியாரண்டி தருகிறார்கள். அதுவும் இனம், மதம், மொழி போன்ற எந்த பேதமுமில்லாமல் யார் வேண்டுமானாலும் இவர்கள் 'சேவை'யைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அந்திமக் கடன்களுக்கென்று வரும் கூட்டத்தைக் காட்டிலும், இதை பிக்னிக் ஸ்பாட்டாக நினைத்து, ஸைட் ஸீயிங்குக்காக வரும் கும்பல் அதிகம். போகிற போக்கில் இதை 'டூரிஸ்ட் ஸ்பாட்'டாக ஆக்கி விடுவார்களோ என்னவோ?

ஹாங்... ஒரு முக்கியமான தகவல். இங்கே எல்லாம் இலவசம்தான்! கட்டணம் எதுவுமேயில்லை!

— ஜேயார்

ஆசியாவிலேயே முதல் முறையாக இதய அறுவை சிகிச்சையில் "ரோபோவின் கரம்" ஒன்று பயன்படுத்தப்பட்டிருக்கிறது. டெல்லி டாக்டரான ப்ராஹ்லான் என்பவர் பதினாறு வயது பங்களாதேஷ் சிறுமி ஒருத்தியின் இதய துவாரத்தை இந்த முறையில் சரி செய்திருக்கிறார். "ஆபரேஷன் செய்யும் டாக்டரின் கரத்தில் ஏற்படக் கூடிய இலேசான நடுக்கம் கூட ரோபோவின் கரத்தில் இருக்காது. மிக நுண்ணிய தையலைக் கூட இதனால் போட முடியும். தவிர இயந்திரக் கை தனக்கிடப் பட்ட கட்டளையைச் செய்யும் போது, பாதிக்கப்பட்ட இடத்தை வெகு தெளிவாகப் பார்க்க முடிகிறது" என்கிறார் டாக்டர்.



* சூரிய ஒளியில் ஓடுமா?

அண்டார்டிகா பிரதேசத்தைப் பற்றிய மிகவும் விவரமான வரைபடம் ஒன்றை சமீபத்தில் உருவாக்க முடிந்திருக்கிறது. கனடா நாட்டின் ரேடார்சட் செயற்கைக் கோளின் உதவியுடன்தான் இது சாத்தியமாகி உள்ளது. நான்கே வாரங்களில், அண்டார்டிகாவை எட்டாயிரம் கோணங்களில் இது படம் பிடித்துத் தள்ள, வரைபடம் ரெடி!

நியுஜெர்ஸி மருத்துவ மையத்தின் நரம்பியல் பிரிவின் தலைவர் டாக்டர் இரா ப்ளாக். அறுபது அல்லது எழுபது வயதை எட்டிய பிறகும் மனித மூளையில் புது செல்கள் உருவாகின்றன என்பதை இவர் தலைமையில் விஞ்ஞானிகள் குழு செய்த ஆராய்ச்சிகள் சுட்டிக்காட்டுவதாகக் கூறுகிறார். இது சந்தேகமின்றி நிரூபிக்கப் பட்டால், அந்த வயதிலும் மேலும் புதிய செல்களைத் தோன்றச் செய்து, "வயதானால் மறதி" போன்ற நிலைகளையும் பார்கின்சன் வியாதி போன்ற நோய்களையும் குணப்படுத்த வழி கிடைக்கலாம்.

சூரிய ஒளியில் ஸ்கூட்டர் ஓடுமே?

சூரிய ஒளியையே எரி பொருளாகக் கொண்டு ஸ்கூட்டரை ஓட்ட முடிந்தால் எப்படியிருக்கும்? இது உடனடியாக நடக்கப் போவதில்லை என்றாலும் இதற்கான சாத்தியக் கூறு உண்டு என்கிறார் லண்டனில் உள்ள சௌத் பேங்க் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பாப்லோ சேப்பல். சூரிய ஒளி கொண்டு சார்ஜ் செய்யப்பட்ட பன்னிரண்டு வோல்ட் பேட்டரியின் மூலம் ஸ்கூட்டரை ஓட்டலாம் என்கிறார் இவர்.

— ஜி.எஸ்.எஸ்.

85

'**ந**ம:' என்று சொல்வதன் மகிமை என்னவென்று பார்த்தோம். இந்த மகிமையைத்தான் ஈசாவாச்ய உபநிஷத் சொல்கிறது.

விஷ்ணு சஹஸ்ரநாம பாஷ்யத்தில் என்ன சொல்லியிருக்கிறது...? 'உபநிஷத் அளவுக்குச் சென்று புத்தியைப் போட்டுக் குழப்பிக் கொள்ள வேண்டாம். சர்வ வியாபியாக பகவான் எங்கும் இருக்கிறான். ஒன்று நீங்கள் பண்ணுங்கள் – ஸ்ரீ விஷ்ணுவே நம:, விஷ்ணுவின் பொருட்டு, எங்கும் பரவியிருக்கும்படியான அவன் பொருட்டு நம: என்று சொல்லுங்கள். புஷ்பத்தை எடுத்து அர்ச்சனை பண்ண வேண்டும் என்பதுகூட இல்லை. விஷ்ணவே நம: என்று சொன்னாலே போதுமே... எங்கும் இருக்கும்படியானவனுக்கு நம: என்று சொல்ல வைக்கிறது விஷ்ணு சஹஸ்ர நாமம்' என்று சொல்கிறது அந்த பாஷ்யம். ஈசாவாச்ய உபநிஷத் பதினெட்டு மந்திரங்களையும் பதினெட்டு மந்திரங்களின் சாரமான விஷயத்தையும் விவரிக்க, பதினெட்டு அத்தியாயங்கள் பேச வேண்டியிருக்கிறது. எழுநூறு சுலோகங்கள் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. ஆனால் பீஷ்மாசார்யார் அதை ஒரே ஒரு பதத்திலே சொல்லி விட்டார்:

விஷ்ணு!

விஷ்ணுவை விவரித்தால் பகவத்கீதை மொத்தமும் கிடைக்கும். பகவத்கீதையை விவரித்தால் ஈசாவாச்ய உபநிஷத் மட்டுமில்லை... அத்தனை உபநிஷத்களும் கீதையில் அடக்கம்.

அதனால் விஷ்ணவே நம: என்று சொல்லி, பலனை சுலபமாக அடைந்து விடலாமே...

அதனால்தான், அணைகிற நெருப்பைப் போலிருக்கும் பீஷ்மரைக் காண்பித்து பரமாத்மா அவரிடம் போகச் சொல்கிறார் தர்ம புத்திரனை... 'அவரிடத்திலே போய் தர்மத்தைக் கேளு, கேளு...' என்று அனுப்பி வைக்கிறார் பரமாத்மா.


அப்போது ஆசார்யர்களுக்குச் சந்தேகம் வருகிறது... பகவானே இருக்கிறபோது வேறொருத்தரிடம் ஏன் போய்க் கேட்கச் சொல்கிறான்?

உலகத்திலே பகவான் இருந்தால் மட்டுமே பிரயோஜனமில்லை. பகவானை விளங்கச் செய்யக்கூடிய ஆசார்ய புருஷர்கள், மகான்கள் இருக்க வேண்டும். அவர்கள்தான் அவனைக் காட்டித் தரக் கூடியவர்கள். மேலும், 'என் திருவடியே பற்று; என் திருவடியே பற்று' என்று அவனே சொல்லிக் கொள்வதானால் கேட்க நன்றாகயிராது.

யாராவது வந்தால், "என்னை சேவியுங்கள்; நீங்கள் வருவீர்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தேன்... முதலில் எட்டு தடவை நமஸ்காரம் பண்ணுங்கள்" என்று நாம் பேசினோமானால் 'என்ன இது...? இவர் நமஸ்காரத்தைக் கேட்டுக் கேட்டு வாங்கிக் கொள்கிறாரே' என்று தப்பாக எண்ணத்

குறையொன்றுமில்லை




முக்கூர்
லக்ஷ்மிநரசிம்மாச்சாரியார்

தோன்றாதோ...

அதனால்தான், அவன் திருவடி பற்ற வேண்டும் என்பது மகான்கள் மூலமாக நமக்குச் சொல்லப்படுகிறது.

ஆண்டாள் அப்படிச் சொல்லித் தருகிறாள்: 'நாராயணனே நமக்கே பறை தருவான்...' 'அதோ இருக்கிறானே, அவன் தாளைப் பற்று,' என்று மகான்கள் சொல்லித் தருகிறார்கள்.

அதனால்தான் பகவானும் பீஷ்மாசாரியரைச் சுட்டிக் காட்டினான்.

'விஷ்ணவே நம:' என்றால் உபநிஷத் சாரம் அதிலே அடங்கியிருக்கிறது. அதை சுலபமாகச் சொல்லக்கூடிய ஏழை, எளியவர், பாமரர் அனைவருக்கும் அந்த திவ்யமான அனுக்கிரஹம் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே, எங்கும் 'பரவியிருக்கிற பரமாத்மா சஹஸ்ர நாமத்திலே, அந்த இரண்டாவது திருநாமத்திலே பரிபூரணமாக நித்யவாஸம் பண்ணுகிறான்.

கோயிலில் எப்படி விக்ரஹத்திலே இருக்கிறானோ, அவதார காலத்திலே எப்படி ரூபத்தோடு வந்தானோ, அந்தர்யாமியாக ஹ்ருதயத்துக்குள்ளே இருக்கிறானோ, அந்த மாதிரி இந்த விஷ்ணு சப்தத்தினுள்ளே எப்பொழுதும் இருந்து கொண்டேயிருக்கிறான் என்பதை நாம் உணர வேண்டும்.

கர்ம காண்டமாயிருந்தாலும் சரி, பிரும்ம காண்டம், ஞான காண்டம் என்று சொல்லும்படியான உபநிஷத் பாகமாயிருந்தாலும் சரி... இரண்டிலேயும் அவனுடைய பெருமை விசேஷமாகக் காட்டித் தரப்படுகிறது.

அவன் விசேஷமாக ஆச்ரயிக்கத்தக்கவன். அவன் திருவடியை கெட்டியாகப் பிடித்துக் கொண்டோமேயானால், சர்வ இடுக்கண்களும் – நம்மை நோக்கி வரக் கூடிய அனைத்துத் துன்பங்களும் பொடிப் பொடியாகி விடும். துர்தேவதைகளெல்லாம் ஓடி விடும்! 'விஷ்ணு' என்று சொன்னாலே, துர்தேவதைகளெல்லாம் அகன்று, சாத்விக தேவதைகளெல்லாம் அருகிலே ஓடி வரும்.

விஷ்ணு என்ற நாமத்தைக் கேட்டால் அசுரர்களெல்லாம் ஓடியே போய் விடுகிறார்கள். தேவதைகளெல்லாம் வணங்கி நிற்கிறார்களாம்! விரோதிகளெல்லாம் இருக்கும் இடம் தெரியாமல் ஓடி விடுகிறார்களாம். நம்மிடத்திலே இருக்கும்படியான அந்தரங்கச் சத்ருக்களான இந்த்ரியங்களெல்லாம் கட்டுக் கோப்புக்குள்ளே அடங்கி நிற்கும்!

அவனுக்கான யக்ஞத்தைப் பண்ணும் போதுகூட... ஹே விஷ்ணு, இந்த யக்ஞம் நடக்க வேண்டுமானால் நீ துஷ்ட பிரகிருதிகளையெல்லாம் ஓட்ட வேண்டும். ஏனென்றால் யக்ஞம் நடக்கிறது என்றால் சாத்விகர்களைவிட துஷ்டர்கள்தான் அதிகமாக வருவார்களாம்! – சாஸ்திரமே இப்படிச் சொல்கிறது! துஷ்டர்களான தேவதைகள் வருவதோடு இல்லாமல்; இதிலே எங்கேயாவது தப்பு நடக்கிறதா..? என்று பார்த்துக் கொண்டேயிருக்கும்... தப்பு நடந்தால், ஒரு குதி குதிக்குமாம்! யக்ஞத்தை ரொம்ப ஜாக்கிரதையாகப் பண்ண வேண்டும். அந்த துர்தேவதைகளையெல்லாம் ஓட அடிக்க வேண்டும்.

'விஷ்ணு' என்று சொன்னாலே அந்த துஷ்ட தேவதைகளெல்லாம் இருக்கிற இடம் தெரியாமல் ஓடிப் போய் விடுமாம்.

ஹோம குண்டத்தைச் சுற்றி தர்பங்கள் போடப்படும். முப்பத்து முக்கோடி தேவர்களும் அதிலே வந்து உட்காருகிறார்கள்..

ஹோமம் ஆரம்பிக்கிறபோது அதிதியைப் பிரார்த்தித்து, சரஸ்வதியைப் பிரார்த்தித்து, தேவதைகளைப் பிரார்த்தித்து, 'இந்த யக்ஞத்தை ஆரம்பிக்கிறேன். நல்லமுறையிலே இதை நடத்திக் கொடுக்க வேண்டும்' என்று பிரார்த்திக்க வேண்டும்.

சுற்றிலும் போடப்பட்ட தர்பம் இருக்கிறதே... முப்பத்து முக்கோடி தேவதைகளுக்கும் அது ஆசனமாக இருக்கிறது. அவர்களெல்லாம் வந்து உட்காருகிறார்கள். இந்த அக்னி பிரகாசிக்

அருள்வாக்கு



உள்ளத்தில் எவ்வளவுக்கெவ்வளவு அமைதி நிலவுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு இன்பம் மேலிடுகிறதென்பது பிரத்தியட்ச அநுபவம். மன அமைதியின் உயர் நிலையே மேலான புருஷார்த்தமாகும். அமைதி குறையக் குறையத் துன்பமும் வளரும். மனிதர்கள் தங்கள் துன்பங்கள் நீங்குவதற்கு முயற்சி செய்யும் பொழுது, பிறரைத் துன்புறுத்தவும் நேருகிறது. இவ்விதம் ஒவ்வொருவரும் சந்தர்ப்பங்களை ஒட்டி மற்றவர்களைத் துன்புறுத்த முயலும் பொழுது சமுதாயத்தில் குழப்பம் ஏற்படுகிறது. அவ்விதம் குழப்பம்

கிறது.

அடுத்து, தர்பங்களுக்கு வெளியிலே, நம் கண்ணுக்குப் புலப்படாமல், தேவ கணங்களுக்குப் பிறகு பூத கணங்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். அதைத் தாண்டித்தான் மனுஷ்ய கணமான நாம் உட்கார்ந்திருக்கிறோம்.

இப்படி வரிசையாக, மனுஷ்ய கணம், பூத கணம், தேவ கணம், அக்னி.. ஹோமம் பண்ணிக் கொண்டேயிருக்கிறபோது க்ஷீரான்னம் எடுத்துப் பண்ணுகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள்.. அதை தேவதைகளெல்லாம் ஸ்வீகரிக்கிறார்கள். இந்த பூத கணங்களெல்லாம் அப்படியே பார்த்துக் கொண்டிருக்கின்றன.

அக்னி குண்டத்திலே ஹோமம் பண்ணுகிறாரே, அவர் கையைக் கொஞ்சம் தடுத்து விடுகிறதாம் பூத கணம்! அந்த க்ஷீரான்னம் அக்னியிலே விழாமல் அந்த தர்பத்தைத் தாண்டி வெளியிலே விழுந்து விடும்! வெளியே விழுந்த உடனே அந்த துஷ்ட கணங்கள் அதை எடுத்துக் கொண்டு ஓடியே போய்விடும்! அதற்கப்புறம் வராது! இப்படி பூதகணங்களுக்காக விட்டுக் கொடுத்தால், அப்புறம் அழகாக ஹோமம் நடக்கும்.

எதிரிலே உட்கார்ந்திருந்தவர் என்ன பண்ணினார்.. வெளியே விழுந்த க்ஷீரான்னத்தை எடுத்து அக்னியிலே போட்டார்! போட்டவுடனே என்ன ஆயிற்று..? யக்ஞமே கெட்டுப் போய் விட்டது! அப்படிக் கெட்டுப் போனால் மறுபடியும் ஆரம்பித்துத்தான் யக்ஞம் பண்ண வேண்டும்.

ஆகையினாலே பூத கணங்களுக்காகக் கொஞ்சம் விட்டுக் கொடுக்கப்படுகிறது என்கிற ஞானத்தோடு ஹோமம் பண்ணுகிறவரும் பண்ண வேண்டும்; சுற்றியிருக்கிறவர்களும் அதை அனுசரிக்க வேண்டும்.

இன்றைக்கும் அரணிக் கட்டையைக் கடைந்து அக்னி உண்டாக்கி யக்ஞம் செய்யப்படுகிறது. முன்காலத்திலே மந்திர சப்தத்தினாலேயே அக்னி உண்டாக்கினார்கள். இன்றைக்கு அது நடக்காது. அதனால் அடுத்த பட்சமாக அரணி கடைதல்! அப்படிக் கடைந்து சீக்கிரமாக அக்னி உற்பத்தியானால் பகவத் அனுக்கிரஹமும் இருக்கிறது என்று அர்த்தம்! மங்களமான எண்ணத்தோடு, அக்னி சீக்கிரம் உண்டாக வேண்டும் என்று பிரார்த்தித்துக் கடைய, அக்னி தோன்றி விட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள்.. ஒரு பத்து லட்ச ரூபாய் கையிலே கிடைத்த மாதிரி மந்திரத்தை இன்னும் பலக்கச் சொல்ல வேண்டும். வந்த அக்னியை ரொம்ப ஜாக்கிரதையாக எடுத்து, அக்னி குண்டத்திலே பிரதிஷ்டை பண்ணி ஹோமாதிகளெல்லாம் சீக்கிரம் பண்ண வேண்டும்.

ஸ்வாமி தேசிகன் கிருஷ்ணாவதாரத்தைச் சொல்கிறபோது, தேவகி – வசுதேவன் என்கிற அரணிக் கட்டையிலிருந்து கிருஷ்ணனாகிய அக்னி உண்டானான் என்கிறார்!

(தொடரும்)

நேரும் பொழுதெல்லாம் அதை அடக்கி அமைதியையும் சமாதானத்தையும் நிலை நிறுத்த அரசாங்க அதிகாரிகள் சட்டத்தின் மூலம் நடவடிக்கைகள் எடுக்கிறார்கள். ஆயினும் உண்மையான பரிகாரம் யாதெனில், மக்கள் எல்லோரும் புலன்களைப் பறிக்கும் வெளி விஷயங்களிலிருந்து தங்கள் மனசைத் திருப்பி அதைத் தங்கள் வசமாக்கி அமைதியாக இருக்க எப்பொழுது முற்படுகிறார்களோ, அப்பொழுதுதான் துன்பம் அவர்களை அணுகாமல் இருக்கும். அதோடு அவர்களால் பிறருக்குத் துன்பம் விளையாமலும் இருக்கும். நல்ல கல்வியைப் பயிலும் பயனாகத்தான் இத்தகைய வெளி அமைதியும் உள் அமைதியும் நம் நாட்டிலே தொன்று தொட்டு சித்தித்து வந்திருக்கின்றன.

நம் பாரத நாட்டின் முற்காலக் கல்வியின் முதல் நோக்கம் மன அமைதியை அடைவதேயாகும். புதிது புதிதாகத் தோன்றும் பௌதிக விஞ்ஞான ஆராய்ச்சித் துறைகளில் மேன்மேலும் கல்வியைப் பெருக்குவதில் தவறில்லை. ஆனால் அதன் பயனைத் தர்ம மார்க்கத்தில் மட்டுமே உதவுமாறு செய்தால்தான் நாடும் மக்களும் உயர்வான அமைதி நிலையை அடைய முடியும். இவ்வாறில்லாமல் புலன்கள் போன வழியே அவைகளைப் பிரயோஜனப் படுத்திக் கொண்டிருந்தால் எத்தனை படிப்பும் விஞ்ஞான அறிவும் இருந்தாலும் கெட்ட எண்ணங்களும் துராசைகளுந்தான் வளரும். இன்னல்களும் துன்பங்களும் பெருகும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

ஆர். வெங்கடேஷ்

காற்று

பேருந்தின் கண்ணாடி ஜன்னல் மீண்டும் கை முட்டியை இடித்தபோது, ஆனந்திக்குக் கோபம் எழுந்தது. சட்டெனத் திரும்பிப் பார்த்தாள். அங்கிருந்தவன் அரைக்கண்ணை மூடிக் கொண்டு வாய் திறந்தபடி இருந்தான். ஆனந்திக்கு மின்னலென ஆத்திரம் கொப்பளித்தது.

விடிகாலையில் மனதைக் கெடுத்துக் கொள்ள வேண்டாமென தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அமைதி போற்றினாள் ஆனந்தி. இன்னும் கழுத்தோர வியர்வை துன்புறுத்தியது. அம்மா தொல்லை தாங்காமல் வென்னீரில் குளித்தது, முதுகில் வெப்பம். பாண்டிச்சேரி என்றால் தன்னிஷ்டம். தண்ணீர்தான்.

ஒவ்வொரு திங்கள் காலையும் நடக்கும் கூத்துதான் இன்றும். ராத்திரி என்ன சீக்கிரம் படுத்துக் கொண்டாலும், விடிகாலை விழிப்பு வரமாட்டேன் என்கிறது. இன்றும் அப்பா எழுப்பிவிட்டார். மணி நாலேகால். ஐந்தரை பஸ் பிடிக்க வேண்டும். பை பாஸ் ரைடர். எட்டேகாலுக்குப் பாண்டிச்சேரி போய்விடலாம். தவறவிட்டால் எல்லாம் சர்வ நாசம். அப்புறம் அலுவலகம் லேட், முறைப்பு, குத்தல் இத்யாதிகள்.

இப்போது மனதை அலைக்கழித்தது, பெருகிய வியர்வை. துணியோடு நடு முதுகு ஒட்டிக் கொண்டது. நல்ல காற்று வந்தால் தேவலை. அதற்குத் தான் பேருந்தின் ஓர இருக்கைக்கு அல்லாடுவது. இன்று அதிர்ஷ்டம். சைதாப்பேட்டையில் வண்டி ஏறிய போது, ஒரு ஓர சீட் தனக்கெனவே காத்திருந்தது போல், வாவென்றழைத்தது. கைப்பையை மேலே போட்டு விட்டு, காற்றை இருகரம் நீட்டி வரவேற்றாள்.

"அடுத்த வாரம் வெள்ளிக் கிழமையே வந்துடறியாம்மா..."

வேட்டியை மடித்துக் கட்டிய, இடுங்கின கண் அப்பா.

"சனிக் கிழமை ஆகும்பா. பிராஞ்சிலே வேலை இருக்கு."

"சொல்லிட்டு வாயேன்மா."

"முடியாதுப்பா."

"சரி போன் பண்றியா?"

"பண்றேன்."

பதில் காற்றில் தொங்க, வண்டி சப்த நெருக்கடிகளோடு புறப்பட்டது.

அவசரமாக பஸ் பிடித்ததில், பரபரப்பு. வியர்வை.

கண்ணாடி இழு ஜன்னலை கொஞ்சம் பின்னுக்குத் தள்ளினாள். வண்டி வேகம் பிடிக்கவில்லை. காற்று மெதுவாகத்தான் இழைந்தது. இன்னும் பக்கத்து இருக்கைக்கு யாரும் வரவில்லை. காலை அகலமாக்கிக் கொண்டாள். கிண்டியில் ஒரு கூட்டம் ஏறும். அப்புறம் தாம்பரத்தில் முட்டித் தள்ளும்.

திண்டிவனத்தில் இறங்கும் இரண்டு மூன்று முகங்கள் ஞாபகம் வந்தன. பாண்டிச்சேரிக்குப் போகும் ரத்னாவும் அமலோற்பவமும் கூட ஞாபகம் வந்தார்கள். முன்பின் பேருந்துகளில் வருவார்கள். சில சமயங்களில் தற்செயலாய் சேர்ந்து போகும் வாய்ப்பு வரலாம்.

கிண்டி நெருங்கியது. பட்டெனத் திரும்பவும் இடது கை முட்டி அடி வாங்கியது. இழு ஜன்னலை முன்னால் தள்ளினான் பின்னாடி இருப்பவன். நாசமாய்ப் போக! வண்டி நிற்பதற்குள் கூட்டம் அவசரம் கொண்டது. அமலோற்பவம் தென்பட்டாள். பக்கத்து இருக்கையில் கை வைத்துக் கொண்டாள். அவசரமாய் முண்டியடித்து இருக்கையருகே வந்தவர்களுக்கு 'ஆள் வருது' என்றாள். வெறுப்பை உமிழும் முறைப்பு.

அமலோற்பவம் ஆனந்தியைக் கண்டு கொண்டாள். உதடு நிறையப் புன்னகை. நெற்றி, கழுத்தெல்லாம் பவுடர் திட்டுக்கள். வெளியே அவள் கணவர் நின்றிருந்தார்.

"எப்படி இருக்கப்பா?"

கையைப் பிடித்தபடி அமலோற்பவம்

பக்கத்தில் அமர்ந்து கொண்டாள். உடனே வெளியே நின்ற கணவனோடு, கடைசி நேரச் செய்திகளை விரைவாகப் பேசிவிட்டு, இன்னும் வார்த்தைகள் மிச்சமிருக்கும் போது, வண்டி புறப்பட்டது.

அமைதியானாள் அமலோற்பவம். ஆனந்தியும் பேசவில்லை. வெளியே பார்த்தாள். வண்டி மெல்ல வேகம் பிடித்துக் கொண்டிருந்தது. ஒரு பூ மலருவது போல் காலை புறப்பட்டுக் கொண்டிருந்தது. இருளும் ஒளியும் கட்டடங்களின் மேல் சாம்பல் தீற்றிக் கொண்டிருந்தன. சாலையோரம் ஓடும் கோழிகள்.

பாண்டிச்சேரி சாலைகள் இதைவிட அழகு. அதை அவள் நகரமாகவே எண்ணியதில்லை. என்னதான் நகர நாகரிகம் தென்பட்டாலும், உள்ளே ஒரு கிராமம் ஒட்டிக் கொண்டிருப்பதாய்த் தோன்றும். கிராமமாய்த் தொடங்கும் நாள் மெல்ல நகரமணம் கொள்ளும் ஆச்சரியம் பாண்டிச்சேரிக்குத் தான் உண்டு.

"அந்த ஜன்னலை இன்னும் நல்லா தெறயேன்ப்பா. ஒரே புழுக்கமா இருக்குது" என்றாள் அமலோற்பவம்.

"தெறந்துதான் வெச்சேன்ப்பா. பின்னாடி தள்ளி விடுறாங்க."

"காத்தே வரல. அப்புறம் கண்ணாடி தெறக்காம என்ன பண்ணுவாங்க. தெற. நான் பாக்கறேன்."


ஆனந்தி கண்ணாடி ஜன்னலை அகலமாக்கினாள். அமலோற்பவம் பின்னாடி பார்த்தாள். பின் இருக்கைக்காரன் தலையைத் தொங்கப்போட்டபடி தூக்கம் பயின்றான்.

அமலோற்பவம் தலை திருப்பி புன்னகைத்த மறுகணம், ஆனந்தியின் முட்டி பளீரென அடி வாங்கியது. துடித்துப் போனாள். சட்டெனக் கண்ணீர். வலி.

"அறிவிருக்கா உனக்கு. ஜன்னல்ல கைய வெச்சிருக்கிறது தெரியல." ஆனந்தி பின்னாடி திரும்பிக் கத்தினாள்.

"எங்களுக்குக் காத்து தேவல்லியா?"

அலட்சியமாய் பின் இருக்கைக்காரன் கேட்க, ஆனந்திக்கு வலி இன்னும் திரண்டது.





''என் மனைவி எப்பவுமே தூக்கி எறிஞ்சுதான் பேசுவா என்னை. இன்னிக்கு வழக்கத்தைவிட கொஞ்சம் வேகமா தூக்கி எறிஞ்சுட்டா!

– லலிதா செல்லப்பா

"அதுக்கு ஜன்னலை மெதுவா தெறக்கணும். இப்படி பட்டுன்னா தெறப்பாங்க."

"உன்ன எவன் அங்க கைய வெச்சிக்க சொன்னான்?"

"என்னா? ரொம்ப ராங்கா பேசற. ஜன்னலாண்ட கைய வெக்காம வேற எங்க வெப்பாங்க?" அமலோற்பவம் எழுந்து கொண்டாள்.

"சரிதான் போடி.. என்ன பண்ணுவ! பொம்பளையாச்சேன்னு பாக்கறேன். அப்போ புடிச்சி அந்த பொம்பள ஜன்னல பின்னால தள்ளிகினே இருந்துச்சு தெரியுமா!"

"காத்து வரலன்னா ஜன்னல தெறக்கத்தான் செய்வாங்க."– ஆனந்தி.

"எங்களுக்குக் காத்து அடைபடுதே. அதுக்கு என்னா செய்ய?"

"பொம்பளையாச்சேன்னு பாக்கறேன்னியே. என்னா செய்வ?"

அமலோற்பவம் அவனை நெருங்கும் அபாயம் அப்போதுதான் ஆனந்திக்கு உறைத்தது.

"அடிச்சிருவியா. கிழிச்சிடுவியா. போடிங்கற மரியாதையில்லாம."

பின் இருக்கைக்குப் பக்கத்தில் இருந்தவனுக்கும் அமலோற்பவத்தின் அபாயம் புரிந்திருக்க வேண்டும். சட்டென அவன் இருக்கையைவிட்டு எழுந்தபடி,

"ஏதோ தெரியாம சொல்லிட்டான் மேடம்."

"நீ என்னா அவனுக்கு வக்காலத்து?"

கலவர உணர்வு அங்கே தொற்றிக் கொள்ள, அக்கம்பக்கத்து இருக்கைக்காரர்கள் எழுந்து கொண்டார்கள். எல்லார் முகத்திலும் துளி பயம். ஆவல். ஆனந்திக்கு விபரீதம் விளங்கியது.

"அமலோற்பவம், வேண்டாம்."

"நீ சும்மாயிருப்பா. என்னடா பண்ணுவ?"

பின் இருக்கையினுள் அமலோற்பவம் நுழைய, அவனுக்கு அநியாயத்துக்கு வியர்ப்பது தெரிந்தது.

"என்ன சொல்லிட்டாங்கன்னு அடிக்க வர?"

"வேற என்னடா சொல்லணும்?"

"அங்க என்னம்மா தகராறு?"

பரபரப்பாய் நடத்துநர் நுழைய, ஆனந்தி,

"இந்தாளு சும்மா தகராறு பண்றாரு சார்" என்றாள்.

''காதல் கடிதம் அனுப்பியவர் எழுத்தாளர்னு எப்படி கண்டு பிடிச்சே?''

''பதில் எழுத, போதிய தபால் தலையுடன் கூடிய சுய மூகவரி எழுதிய கவர் வைச்சு அனுப்பி இருக்காரே!''

– லலிதா செல்லப்பா



"தகராறா? அசிங்கமா பேசறான். வாடி போடிங்கறான். பொம்பளையாச்சேன்னு பாக்கறேன்றான். அதான் என்ன பண்றான்னு பாக்கறேன்."

அமலோற்பவம் அழுத்தமாய்ச் சொல்ல, நடத்துனர் அரண்டார்.

"என்னய்யா இதெல்லாம்?"

"நான் ஒண்ணும் சொல்லல சார்..."

"ஆய்.. பொய் சொன்ன மவனே பொளந்துடுவேன். என்ன பார்த்து போடின்னு சொல்லல..."

அமலோற்பவம் துள்ளிக் கொண்டு பாய, ஆனந்தி, "வண்டியேறனதுலேர்ந்து இந்தாளு ஜன்னல தள்ளி தள்ளி உடறாரு சார். கையில நல்ல அடி. கேட்டா மோசமா பேசறாரு."

"சரி, நீ வெளிய வா. எதுவரைக்கு டிக்கட் வாங்கியிருக்க?" என்றார் நடத்துனர்.

"கீழ எறங்குய்யா."

வண்டி குரோம்பேட்டை போலீஸ் ஸ்டேஷன் எதிரே நின்றிருந்தது.

"சார். நான் அவசரமா திண்டிவனம் போணும் சார்..."

"எறங்குய்யா மொதல்ல. அப்புறம் பேசுவோம்."

அதற்குள் ஓட்டுநர் யாரையோ கையசைத்து அழைக்க,பின் இருக்கைக்காரன் மிரண்டான்.

"சாரி சார்...நான் வேணும்னு பண்ணலே சார்."

"நீ வேணும்னு பண்ணலே. ஆனா பண்ணினேயில்ல. மொதல்ல கீழே எறங்கு."

"எங்க பெரியப்பா சாவுக்கு போறேன் சார். அவசரமா போணும் சார்."

"பேசாதடா. கீழே எறங்குடா" அமலோற்பவம் இருக்கையிலிருந்தபடி கத்தினாள்.

யாரும் எதிர்பாராத தருணத்தில் அவன் சட்டெனப் பின் வாங்கி, அமலோற்பவம் ஆனந்தி இடையே நின்று,

"ரொம்ப சாரி மேடம். நான் அவசரமா போகணும் மேடம். கையில காசு இல்ல. எறக்கி விட்டுட்டாங்கன்னா, டிக்கட் வாங்கக்கூட காசு இல்லங்க. ப்ளீஸ். அவர எறக்கி விட வேணான்னு சொல்லுங்க. நான் வேணா உங்க கால்ல விழுந்து மன்னிப்பு கேக்கறேன் மேடம்..."

"என்னப்பா... யாரு..."

கீழே மப்டியில் போலீஸ். அவசரமாய்



"பைனான்ஸ் கம்பெனியில டிபாசிட் பண்ணச் சொல்லிப் பையன்கிட்ட பணத்தைக் கொடுத்து அனுப்பினீங்களே? கட்டிட்டானா?"

"இல்லே, அதுக்கு பதிலா இவனே எடுத்துக்கிட்டு எங்கேயோ ஓடிட்டான்!"

– பர்வதவர்த்தினி

நடத்துநர் நடந்தது சொல்ல,

"சரி, எறக்கிவுடு... எறக்கிவுடு." என்றது அசுவாரசியமாய் போலீஸ்.

கையாலாகாத்தனம் வியாபிக்க, பின் இருக்கைக்காரன் கீழே இறக்கப்பட்டான். போலீஸிடம் பரிதாபமாய் அவன் கெஞ்சும் போதே பேருந்து புறப்பட்டது. ஒன்றிரண்டு பேர் கண்ணாடியில் தலையை வெளியே விட்டு, அவனைப் பார்த்தார்கள். கொஞ்சம் பேச்சு சப்தம். லைட் அணைக்கப்பட்ட போது அமைதி.

தாம்பரம் தாண்டியபோது காற்று பிடித்துக் கொள்ளத் தொடங்கியது. வண்டியினுள் ஏறிய புதிய கூட்டம் இடம் கிடைக்காமல் நின்றது. பின்னால் ஒரு குழந்தை அழுவது கேட்டது.

ஒரு அழகிய காலைப் பொழுது தன்னால் வீணானதாக ஆனந்திக்குத் தோன்றியது. பின் இருக்கைக்காரன் கெஞ்சல் காதில் ஒலிக்க, முகம் நினைவில் துன்புறுத்தியது. பேருந்து பைபாஸ் வழியாக முன்னேறிய போது, ஆனந்திக்குக் குளிரத் தொடங்கியது. லேசாகப் பற்கள் உதற, மார்பில் குளுமை பரவியபோது, அமலோற்பவம்,

"பயங்கரமா குளிருதுப்பா. அந்த ஜன்னலைக் கொஞ்சம் மூடேன்" என்றாள்.



உயிரோடு உயிராக

ஹீரோவுக்கு மூளைக்கட்டி. சில மாதங்கள்தான் ஆயுள். எனவே நோ வண்ணக் கனவுகள். இது புரியாமல் அந்த ரிஷ்ய சிருங்கரிடம் பேசிக் காட்டுவதாகத் தோழிகளிடம் பெட் கட்டுகிறாள் நாயகி. தனக்கும் மூளைக்கட்டி என்று பொய் சொல்கிறாள். "தன்னைப் போலவே இவளும் இன்றோ நாளையோ கேஸ்" என்று அவளிடம் உருகி, நெருங்குகிறான் ஹீரோ. இதற்குள் அவனை நிஜமாகவே லவ்வும் நாயகி, தான் ஆரோக்கியமானவள்தான் என்பதை வெளிப்படுத்தாமலே அவனை மணந்து கொள்கிறாள்.

இதுவரை பலமாகவே விழுகிறது கதை முடிச்சு. ஆனால் அதை அவிழ்ப்பதில்தான் திணறல்.

தொடக்கத்திலிருந்தே ('பவித்ரா' போலவே) ஒரு பரிதாபம் வேறு ஏற்பட்டு விட, அஜீத் பதிகிறார். சரளமான நடிப்பில் முதல் வரிசை ஹீரோவாக சுலபமாக உயர்கிறார்.

பெரிய திரைக்குப் புதுமுகமான ரிச்சாவிடம் திறமை தெரிகிறது. ஆனால் ஹேர்ஸ்டைலா காஸ்ட்யூமா, எது காரணம் தெரியவில்லை, முகத்தில் கொஞ்சம் முதுமை. அவருக்கு டப்பிங் கொடுத்தவர் வேறு, படு செயற்கை.

நிஜத்தில் நாயகியின் தாயார்தான் இயக்குனர். குறைவான உடைகள், குறைவில்லாத முத்தங்கள் என்று மகளுக்கு ஸ்கோப் கொடுத்துள்ள சுஷ்மாவின் தொழில் பக்தி சிலிர்ப்பூட்டுகிறது!

உணர்ச்சிகரமான பாத்திரங்கள் எனும் நீச்சல்குளம். நாயகனின் பெற்றோராக சரத்பாபு, ஸ்ரீவித்யா ஆகிய மீன்கள். கற்றுக் கொடுக்கவா வேண்டும்? ஃப்ரீஸ்டைலில் மெடல் பெறுகிறார்கள்.

பாடல் வரிகளில் வைரமுத்து கவர்கிறார். பின்னணி இசையின் சிறப்பு என்பது, இசைக்கப்படும்போது மட்டுமல்ல; தேவைப்படும் நேரத்தில் மௌனம் காப்பதும்தான். அடிக்கடி பயமுறுத்துகிறார் வித்யாசாகர்.

மலைகளை இணைக்கும் கயிற்றின் மீது நடக்கும் கின்னஸ்காரர் போல அத்தனை காட்சிகளும் மையக் கதையைச் சுற்றியே அமைந்திருப்பது ஆரோக்கியமான போக்கு (காமெடி, சண்டைக் காட்சி என்ற எந்த அனாவசியமும் இல்லை). கூடவே கொஞ்சம் ஆயாசமும் தோன்றுகிறது. ஆயாசத்துக்குக் காரணம் அனாவசியங்களைத் தவிர்த்தது அல்ல; கத்திரிக்கோல் போடாமல் காட்சிகளை நீளமாக ஓடவிட்டிருப்பதும், அளவுக்கு அதிகமான க்ளோசப்களும்தான்.

"எப்படியும் படம் முடியும்போது கதாநாயகன் அவுட். ஒருவேளை கூடவே கதாநாயகியுமோ?" என்ற பொதுவான எதிர்பார்ப்பைத் தடுப்பது போன்ற சற்றே பாஸிடிவான ஒரு முடிவு, 'அட' என்ற உணர்வை எழுப்புகிறது.

— ஜி.

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 250/-; Overseas : Rs. 1600/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 125/-; Overseas : Rs. 800/- (Air Mail)

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392/ 98 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka